

கல்கி

KALKI 4-5-80 90 காசு



மின்னலடிக்கும் ஸூப்பர் ரின் வெண்மை...



...இதர, டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை.

பார்வைக்கு தப்பவே தப்பாத வெண்மை உங்கள் துணிகளுக்கு—வேளை தவறாத ஸூப்பர் ரின் சலவையின் வெண்மையே தனி.
இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சுவது ஸூப்பர் ரின் வெண்மை.
காரணம், மிகுந்த வெளுக்கும் சக்தி அடங்கியது ஸூப்பர் ரின்.

நீங்களே கண்டுகொள்வீர்கள்

இதை வேறுவித வெளுத்தது டிட்டர்ஜெண்ட பார்



இதை வெளுத்தது ஸூப்பர் ரின்



அதிக வெளுப்பூட்டும் சக்தி படைத்தது ஸூப்பர் ரின்.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

லின்டாஸ்-RIN.35-2012 TM

உங்கள் பிரதிக்குப் பதிவு செய்து கொண்டு விட்டீர்களா?

320 பக்கங்களுடன்

வழுவழுப்பான வார்னிஷ் அட்டையுடன் வெளிவருகிறது

கல்கி விடுமுறை சிறப்பு மலர்

மலரின் விலை ரூ 5/- (பதிவுத் தபால் செலவு ரூ 3/- தனி)

இரு குறுநாவல்கள்; ஏராளமான சிறுகதைகள்; கவிதைகள்; புகைப்படங்கள், சினிமா செய்திகள்; பாப்பாமலர்; நகைச் சுவை அம்சங்கள்; பயணக் கட்டுரைகள்; பொழுது போக்கு விஷயங்கள் முதலியவற்றைத் தாங்கி ஒரு மினி தீபாவளி மலராக உங்கள் கரங்களை அலங்கரிக்கும்.


நினைவிருக்கட்டும்: வழக்கமான கல்கி இதழ் வேறு; இது வேறு.

ஏமாற்றத்தைத் தவிர்க்க உடனே கல்கி ஏஜெண்டிடம் பதிவு செய்து கொள்ளுங்கள். அல்லது கல்கி காரியாலயத்துக்கு எழுதுங்கள்.


மே 4ம் தேதி இதழுடன் கல்கி ஏஜெண்டுகளுக்கு அனுப்பப்படும்.




Kalki Shopping Page



பாரதீய ஜனதா கட்சிக்குத் 'தாமரை' சின்னம் வழங்கப்பட்டிருக்கிறது!
சேற்றில் செந்தாமரை
மோசடி அரசியல்





தனித்துப் போட்டியிடும் ஜம்பம்
உங்கள் வோட்டு ஜனதாவுக்கே!
தமிழக ஜனதா
மக்கள்

1980 மே 4
ரௌத்திரி சித்திரை 22
மலர்: 38 இதழ்: 40



கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

ஆரோக்கியமான ஆரம்பங்கள்!

வாழ்த்துகிறோம் பிரதமரை!

இரண்டு அம்சங்களில் ஆரோக்கியமான தொடக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

ஒன்று, இந்தியா பாகிஸ்தான் நட்புறவைப் பலப்படுத்த பிரதமர் மேற்கொண்டுள்ள முயற்சிகள், மற்றொன்று திட்டக் கமிஷனின் தொடக்கக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள்.

ஆப்கானிஸ்தானத்தில் ருஷ்யா நுழைந்தது, இன்னமும் அத்தேசத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பது, உலக நாடுகள் பலவற்றின் கண்டனத்தைச் சற்றும் பொருட்படுத்தாதது, சுதந்திர ஆர்வம் கொண்டுள்ள ஆப்கன் புரட்சியாளரைப் பயங்கரமான ஆயுத பலத்தால் நசுக்கி வருவது, கைப்பற்றப்படும் புரட்சியாளரை மலக்குழியில் புதைத்து வைப்பதுபோன்ற அநாகரிக அக்கிரமங்களைச் செய்வது எல்லாம் அண்டை நாடுகளுக்கு அபாய அறிவிப்புக்கள்.

ருஷ்யாவை வெளிப்படையாகப் பகைத்துக் கொள்ளவோ அதன் ஆத்திரத்தைக் கிளப்புகிற மாதிரி ஏதும் கூறவோ பிரதமர் விரும்பாதிருக்கலாம். இருப்பினும் ருஷ்யாவின் ஆப்கன் ஆக்கிரமிப்பில் உண்டாகியுள்ள அபாயத்தைப் பிரதமர் நன்கு உணர்ந்திருக்கிறார் என்பதற்கு இந்தியா — பாகிஸ்தான் நட்புறவைப் பலப்படுத்த அவர் மேற்கொண்டுள்ள முயற்சிகள் சான்று.

சுவரண் சிங்கை பாகிஸ்தானுக்கு அனுப்பி இரு நாடுகளுக்கிடையே உள்ள பிரச்னைகளை விவாதிக்கச் செய்தார். ஜிம்பாப்வி சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளச் சென்ற பிரதமர் அந்தச் சந்தர்ப்பத்தை ஜியாவைச் சந்தித்துப் பேசப் பயன்படுத்திக் கொண்டார்.

''இந்தி — பாகிஸ்தானி பாய் பாய்'' என்று கோஷமிடக்கூடிய தினம் சுலபத்தில் வராது. ஆனால் அந்த நாளைக் காண்பதையே லட்சியமாகக் கொண்டு நல்லுறவுக்கு விடாமல் பாடுபட வேண்டும்.

* * *

பிரதமரும், நிதி அமைச்சரும், திட்டக் கமிஷன் துணைத்தலைவரும் கலந்து கொண்ட திட்டக் கமிஷனின் தொடக்கக் கூட்டத்தில் ஆண்டுக்கு ஐந்து சதவிகித வளர்ச்சி என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டது பெரிய விஷயமல்ல. அதைவிட மகிழ்ச்சி தருவது ஜனதாவின் பழைய சுருளும் திட்டம் சுருட்டி வைக்கப்பட்டதுதான். திட்டம் என்றால் ஓர் இலக்கு, காலக்கெடு எல்லாம் இருக்க வேண்டும். உருளும் சுருளும் அல்லது விரியும் திட்டமெல்லாம் உதவாது. தொடக்கக் கூட்டம் முடிவு செய்த மற்றொரு சிறப்பான அம்சம் எதெதற்கு முக்கியத்துவம் தரவேண்டும் என்று வழிகாட்டும் கொள்கைகள் வகுக்கப்பட்டதுதான்.

1. அரசுத்துறை நிறுவனங்களின் இயந்திரங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு உற்பத்தித் திறன் அதிகரித்து அரசுக்கு அவை வருவாயைப் பெருக்க வேண்டும். 2. பல்வேறு துறைகளுக்குத் தரப்பட்டு வரும் மான்யங்கள் படிப்படியாக வாபஸ் பெறப்பட்டு அதன்மூலம் அரசுக்குச் செலவினம் குறைவுடன் அத்துறைகள் சுயமாக லாபகரமாகச் செயல்பட வேண்டும். 3. தனியாரின் சேமிப்பு பெருக வழி வகுக்க வேண்டும். 4. திட்டத்தினை அமல்படுத்துவதில் தனியார் துறையின் ஒத்துழைப்பையும் நன்கு பயன் படுத்திக் கொள்ள வேண்டும். 5. தொழிற்சங்க அமைப்பு பலம் கொண்ட ஊழியர்கள், அந்தப் பலத்தைப் பயன்படுத்தி மிரட்டித் தங்கள் வருவாயை வரை முறையின்றிப் பெருக்கிக் கொள்வதற்கு இடமில்லாமல் ஊதிய நிர்ணயம் பற்றி திட்டவட்டமான கொள்கைகள் உருவாக்கப்பட வேண்டும். 6. அத்தியாவசியப் பண்டங்களின் விலை ஏறாதிருக்க உள்நாட்டு வர்த்தக முறைகளைப் புனரமைப்பு செய்து சீராக்க வேண்டும்.

இது தவிர, மாவட்ட ரீதியில் அபிவிருத்தி கேந்திரங்கள் உருவாகுமென்றும் இவை கிராமப் புறங்களில் வேலை வாய்ப்புக்களைப் பெருக்கும் பெரியதொரு திட்டத்தின் அம்சமாகும் என்றும் முடிவாகியுள்ளது.

திட்டக் கமிஷன் துணைத் தலைவர் டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன், கட்சி வேற்றுமையின்றித் தலைவர்களைக் கலந்தாலோசிப்போம் என்றும் பல்வேறு துறைகளில் உள்ள அறிஞர் பெரு மக்களின் யோசனைகளையும் கோரிப் பெறுவோம் என்றும் கூறியுள்ளதை வரவேற்கிறோம்.

இவையெல்லாம் ஆரோக்கியமான ஆரம்பங்கள். இக் கொள்கைகள் தீவிரமாகக் கடைப்பிடிக்கப்பட்டால் தேசம் பொருளாதார ரீதியில் நிச்சயம் துரிதமாக முன்னேறும்.

திரு ஆர். வி. வரி விதிப்பு முறைகளில் சீர்திருத்தங்களைச் செய்ய உத்தேசித்திருப்பதாய்க் கூறியுள்ளார். ரொம்ப நல்ல காரியம். அதோடு திட்டக் கமிஷன் உருவாக்கியுள்ள மேற்படி கொள்கைகள் உறுதியாகக் கடைப்பிடிக்கப்பட்டால் புதிய வரி விதிப்புக்கே அவசியமிராது என நிதி அமைச்சர் காண்பார். உற்பத்திக்கு உதவாத அனாவசிய அரசுச் செலவினங்களைக் குறைத்து பட்ஜெட்டில் வரிகளைத் தளர்த்தி சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் உற்பத்திக்கும் நிதி அமைச்சர் உதவுவாரேயானால் அரசின் வருவாயும் பெருகும்; வேலை வாய்ப்பும் அதிகரிக்கும்; விலைவாசிகளும் குறையும். பாரதக் குடிமகன் நிதி அமைச்சரை மனமார வாழ்த்துவான்.

அரசியல் ஒரு மாதிரி முன்னே பின்னே இருந்தாலும் தேசத்தின் பொருளாதாரம் சிறந்தாலே போதும், புதிய தெம்பு பிறக்கும், மகிழ்ச்சி நிலவும். சராசரி குடிமகனுக்கு இதுதானே அனைத்திலும் முக்கியம்!

எல்லாம் ஆரம்ப சூரத்தனமாக முடிந்து விடக் கூடாதே என்பதொன்றுதான் நம் கவலை!

செய்திகள், வாசிப்பது 'செம்பியன்'

71ன் மனைவி 17!

"ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம்!" என்றான் பாரதி. அதுதான் இன்று "உமன்ஸ் லிப்". வேறென்ன?

விவாக ரத்து ஒரு முக்கியமான சீர்திருத்தம். மறுக்கவே முடியாது. மனைவி அடிமையாக நடத்தப்பட்டால் அவள் விடுதலை பெற வழி வகுக்கிறது விவாக ரத்து. அவளுக்கு மதிப்பையும் கௌரவத்தையும் தேடித் தருகிற கவசம் அது. அந்தப் பாதுகாப்பு அவளுக்கு இருப்பதால் அவள் தைரியமாகத் தலைநிமிர்ந்து நடக்க முடிகிறது.

ஆனால் பெண்கள் பெற்றுள்ள இந்த உரிமையைக் கூட ஓர் ஆண் துஷ்பிரயோகம் செய்ய முடியும்; அந்த உரிமையையே அவளை இழிவுபடுத்தும் விதமாகப் பிரயோகிக்க முடியும் என்று தெரிகிறது!

அமெரிக்காவில் ஸ்காட்டி என்பவன் 24வது தடவையாகத் திருமணம் செய்து கொண்டிருக்கிறான். அதாவது 23 விவாக ரத்துக்கள்!

"கொஞ்ச நாளில் மனைவியிடம் அலுப்புத் தட்டினாலோ அல்லது அவள் என்னிடம் சரியாக நடந்து கொள்ளவில்லை என்று தோன்றினாலோ விவாக ரத்து செய்து விடுகிறேன்" என்கிறான் ஸ்காட்டி! "அவளுக்குச் சமையலும் வீட்டு நிர்வாகமும் கற்றுத் தந்து அதில் தேறியதற்குப் பட்டமளிப்பு விழா சான்றிதழாகக் கையில் விவாகரத்துத் தாள்களைக் கொடுத்து அனுப்புகிறேன்" என்று வாய் கூசாமல் சொல்கிறான். என்ன ஆணவம்!

இவனுக்கு வயது 71, கடைசியாக மணந்தது 17 வயதான பெண்ணை. 39 குழந்தைகள்.

சட்டம் மட்டும் இருந்து பயனில்லை. ஆரோக்கியமான மனம் அதைவிட முக்கியம் என்பதற்கு ஸ்காட்டியின் நடத்தை ஓர் எடுத்துக்காட்டு.

இத்தனைக்கும் ஸ்காட்டி ஒரு மதகுரு! தனது சில திருமணங்களைத் தானே நடத்தி வைத்துக் கொள்கிறான்! அட ஆண்டவனே!

பின் அப் மோகமும் கோபமும்!

அதே அமெரிக்காவிலிருந்து பெண்களின் கண்ணியத்தைக் காக்க ஒரு நிறுவனம் போராடுகிற செய்தியும் கிடைத்திருக்கிறது.





''ஆபிஸ் நேரத்தில் நீ பாட்டுக்கு ஆரரோ ஆரிரரோ பாடிட்டிருக்கியே! மானேஜர் கோபிக்க மாட்டாரா?''
''அவருக்குப் பிடித்த ராகம் இது தான்! கொஞ்ச நேரத்தில் குறட்டை விட ஆரம்பிச்சுடுவார்''

கோடாக் — உலகப் பிரசித்தி பெற்ற நிறுவனம். பென்ட் ஹவுஸ் — பிளேபாய்க்கு அடுத்ததாக உலகப் பிரசித்தி பெற்ற கவர்ச்சிப் பத்திரிகை. பல சமயம் பிளேபாயை மிஞ்சி விட்டதாக இதற்குப் ''புகழ்'' உண்டு.

கவர்ச்சிக் கன்னியின் வண்ணப் படம் எடுக்கப்படலாம். ஆனால் வண்ணப்பட ஃபிலிம் சுருளைக் கழுவ கோடாக் நிறுவனத்துக்குத் தான் அனுப்ப வேண்டும். அப்படி வந்த போது குறிப்பிட்ட ஒரு பிலிம் சுருளை பென்ட் ஹவுஸ் பத்திரிகைக்குத் திருப்பி அனுப்ப மறுத்து விட்டது கோடாக் நிறுவனம். ''எல்லை மீறிய ஆபாசப்படங்கள் எடுக்கப் பட்டுள்ளன; திருப்பித் தர மாட்டோம்'' என்று கூறி விட்டது!

பென்ட் ஹவுஸ் வழக்காடியது. ''பிலிம் ரோலை நாங்கள் விலை கொடுத்து வாங்கியாகி விட்டது. அதைக் கழுவுகிற கூலியும் விலையில் உள்ளடக்கம். ஆகவே அது எங்கள் உடைமை. திருப்பித் தர மாட்டேன் என்று கூற கோடாக்குக்கு அதிகாரம் கிடையாது'' என்கிறது.

''பிலிம் ரோலை உருவாக்கியதே நாங்கள் தான். அதனை யாரும் வாங்கி உபயோகிக்கலாம். ஆனால் யாருமே வாங்கித் துஷ்பிரயோகம் செய்வதை அனுமதிக்க முடியாது'' என்கிறது கோடாக். ''துப்பாக்கியை ஒருவன் தற்காப்புக்காக வாங்கி வைத்துக் கொள்ளலாம். ஆனால் அதைக் கொலை பண்ண உபயோகிக்கப் போவதாகத் தெரிந்தால் அவனுக்கு விற்கலாமா? இந்தப் படங்களைப் பிரசுரிக்க பென்ட் ஹவுஸுக்கு நாங்கள் உடந்தையாக இருந்தால் ஆபாசத்துக்கு நாங்கள் துணைநின்றவர்களாவோம். அதற்காகவே எங்கள் மீது யாரேனும் வழக்குத் தொடுக்கலாம்!''

வழக்கின் தீர்ப்பு என்ன ஆகுமோ தெரியவில்லை. அது நீதிபதிக்கு பின்அப் மீது உள்ள மோகத்தை அல்லது கோபத்தைப் பொறுத்ததாக இருக்கலாம்!

கிரிக்கெட் அதிசயங்கள்!

இன்று அம்பயர்களை மிரட்டுவது வழக்கமாகிவிட்டது. ஆனால் 1935ல் நடந்த அதிசயங்களைப் பாருங்கள்! ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த குழு இங்கே வந்து ஆடியபோது அக்கோஷ்டியில் லவ் என்பவர் எல். பி. டபிள்யூ ஆகிவிட்டார். அம்பயர் அவுட் தந்துவிட்டார். ஆனால் அதிசயம், இந்திய காப்டன், 'அவுட் இல்லை, தொடர்ந்து ஆடுங்கள்' என்றார். அதைவிட அதிசயம் அம்பயர், 'என் தீர்ப்புத்தான் சரியானது, முடிவானது' என்று கூறி லவ்வை பெவிலியனுக்கு அனுப்பினார். ரொம்ப ரொம்ப அதிசயம், லவ் முணு முணுக்காமல், எரிந்து விழாமல், சிரித்தபடியே பெவிலியன் திரும்பினார்!

கிரிக்கெட் ஆடும்போது பூகம்பம் ஏற்பட்டது என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? 1937ல் இங்கிலாந்து கோஷ்டி இந்தியாவுக்கு வந்தபோது லாகூரில் ஆடுகையில், கடுமையான பூகம்பத்தை அனைவரும் உணர்ந்தனர்! ஆயினும் என்ன? இரண்டு நிமிஷங்கள் ஆட்டம் நின்றது. அவ்வளவு தான். மீண்டும் தொடர்ந்து ஆடினார்கள்!

இப்படியாக அன்அஃபிஷியல் டெஸ்ட்களைப் பற்றிய சுவையான தகவல்களையும் புள்ளி விவரங்களையும் தமது புதிய ஆங்கில நூலில் தருகிறார் திரு பி. என். சுந்தரேசன். இன்று கபில்தேவும், கவாஸ்கரும் விசுவநாத்தும் சக்கைப் போடு போடுகிறார்கள் என்றால் அதற்கு அந்த நாளில் பாட்டியாலா இளவரசரும் அமர்நாத்தும் சி. எஸ். நாயுடுவும் போட்ட அஸ்திவாரம்தான் காரணம். டெஸ்ட் மாட்சுகளுக்கு முற்பட்ட அன் அஃபிஷியல் டெஸ்ட்கள் பற்றிய இந்தச் சரித்திர நூலைக் கிரிக்கெட் அபிமானிகள் பெரிதும் விரும்புவார்கள். எழுதியவர், ஹிந்து பத்திரிகையில் நீண்ட காலமாக கிரிக்கெட் விமர்சகராக விளங்கிப் புகழ் பெற்றவர்.

Not So unofficial:
Free India Publication;
86, General Patters Road
Madras-2.
விலை ரூ 12

நாய் வால் நிமிருமா?

வீடு ரிப்பேர் செய்யவோ, கட்டவோ சிமென்ட் பர்மிட் கேட்கிறார் ஒருவர். பர்மிட் வர ரொம்ப கால தாமதம் ஆகிறது. அது வரை இவரால் காத்திருக்க முடியாது. பிளாக்கில் வாங்கிக் கட்டி முடித்து விடுகிறார். பர்மிட் வருகிறது. அதிகப் பணம் போட்டு வாங்கிய இவர் நஷ்டப்படுவாரா? பர்மிட்டை பிளாக்கில் விற்கிறார். ஆக, பெரும் பகுதி சிமென்ட் வியாபாரம் இவ்வாறு பிளாக்கிலேயே நடக்கிறது. இந்த லட்சணத்தில் பர்மிட் எதற்கு? கன்ட்ரோல் எதற்கு? அரசின் விலை நிர்ணயம் எதற்கு?

தேவைக்கு ஏற்ப உற்பத்தி பெருகவும் உற்பத்திப் பெருக்கத்தால் விலை குறையவும் பர்மிட் லைசென்ஸ் ஒழியவும் நம் தேசத்தில் என்றேனும் வழி பிறக்குமோ என்னவோ, அந்த எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி நிறையவே பிறக்கும்!

துரிஞ்சி ஆற்றில் துயர வெள்ளம்

விழுப்புரத்திலிருந்து காட்பாடிக்குச்செல்லும் பாதையில் பாசஞ்சர் ரயில் திருவண்ணாமலைக்கு அருகில் தண்டரையில் துரிஞ்சி ஆற்றில் விழுந்து கோர விபத்து நிகழ்ந்துள்ளது. அதிகார பூர்வமான தகவல்படி 14 பேர் சாவு. பலபேருக்குக் காயம்!

'பிரேக் பிடிக்காததால் விபத்து நிகழ்ந்திருக்கலாம்' என்று மத்திய ரயில்வே உதவி மந்திரி விபத்து நடந்த இடத்தைப் பார்த்து அறிக்கை விட்டார். அத்துடன் கடமை தீர்ந்தது என்று டில்லிக்குத் திரும்பியும்விட்டார்.

'ஜனவரி மாதம் இட்டத் தட்ட அதே பாலத்துக்கு அருகில் ஒரு பாசஞ்சர் ரயில் தண்டவாளத்தை விட்டு இறங்கியுள்ளது. இருமுறை கூட்ஸ் வண்டிகள் கூட இங்கேயே தண்டவாளத்தை விட்டு இறங்கியுள்ளன' என்று ஓர் உள்ளூர் வாசி தகவல் கொடுத்தார்.

'ரயில் பாதை ஏகமா இவ்விடங்களிலே பழுதாகி இருக்கு. இங்கு ஓடும் பாசஞ்சர் ரயில்களும் மிக மிகப் பழையவை. இவைகளுக்கெல்லாம் உருப்படியாக ஏதேனும் செய்தாக வேண்டும்' என்று திருவண்ணாமலையில் ஒரு ரயில்வே ஊழியர் ஆதங்கப்பட்டுக் கொண்டார்.

'நாச வேலை காரணமாக இவ்விபத்து நிகழ்ந்திருக்கலாம்' என்ற பத்திரிகைகளின் ரேஷ்யத்தைத் தவிர உள்ளூர்வாசிகளிடையே அம்மாதிரி அபிப்பிராயம் ஏதும் இல்லை!

தண்டவாளத்தைவிட்டுக் கடைசிப் பெட்டி இறங்கி, மீதி தொடரால் அப்படியே இழுத்துச் செல்லப்பட்டு பாலத்தை அடைந்ததும் நிலைசாய்ந்து, முன்னாலுள்ள நான்கு பெட்டிகளையும் சரித்துக் கீழே தள்ளி, தான் மிக அதிக சேதத்துக்கு ஆளாகிப் பல உயிர்களையும் குடித்துள்ளது.

இரண்டு ஸ்டேஷன் மாஸ்டர்களின் பரிதாபச் சாவும், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர்களின் மரணமும் நெஞ்சை உருக்குவன.

சும்மா சொல்லப்படாது, நிவாரணப் பணிகள் துரிதமாகவே நடந்துள்ளன.

அதிகரித்து வரும் இத்தகைய விபத்துக்களுக்கு யார் உண்மையான காரணம்; இவை நிகழா வண்ணம் அடிப்படையாக என்ன செய்ய வேண்டும்? என்கிற நினைப்பு அரசுக்கோ, அரசு என்ன செய்திருக்கிறது என்ற கண்காணிப்பு மக்களுக்கோ இல்லாமல் 'ஒரு வாரம் ஓடும் சினிமாப் படம் போல' இந்த உயிர்ப் பிரச்னை மறக்கப்படுகிறது.

'தமக்கு ஏற்பட்ட காயத்தைப் பொருட்படுத்தாமல் ரயில் வண்டியின் 'கார்ட்' சுமார் இரண்டு கிலோ மீட்டர் ஓடித் தண்டரை ரயில்வே நிலையத்தில் செய்தியைச் சொன்னார்' போன்ற மனிதாபிமானம் மிக்க வீரச்செயல்கள் மட்டும் சற்றுக் கூடுதலான கால அளவுக்கு மக்கள் மனத்தில் தங்குகின்றன. அவ்வளவுதான்!

போனசுக்கும், சம்பளத்துக்கும், பஞ்சப்படிக்கும் போராடும் ஊழியர் ஒருபுறமும், உங்களது போராட்டம் கடைசிக் கட்டம் அடையும்வரை எதுவும் கொடுக்க மாட்டேன் என்று வீம்பு செய்யும் அரசு மறுபுறமும் வீம்பு காட்ட இடையே பொது மக்களின் உயிர் விலை பேசப்படுகிறது.

பழைய உளுத்துப்போன ரயில் பெட்டிகளை ஓடவிட்டு மக்களின் உயிர்களுடன் விளையாட வேண்டாம் என்றும் ரயில் பெட்டிகள், ரயில் பாதைகள் இன்னும் ஆற்றலுடன் சீராகப் பராமரிக்கப்பட வேண்டும் என்றும் பேசப்படலாம்; செயல்படுத்துவது எப்போது?

— பி. ரங்காயவி



● 20-4-80 இதழில் அட்டைப்படமே மிக அழகாக இருந்தது. கவிஞர் கண்ணதாசனிடம் கடைசிப் பக்கத்தை மீண்டும் கொடுத்தது கண்டு மிக மகிழ்ச்சி அடைந்தேன். இனி வாரா வாரம் அவருடைய கருத்து மழையில் நனையலாம். ஒரு பக்கத்திலேயே ஓராயிரம் விஷயங்களைக் கூறுபவராயிற்றே அவர்.
மதுரை—20 இரா. நாராயணன்

● 'திரௌபதி கர்ணனை நேசித்ததை வெளிப்படையாகச் சொன்னாள்' என்கிறார் கண்ணதாசன். இப்படி ஒரு செய்தி வியாசரில் கிடையாது.
வில்லியிலும்,
'ஐம்புலன்களும்போல் ஐவரும் பதிகளாகவும்
இன்னம் வேறொருவன்
என்பெருங் கொழுநன் ஆவதற்குருகும்
இறைவனே எனதுபேரிதயம்'
என்று கூறுவதாகவே வருகிறது. இதற்குத் தத்துவ உட்பொருள் உண்டு. என்பதைக் கவிஞர் அறிந்தே இருப்பார்.
சாலியமங்கலம் ந. மெய்ப்பொருள்

வட்டமேஜை

ஒரு பக்கத்தில் ஓராயிரம் விஷயங்கள்!

● எல்லாப் பெண்களின் அந்தராத்மாக்களும் பேசத் தொடங்கினால் கண்ணகிகள் குறைவாகவே இருப்பார்கள் என்று எழுதியுள்ள கண்ணதாசனுக்கு, 'எல்லா ஆண்களின் அந்தராத்மாக்களும் பேசத் தொடங்கினால் நாட்டில் ராமர்களே இருக்க மாட்டார்கள்' என்பதை நினைவூட்டுகிறேன்.
சென்னை-33 சகுந்தலா நாகராஜன்

● தலையங்கம் அருமை. ஆனால் சுட்டிக்காட்ட விட்டது ஒன்றே ஒன்று. ப.ராவும், எஸ்.வி. லட்சுமணனும் கூட இறுதியில் ஜனதா உடைவதற்கு ஒரு காரணமாகி விட்டார்களே! அவர்கள் இருவரும் இரட்டை உறுப்பினர் பிரச்னையில் எதிராக ஓட்டளித்தனர். அவர்கள் மட்டும் ஆதரவாக ஓட்டு அளித்திருந்தால், ஜனதாவின் இறுதிப் பெரும் பிளவு தடுக்கப்பட்டிருக்கும்.
கல்லிடைக்குறிச்சி என். கைலாசம்

● ராஷ்ட்ரீய சுயம் சேவக சங்கத்தை (ஆர். எஸ்.எஸ்.) சாடுவோர் சாடட்டும். இறுதியில் சத்யம் தான் வெல்லும். நல்ல சந்தர்ப்பத்தில் இப்படி ஓர் அழகான தலையங்கம் எழுதிய தங்களுக்கு இந்த எளியவனுடைய, பாராட்டு தலையும் பணிவன்புடன் சமர்ப்பிக்கிறேன்.
சென்னை-61 இரா. சிவராமகிருஷ்ணன்

● தலையங்கத்தில், ''கட்சிமாறிகள் நிரம்பிய இன்றைய அரசியல்'' என்று விமர்சித்துள்ளீர்கள். கல்கி இதுவரை ஆதரித்த கட்சிகள்: (1) காங்கிரஸ் (2) சுதந்திரா (3) தி.மு.க. (4) அ.தி.மு.க. (5) ஸ்தாபன காங்கிரஸ் (6) ஜனதா. இப்பொழுது கல்கியின் ஆதரவு பாரதீய ஜனதா கட்சிக்கு. இந்திரா காந்தியை எதிர்க்க நீங்கள் மட்டும் இப்படி கட்சி மாறலாமா?
ஸ்ரீவில்லிபுத்தூர் ச. சி. ராகவன்

[இந்த வாரம் இந்திரா அம்மையாரைப் பாராட்டி எழுதியுள்ளோம்: உடனே கல்கி இந்திரா காங்கிரஸில் சேர்ந்து விட்டதாகச் சொல்லாதீர்கள்! ப்ளீஸ்! கட்சி சார்பற்று அனைத்துக் கட்சிகளிலும் உள்ள நல்லது கெட்டதுகளை எடுத்துச் சொல்வதால் கல்கி கட்சி மாறுவது போல் உங்களுக்குத் தோன்றுகிறது. கல்கி சார்ந்திருப்பது சத்தியம் ஒன்றையே. ஆர்.]

● திரு பென்னர் பிராக்வேயின் ராஜாஜி அறக்கட்டளை சொற்பொழிவு விவரத்தைப் படித்து மகிழ்ந்தேன். அதே நேரத்தில் இவ்விழாவிற்கு பிரதமர் இந்திரா காந்தி அனுப்பிய செய்தியில், ''ராஜாஜிக்கு வயது வந்தோருக்கு வாக்குரிமை அளித்தது சம்மதமில்லை'' என்று குறிப்பிட்டிருந்தார் என்பதை அறிந்து மிகவும் வருந்தினேன். இது தவறான, பொய்யான கருத்து என்பது ஒரு பக்கமிருக்க இக்கருத்தை வெளியிட அவர் தேர்ந்தெடுத்த சந்தர்ப்பம் மிகவும் பொருத்தமற்றது.
திரு பிராக்வேயின் பேச்சுக்கு இந்திரா காந்தியின் தாக்கீது எப்படி முரண்பட்டு விரசமாக ஒலிக்கிறது!
சென்னை-88 கி. ஸ்ரீநிவாசன்

● தஞ்சைத் தரணியில் நெஞ்சம் நிறைக்கும் விழா கண்டேன். வாசகர்கள் நெஞ்சம் நிறைந்தது கட்டுரையைப் படித்ததும்.
கிண்டல் இழையோடும் நகைச்சுவை —
மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஷொட்டு. தொல் பொருள் இலாகா காரர்களுக்கும் இந்து சமய ஆட்சித் துறைக்கும் குட்டு.
கட்டுரையில் நவரசங்கள் அளவுடன் பெருக்கெடுத்து ஓடுகின்றன. எந்த ரசம் தேவையோ அந்த ரசத்தைப் பருகலாம்.
கடலூர்- 1 ஸ்ரீவத்ஸன்

● தஞ்சை பெரிய கோயில் கும்பாபிஷேகம் பற்றிய கட்டுரையுடன் வந்துள்ள புகைப் படங்களும், அதையடுத்துள்ள நகைச்சுவைப் படங்களும் அருமை.
இன்னொன்று. கல்கியின் புதிய அமைப்பு மிக நன்றாக இருக்கிறது.
விருத்தாசலம் வரதராஜன்

● திரு பிரகாஷ் படுகோனே எங்கள் யூனியன் பாங்க் ஆப் இந்தியாவின் ஆபீசராவார். இந்த விவரத்தைக் குறிப்பிடாமல் தாங்களும் புறக்கணித்து விடலாமா?
வத்ரூப்-32 ஆர். தனபாலன்



● 'உயிர் கொடுக்கும் உத்தமரின் போட்டோவை பிரசுரிக்காமல் ஆபரேஷன் செய்து கொண்டவர்களது போட்டோவை யார்கேட்டார்கள்? டாக்டர் கந்தசாமி, டாக்டர் ராமலிங்கம் போட்டோக்களை வெளியிடுவீர்களா?

வடலூர் எஸ். கண்ணன்

[சில டாக்டர்கள் தங்கள் படங்கள் பிரசுரிக்கப்படுவதை விரும்புவதில்லை. கந்தசாமி, ராமலிங்கம் அந்த ரகம். - ஆர்]

● ''லவ்—ஆல்'' சிறுகதை ஒரு ''ட்ருத்—ஆல்'' (Truth All) கதை. இன்றைய அரசியல்வாதிகளின் மோசடிகளைக் கதை மூலமாகச் சாடிய ஏ.வி.எம். கணேஷுக்கு என் வாழ்த்துக்கள்.

கோவை கே. ஓய். ராவ்

● ''on the spotல் அன்பு நெஞ்சம் பாக்கியராஜ் பற்றி சலன் எழுதிய பேட்டி கட்டுரை அருமை. பாக்கியராஜின் மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி என முடித்துள்ளாரே அதைத்தான் எங்களால் நம்பமுடியவில்லை. ''மௌன கீதங்கள்'' நாயகன் பாக்கியராஜின் மௌனம் மர்மமானது. காலம் பதில் சொல்லும் வரை காத்திருப்போம்.

விழுப்புரம்
ஜி. இளங்கோவன் மற்றும் நண்பர்கள்

● கண்டிப்பு தேவையா? செய்தி நெஞ்சை உருக்குவதாயுள்ளது. சீருடை எதற்கு என்ற தத்துவத்தை மறந்து அர்த்தமற்ற சடங்காய்ச் சீருடைத் திட்டம் செயல்படுகிறது.

திருச்சி காஜாமியான் பள்ளியில் பரீட்சையன்று சீருடை காயாமல் இருந்ததால் பரீட்சைக்கு மாற்றுடையுடன் சென்ற மாணவனை அன்னையில் சஸ்பெண்ட் செய்து—பெற்றோர் ஓடோடி மன்னிப்புக் கேட்டதால் முழுப் பரீட்சையும் தரையில் எழுதப் பணித்து அம் மாணவனும் அப்படியே செய்ய நேர்ந்தது. இப்படி வசதிக் குறைவான மாணவனை அவமானப்படுத்தலாமா? பொருளாதார ஏற்றத் தாழ்வு மனத்தில் படியக்கூடாது என்பதற்காகத்தானே சீருடைத் திட்டம்?

திருச்சி-4 என். பாலன்



மே தினம்.

தொழிலாளர் திருநாள்.

உலகெங்கும் உற்சாகமாகக் கொண்டாடப் பட்டாலும் சோவியத் ருஷ்யாவுக்கு இணையாக எங்கும் இல்லே.

இதோ—

மாஸ்கோ செஞ்சதுக்கம் மேதினத்தன்று அளிக்கும் இரு தோற்றங்கள்!

● இந்த வாரக் கல்கி இதழ் கையில் வைத்திருந்தால் பாவம். படித்துப் பார்த்தால் அருவருப்பு. அமரர் கல்கி அவர்கள் உயிருடன் இருந்திருந்தால் அருவருப்பான 'விந்து பாங்க்' கல்கி இதழில் அச்சேறி இருக்காது.

வேளியநல்லூர் எம்.எ. சுந்தராச்சாரியன்

[ராபர்ட் ரோஹம் பண்ணுகிற அருவருப்பான பாவத்தை விடவா? -ஆர்.]

● கர்நாடக மண்ணில் தமிழ்ப் பணியாற்றி வரும் பெங்களூர் தமிழ் சங்கம் தமிழ் மக்களுக்குப் பயன்படும் பொருட்டு நூலகம் நடத்தி வருகிறது. இந்நூலகத்தை விரிவுபடுத்த எண்ணியுள்ளோம். மத்திய அரசு ரூ. 20,000 நிதி உதவி வழங்கியுள்ளது. தமிழ் மக்கள் தாம் வாங்கிப் படித்த நூல்கள் தங்கள் கைவசம் வைத்திருப்பின் சங்க நூலகத்துக்கு அனுப்பி உதவலாம்.

29, அண்ணுசாமி முதலியார் சாலே,
பெங்களூர்,-560.042

இராசு மாறன்
செயலாளர், பெங்களூர் தமிழ்ச் சங்கம்

● அமரர் கல்கி சிறுகதைப் போட்டி அறிவிப்பில் 'அறிமுக எழுத்தாளர் எனில் இது வரை எந்தப் பத்திரிகையிலும் எழுதியிருக்கக் கூடாது' என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். சிறுகதை எழுதாமல், ஜோக், துணுக்கு இவைகள் கூட எழுதியிருக்கக்கூடாதா?

கல்லிடைக்குறிச்சி எஸ். கைலாஸ்,

[எழுதியிருக்கலாம். சிறுகதைகள், நாவல்கள் எழுதியிருக்கக் கூடாது -ஆர்]

ஒற்றன் 4x-1 சித்திரக்கதை : புஞ்ஜாய் 16



ஒரு நாள் பாவலர் செங்குத்தம்பி புலவரின் புலமைத் திறத்தைச் சோதிக்க விரும்பி அவரது நண்பர் மகன் (இவரும் புலமை மிக்கவரே) வந்திருந்தார்.

தம் தந்தை பாவலரிடம் நூறு ரூபாய் வாங்கிக் கொள்ளச் சொன்னதாகக் கூறினார். நண்பரின் விருப்பத்தை நிறைவேற்ற முற்பட்ட பாவலர், 'அதற்கென்ன நூறு ரூபாய் தருகிறேன்' என்றார். பாவலரைச் சோதிக்க முனைந்தவர், அதிகச் செலவுள்ளது; இருநூறு ரூபாய் தந்தால் பேருதவியாக இருக்கும் என்றார். பாவலரும் பளிச்சென 'இரு' நூறு ரூபாய் தருகிறேன்' என்றார். பாவலரின் சிலேடையைப் புரிந்து கொண்ட அவர் 'முந்நூறு ரூபாய் தந்தால் நல்லது' எனக் கேட்டார். பாவலரும் தயங்காமல் 'முன் நூறு ரூபாய் தருகிறேன் என்றேன்' என்றார். குறிப்பை அறிந்த நண்பரின் மகன் 'நானூறு ரூபாய் தந்தால் நலமாகும்' என்றார். பாவலரும் பரிவோடு நான் நூறு ரூபாய் தருகிறேன்' என்றார். பொருளைப் புரிந்து கொண்ட அவர் 'ஐந்நூறு ரூபாய் தாருங்கள்' என்றார். வியப்புக் குறிப்பை முகத்தில் காட்டி விந்தை



புனைச்சி வெளிப்பட 'ஐ! நூறு தருகிறேன்' என்றார். கேட்டவரும் சிந்தை மகிழ்ந்து 'அறு நூறு ரூபாய் வேண்டும்' என்றார். நீட்டாது பேச்சை அறு என்னும் பொருளில் 'அறு. நூறு தருகிறேன்' என்றார் பாவலர். தொடர்ந்து 'ஏழு நூறு ரூபாய் வேண்டும்' எனக் கேட்டதும் பாவலரும் கைகளைத்து 'எழு. நூறு ரூபாய் தருகிறேன்' என்றார். வந்த புலவர் தொடர்ந்து 'எண்ணூறு ரூபாய் வேண்டும்' என்றார். நூறு ரூபாய் எடுத்து வந்த பாவலர் 'இதோ என்(னு), நூறு ரூபாய் இருக்கின்றது' எனக் கூறிப் பணத்தைக் கொடுத்துப் பேச்சை முடித்தார்.

(பி. நயினார் முகம்மதுவின் புவிசெங்கும் பொங்குக எனும் நூலிலிருந்து)

- என். எஸ். முத்து கிருஷ்ண ராஜா

✖

நல்லவரைப் பார்க்கும் போது பின்பற்ற நினையுங்கள். கயவரைப் பார்க்கும்போது உங்கள் இதயத்தைப் பரிசோதித்துக் கொள்ளுங்கள்.

கன்பூசியஸ்

- கமல் ஸ்ரீதர்

On the spot

மைசூர் மார்க்கெட்டில் வண்டிச் சக்கரம்

முரடன், பார்ப்பதற்கே கோரமானவன். அவனைக் கண்டால் அந்தக் கிராமமக்கள் பயந்து நடுங்குவார்கள். அப்படிப்பட்டவன் ஓர் அனாதைப் பெண்ணின் மேல் கருணை கொண்டு எந்த வித தவறான எண்ணமுமில்லாமல், தன் வீட்டுக்கே அழைத்து வந்து தங்க வைக்கிறான். மக்கள் பலவாறு பேச, அவர்கள் பேச்சை அடக்க அவள் விருப்பத்தை அறிந்து மணக்கிறான். தன் கணவன் முன்னேற வேண்டும் என்ற எண்ணத்துடன் அவனைத் திருத்தி எல்லோரையும் போல் உழைத்துச் சம்பாதிக்கும் அளவுக்கு அவனை மாற்றிவிடுகிறாள் மனைவி. மிகவும் சுகமாகச் சென்று கொண்டிருக்கும் இல்லறத்தின் நடுவில் ஒரு புயல். தன் மனைவியைப் பற்றி மாற்றான் ஒருவன் தாறுமாறாகப் பேசத் தாங்க முடியாமல் அவனிடம் சண்டை விடுகிறான், இடையில் சாதுவாக இருந்த முரடன்.

''இந்தச் சண்டைக் காட்சியைத்தான் நீங்கள் வரும்போது படமாக்கிக் கொண்டிருந்தோம்'' என்று கூறி நிறுத்தினார் கதை வசன கர்த்தா விஜு சக்கரவர்த்தி. அவர் கதை சொல்லிக் கொண்டிருந்த இடம் மைசூரில் உள்ள சுஜாதா ஓட்டல்.

''வண்டிச் சக்கரம்'' படத்தின் வெளிப்புறப் படப்பிடிப்பு மைசூரில் உள்ள பிரிமியர் ஸ்டுடியோவிலும், மைசூர் மார்க்கெட்டிலும் வேறு முக்கியமான சாலைகளிலும் நடைபெற்றது.

சண்டைக் காட்சி நடந்து கொண்டிருந்த இடத்துக்கு நான் சென்றபோது உண்மையாகவே சிவகுமாரை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. காரணம், அவரது புதுமையான, முரட்டுத்தனமான தோற்றமும் அதற்கேற்ற உடைகளும்தான். வேடிக்கை பார்க்கக் கூடியிருந்த மக்கள் 'நாலைந்து சண்டைப் பயிற்சியாளர்கள் ஒத்திகை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது: பிறகு



✖ சிவகுமார், சரிதா



✖ சுமித்ரா, சுருளிராஜன்

தான் சிவகுமார் வருவார்' என்று நினைத்துக் கொண்டிருந்தனர். பயிற்சியாளர் போலிருந் தவர்களில் ஒருவர்தான் சிவா என்று அடை யாளம் புரிந்து கொண்டபோது அவர்கள் அடைந்த ஆச்சரியம்!

''நான் ஏற்றுள்ள எத்தனையோ கதாபாத் திரங்களிலிருந்து இந்த வேஷம் மிகவும் மாறுபட்டிருக்கிறது. அதனாலேயே எனக்கு மிகவும் பிடித்து விட்டது'' என்று கூறினார் சிவகுமார்.

பிரிமியர் ஸ்டுடியோ நமது வாஹினி, ஏ.வி.எம். போல் பெரிதாக இல்லை என் றாலும் சிறிது என்றும் சொல்லிவிட முடி யாது. ஏழு தளங்கள் உள்ளன. அதைப் பதினான்காக உயர்த்த முயற்சிகள் நடந்து வருகின்றன.

''சரிதாவுக்கும் சிவசந்திரனுக்கும் மிகவும் சிறப்பான வேடங்கள். இருவருமே என்னைப் பொறுத்தவரை பிரமாதமாகச் செய்துள் ளார்கள்'' என்று மனம் திறந்து பாராட்டி னார் தயாரிப்பாளர் திருப்பூர் மணி.

ஸ்டண்ட் மாஸ்டர் சங்கர் நிற்காமல் சுற் றிக் கொண்டிருந்தார். அவருக்குப் படத்தில் ரொம்ப வேலை இருக்கும்போல் தோன்றியது. ஆஜானுபாகுவான ஜம்பு, சிவகுமாருடன் மோதிக் கொண்டிருந்தார். ஜம்புவைப் பார்த்த மாத்திரத்திலேயே யாரும் சற்றுக் கலங்கித்தான் போவார்கள். காரணம் அவ ரது உயரம், பருமன் எல்லாமே பெரிய அளவில்தான். ஆனால் உண்மையில் முப்பது வயதேயான ஜம்பு மிகவும் சாதுவானவர்.

'சங்கராபரணம்' படத்தின் பாடலுக்காகப் பரிசு பெற்ற எஸ். பி. பாலசுப்பிரமண்யத் தின் குரல் கர்நாடக இசைக்கு நேர்மாறான இசையில் ஒலிக்கக் கேட்டேன்:



✖ இயக்குனர் விஜயன், தயாரிப்பாளர் திருப்பூர் மணி


வா மச்சான் வா!
வண்ணாரப்பேட்டை.
ஊத்தித் தரேன், கேளேண்டா
என்னோட பாட்டை!

அவருக்கென்ன, எத்தகைய சங்கீத ஆற்றலை எந்த இடத்தில் எப்படிக் காட்ட வேண்டுமோ அப்படிக் காண்பித்துவிடுகிறார்.

''எனக்கு மன நிறைவைத் தரும் மற்றொரு படம் ''வண்டிச் சக்கரம்'' '' என்று கூறினார் ஒளிப்பதிவாளர் பாலகிருஷ்ணன்.

படம் உருவாக உழைப்பவர்களுக்கு மட்டு மல்ல; நம்மைப் போல் உட்கார்ந்து படம் பார்ப்பவர்களுக்கும் மன நிறைவைத் தரும் வண்ணம் சுறுசுறுப்பாக இயக்கிக் கொண் டிருந்தார் இயக்குனர் விஜயன்.

''சலன்''



✖ இயக்குனர் விஜயன், ஒளிப்பதிவாளர் பால கிருஷ்ணன், சிவகுமார்.

மாத நாவல் வித்தை

கமல்

இன்று ஏகப்பட்ட மாதாந்திர நாவல் இதழ்கள் வந்துவிட்டன. ஆனால் நாவல் எழுதுவதற்குச் சிறந்த எழுத்தாளர்கள் சுலபமாகக் கிடைப்பதில்லை. அவர்களையும் பலர் நிர்ப்பந்தப்படுத்துவதினால் சிரமப்பட்டு, நேரத்தோடு போட்டி போட்டுக் கொண்டு ஒரு சிறுகதையையே ரப்பராக இழுத்து நாவலாக்கிக் கொடுக்கிறார்கள்.

துரதிர்ஷ்டவசமாக எழுத்தாளர் ஏகாம்பரத்தை எந்த ஆசிரியரும் கேட்காத காரணத்தால், அவர் ஒரு புதிய முயற்சியில் இறங்கினார். அது மாத நாவல் வித்தை! ''சுலபமாக நாவல் எழுதி ஆயிரக் கணக்கில் சம்பாதிக்கும் அனுபவபூர்வமான ரகசிய வழிமுறைகளாக்கும் இது'' என்றார். நெருங்கிய நண்பனாகிய என்னிடம் தம் தயாரிப்பைக் காட்டினார். அந்த வழிமுறைகளைப் பின்பற்றி அவரே எழுதிய நாவலிலிருந்து சில பகுதிகள்.

காலை. மணி ஆறு.
கண் விழித்தாள்.
சோம்பல் முறித்தாள்.
அவள்?
கட்டிளங் குமரி. தந்தச் சிலை!
கவர்ச்சிப் பாவை! அழகு பிம்பம்!
அவள் பெயர்?
லதா? ஊஹூம். ராணி? ஊஹூம்.
ஜயா? ஊஹூம்!
உஷா? ஆஷா? சீதா? சுந்தரி? லலிதா?
இல்லை. இல்லவே இல்லை.
அவள் பெயர்—
பாமினி!

சோம்பல் முறித்துவிட்டு எழுந்தாள். காலில் செருப்பைப் போட்டுக் கொண்டு புறப்பட்டாள்.

எங்கு?
கல்லூரிக்கு? அலுவலகத்திற்கு?
ஆஸ்பத்திரிக்கு? பள்ளிக்கூடத்திற்கு?
ஸ்டுடியோவிற்கு?
இல்லை.

அவள் பாத்ரூமிற்குச் சென்றாள்! பல்லைத் தேய்த்தாள்.

காலிங் பெல்லைத் தட்ட, சமையற்காரர் ஒரு வெள்ளித் தம்ளரைத் தட்டில் கொண்டு வந்து வைத்தார்.

அது காப்பி இல்லை. டீ இல்லை.
போர்ன் விட்டா இல்லை. பூஸ்ட் இல்லை.
ஹார்லிக்ஸ்? அதுவும் இல்லை.
பின் என்னது?
வெறும் மோர்.

பாமினி தினமும் காலையில் மோர் மட்டும் தான் சாப்பிடுவாள்.

காப்பி சாப்பிட மாட்டாள்.
டீ சாப்பிட மாட்டாள்.
போர்ன்விட்டா சாப்பிட மாட்டாள்.
பூஸ்ட் பக்கம் போக மாட்டாள்.
ஹார்லிக்ஸை அண்டவிட மாட்டாள்.

குளித்து டிரஸ் செய்து கொண்டு ஆபீசுக்குப் புறப்பட்டாள்.

பஸ் ஸ்டாப்பை வந்து அடைந்தாள்.
காத்துக் கொண்டிருந்தாள்.
11ம் நம்பர் வந்தது.
அதில் ஏறவில்லை.
7 வந்தது.
அதிலும் ஏறவில்லை.
அதன் பின்,
9, 6, 5, 26, 19
எதிலும் ஏறவில்லை.
ஏன்?

அவளுடைய காதலன் வழக்கம்போல் தன் ஸ்கூட்டரில் வந்து அந்த பஸ் ஸ்டாப்பிலிருந்து அவளை அழைத்துப் போவான்.

அவனது பெயர்?
ரகு? ராஜா? மணி? சுந்தர்? விஜயன்?
பாபு? பாலன்? ராமன்? லக்ஷ்மணன்?
எதுவுமில்லை.
அவன் பெயர்—
குப்புசாமி.

கடைசியில் குப்புசாமி ஸ்டைலாக வந்து நின்றான்.

அப்போது மணி—
7—15? 7—16? 7—17?
....

''சபாஷ் ஏகாம்பரம். இந்த ரகசிய முறைகளைக் கடைப்பிடித்தால் ஒரு நூறு பக்க நாவலைப் பத்து நிமிஷத்தில் படித்து விடலாம். இதனால் எழுத்தாளர், வாசகர் இரு தரப்பினருக்கும் சௌகரியம்'' என்று சொல்லி விடை பெற்றேன்.

இது மாதிரி பல அற்புத வழி முறைகளைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்பும் எழுத்தாளர்கள் ஏகாம்பரத்தை அணுகிப் பயன் பெறவும்!



கல்லூரியில் `குவிஸ்'

மாலைப் பொழுதுக்குரிய ராகம் எது?

சென்னை எதிராஜ் மகளிர் கல்லூரி. கல்லூரி நிர்வாகம் குவிஸ் நிகழ்ச்சிக்காக ஏகப்பட்ட ஏற்பாடுகள் செய்திருந்தது. மாணவியரிடையே அளவிட முடியாத வரவேற்பு, பங்கேற்பு. ஆறு மாணவிகள் போட்டியில் பங்கேற்றனர். பேராசிரியை ஆர். சகுந்தலா க்விஸ் மாஸ்டராக இருந்து நிகழ்ச்சியைத் தொகுத்துக்கொடுக்க, நிகழ்ச்சி ஆரம்பமாயிற்று.

பங்கேற்ற மாணவியர்

1. ராஜஸ்ரீ சேஷன்
2. கே. ரத்னா
3. B. விஜி
4. லலிதா சுப்பிரமணியம்
5. ஜி. காஞ்சனா
6. ஆர். இந்துமதி

கேள்விகள்

1. ராஜஸ்தானி ஸ்டைல், பர்லோவி, 'மினியேச்சர்' போன்ற சித்திர வகைகள் உள்ளன. வட இந்தியாவில் ஸ்ரீகிருஷ்ணரையும் கோபிகைகளையும் முக்கிய அம்சமாகக் கொண்டு வரையப்படும் சித்திரங்கள் என்னவென்று அழைக்கப்படுகின்றன?
(எவரும் விடையளிக்கவில்லை.)
2. புகைப்படத் துறையில் எஸ். எல். ஆர். என்றால் என்ன?
(எவரும் விடையளிக்கவில்லை.)
3. கர்நாடக இசையில் கச்சேரி முடிவடையும் சமயம் பொதுவாக மத்தியமாவதி ராகம் பாடப்படும். ஹிந்துஸ்தானியில் அது மாதிரி சாதாரணமாகக் கடைசியில் பாடப்படும் ராகத்தின் பெயரைக் கூற இயலுமா?
(எவரும் விடையளிக்கவில்லை.)
4. உலக அழகி பட்டம் பெற்ற முதல் இந்தியப் பெண்மணி யார்?
(ரத்னா விடையளித்தார்.)
5. 1978-79ம் ஆண்டுக்கான தமிழக அரசின் சிறந்த தமிழ்ப் பட விருதைப் பெற்றுள்ளது 'முள்ளும் மலரும்' என்ற படம். அதற்கு அரசின் சார்பாக எவ்வளவு பரிசளிக்கப்படும் என்று கூற முடியுமா?
(எவரும் விடையளிக்கவில்லை.)
6. ஸ்பெயின் நாட்டின் தேசிய விளையாட்டு எது?
(ராஜஸ்ரீ விடையளித்தார்.)
7. Scimitar என்றால் என்ன?
(இந்துமதி விடையளித்தார்.)
8. Xylophone என்று எது அழைக்கப்படுகிறது?
(காஞ்சனா விடையளித்தார்.)
9. கிரிக்கெட் டெஸ்ட் பந்தயத்தில் விளையாடிய மிகவும் வயதான ஆட்டக்காரர் யார்?
(சிம்ஸன், க்ளோஸ், பாய்காட் என்றெல்லாம் விடைகள் வந்தன. சரியான விடையை எவரும் அளிக்கவில்லை.)
10. Cooch-Behar கோப்பை எவ்விளையாட்டுக்கு எத்தரத்துக்கு அளிக்கப்படுகிறது?
(விஜி சரியான விடையைக் கூறினார்.)
11. இந்திய சினிமாவின் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?

✕ பார்வையாளரில் ஒரு பகுதி





✗ நடுவில் 'குவிஸ்' மாஸ்டர் சகுந்தலாவும் அவருக்கு இடது புறம் கல்லூரி முதல் வரும் உட்கார்ந்திருக்கப் போட்டியில் பங்கு பெற்ற மாணவியர்,



✗ கல்லூரி முதல்வரிடமிருந்து இந்துமதி பரிசு பெறுகிறார்,

(லலிதா சரியான விடையைக் கூறினார்.)

12. பொலிவியாவின் தலைநகரம் எது?
(லலிதா சரியான விடையைக் கூறினார்.)

13. குவைட் நாட்டின் நாணய முறை எது?
(இந்துமதி சரியான விடையைக் கூறினார்.)

14. ஜனவரி 26ந் தேதி இந்தியக் குடியரசு நாள். அதே தினத்தில் தனது தேசிய தினத்தைக் கொண்டாடும் நாடு எது?
(எவரும் விடையளிக்கவில்லை.)

15. பழுதடைந்த ரூபாய் நோட்டுக்களை மாற்ற ரிசர்வ் பாங்க் எந்த விகிதத்தில் கமிஷன் வசூலிக்கிறது?
(சரியான விடையை லலிதா கூறினார்.)

16. 'ஹைட்ரோ ஃபோனிக்ஸ்' (Hydroponics) என்றால் என்ன?
(இந்துமதி சரியான விடையைக் கூறினார்.)



✗ குமாரி சசிகலாவின் பரத நாட்டியம்,

17. ஜனநாயகக் கவி (Poet of Democracy) என்று எந்த அமெரிக்கக் கவி அழைக்கப் படுகிறார்?
(இந்துமதி சரியான விடையைக் கூறி னார்.)

18. காலைக் குரிய ராகம் பூபாளம். அம் மாதிரி மாலைக்குரிய ராகம் எது?
(பார்வையாளர்களில் ஒருவர் கூறினார்.)

19. ஜீவன் ரக்ஷா பதக்கம் அரசால் எதற் காக அளிக்கப்படுகிறது?
(இந்துமதிதான் இதற்கான விடையை யும் கூறினார்.)

20. இந்தியாவின் தேசிய மிருகம் எது?
(விஜி சரியான விடையைக் கூறினார்.)

21. பார்ஸிக்களின் மதப் புத்தகம் (Religi- ous book) எது?
(லலிதா சரியான விடையைக் கூறினார்.)



அவர்: "என்னைவிட என் மகனைவிட என் பேரனுக்குத்தான் வாய்ப்பு அதிகம்!"
இவர்: "எதுக்கு...!"
அவர்: "தங்கப்பதக்கம் பரிசுபெற்ற தமிழ் படத்தைப் பார்க்க!" - உ: ராஜாஜி

22. சுப்ரீம் கோர்ட்டுக்கு அதிகப்படியாக எத்தனை நீதிபதிகளை நியமிக்கலாம்?
(எவரும் விடையளிக்கவில்லை.)

23. பிங்க் நகரம் (Pink City) என்று எது அழைக்கப்படுகிறது?
(ரகு விடையளித்தார்.)

24. மார்ச் 8ந் தேதியின் முக்கியத்துவம் என்ன?
(ராஜஸ்ரீ சரியான விடையைக் கூறினார்)

25. குதிரைப் பந்தயத்தில் 'டெர்பி' பந் தயத்தின் நீளம் எவ்வளவு?
(இந்துமதி சரியான விடையைக் கூறி னார்.)

26. இந்தியாவின் மிக உயரமான மலைச் சிகரம் எது?
(காஞ்சனா சரியான விடையைக் கூறி னார்.)

27. தென் துருவத்தைக் கண்டுபிடித்தது யார்?
(லலிதா சரியான விடையைக் கூறினார்.)

28. உத்தரப் பிரதேசத்தில் உள்ள ரிஹாண்ட் அணைக்கட்டு எந்த நதியின் இடையே கட்டப்பட்டுள்ளது?
(எவரும் விடையளிக்கவில்லை.)

29. Demagogue என்பதற்கும் Orator என் பதற்கும் உள்ள முக்கிய வித்தியாசம் என்ன?
(ராஜஸ்ரீ சரியான பதிலளித்தார்)

30. ஈரான் ஷாவைப் பற்றிய சமீபத்திய செய்தி என்ன?
(இந்துமதி சரியான விடையைக் கூறி னார்.)

(போட்டியின் முடிவில் இந்துமதி அதிக மான மதிப்பெண்களைப் பெற்று கல்கியின் பரிசான ரூ. 50 பெற்றார். அவரது ஐக்யூ மிகவும் சிறப்பாக இருந்தது. கல்லூரி முதல் வர் பரிசை இந்துமதிக்கு வழங்கினார்.

போட்டி முடிந்த பிறகு இக்கல்லூரி மாணவி குமாரி சசிகலாவின் பரத நாட் டியம் நடைபெற்றது. அவரது குரு கே.ஜே. சரஸா நட்டுவாங்கம் செய்ய சசிகலா மிகச் சிறப்பாக ஆடி எல்லோரது பாராட்டுதல் களையும் பெற்றார்.)

விடைகள்

(1) ராகமாலா. (2) Single Lens Reflex (3) சிந்து பைரவி. (4) சீடா ஃபோரியா. (5) ரூ. 50,000 (6) மாட்டுச் சண்டை (Bull fighting) (7) பாரசீகர்கள், அராபி யர்கள், துருக்கியர்களால் முன்பு உபயோ கப்படுத்தப்பட்ட ஒரு வகை வளைந்த கூர் வாள். (8) மரத்தால் செய்யப்படும் இசைக் கருவி. தட்டி ஒலி எழுப்ப வேண்டும்.. (9) டபிள்யூ. ரோட்ஸ் என்ற ஆங்கிலேய ஆட்டக்காரர். இங்கிலாந்துக்காக மேற்கு இந்தியரை எதிர்த்து அவர் 1929-30ல் டெஸ்ட் விளையாடியபோது அவரது வயது 52. (10) கிரிக்கெட் மன்ன பானவர் தரம். (11) தாதா சாகேப் பால்கே. (12) லா பாஸ் (13) டிஜார். (14) ஆஸ்திரேலியா. (15) கமிஷன் ஏதும் கிடையாது. (16) மண்ணில் வளர்க்காமல் நீரில் போஷாக்கு பொருள் களைக் கொண்டு தாவரம் வளர்க்கும் முறை. (17) வால்ட் விட்மன். (Walt whitman) (18) வஸந்தா. (19) உயிரைக் காப்பாற்றும் தீரத்துக்கு அளிக்கப்படும் விருது. (20) புலி. (21) Zend Avesta (22) ஒரு தலைமை நீதிபதி தவிர 17 நீதிபதிகளுக்கு மிகாமல் நியமிக்கலாம். (23) ஜெய்பூர். (24) அகில உலக பெண்கள் தினம் (25) ஒன்றரை மைல். (26) கஞ்சென் ஜங்கா. (27) அமுண்ட்ஸென். (28) ரிஹாண்ட் நதி. (29) சுய நலனுக்கா கவோ கட்சி நலனுக்காகவோ தனது சொல் லாற்றலால் மக்களின் மனத்தைத் திசை திருப்பும் சாமர்த்தியமுள்ள அரசியல் வாதி Demagogue எனப்படுகிறார். ஒரு திறமை மிக்க சொற் பொழிவாளர் Orator எனப் படுவார். (30) தனது இருப்பிடத்தை எகிப்துக்கு மாற்றிக் கொண்டுள்ளார்.

தொகுப்பு: **நாயகன்**
புகைப்படம்: **ராமன்**



அழகும் தரமும் இணைந்த அரிய படைப்பு!
புதிய பிலிப்ஸ் வாலியண்ட்
4-பாண்டு டிரான்ஸிஸ்டர்களில் சிறந்தது
ஒலித் தரமும் உயர்ந்தது!
அரிய அமசங்கள்:
ஒலி, மற்றும் ஓசை நயத்திற்கென அழகிய கண்ட்ரோல்.
வசதியான பாண்ட் தேர்வுக்கென. டீலக்ஸ் க்ரோம் புஷ் பட்டன்கள்.
உருண்டையான குமிழ்.
பாட்டரியி லிருந்து மெயின்ஸுக்கு மாற்றும் வசதி
ரூ.600/-*
பிலிப்ஸ்
*சில்லறை விற்பனை உச்ச-விலை, எக்ஸைஸ் வரி உள்ளிட்டது.
மாநில விற்பனை வரி மேலும் இதர தல வரிகள் தனி.
PHILIPS
CASPR-727-172 TM

மகனுக்குத் தெரிந்தது தந்தைக்குத் தெரியவில்லை

மும்தாஜ் யாசீன்

என்னதான் படித்தாலும் முடிகிறதில்லை. ஒவ்வொரு பரீட்சையின்போதும் ஏதாவது ஒரு சப்ஜெக்டில் இழுத்துக்கொண்டு விடுகிறது. இந்த முறை கணக்கு. குறைந்த பட்சம் பாஸ் மார்க் வாங்குவதற்குக்கூட தங்கராக வாத்தியார் மனசு வைத்தால்தான் உண்டு.

ஏழுமலைக்குக் கலக்கிக் கொண்டு வந்தது பயம்.

கோபத்தில் கத்துவதற்கென்றே அப்பாவிடம் தனியாக ஒரு குரல் இருந்தது. ''என்ன ஏழுவுக்குன்னு சாம்பார்ல தெனம் இவ்வளவு உப்பைக் கொட்டறே?'' என்று அம்மாவை அதட்டுவதற்கும், ''எங்கேடி... அவனைக் காணோம்?'' என்று பெரிய அண்ணனைப் பற்றிக் கேட்பதற்கும் அந்தக் குரலைத்தான் அவர் பயன்படுத்துவார்.

அடுத்த வாரம் ஆண்டுத் தேர்வு ரிசல்ட். அப்பாவின் இரும்புப் பிடியில் மாட்டிக் கொள்ளாதிருக்க வழி செய்யவேண்டும்.

ஏழுமலை வாத்தியார் வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தான்.

''குட்மார்னிங் ஸார்...''

இவன் போனபோது வாத்தியார் தமது மனைவியுடன் பேசிக் கொண்டிருந்தார்.

''என்னடா?'' பதில் வருவதற்குச் சிறிது நேரமாயிற்று.

இவனுக்குச் சங்கோசம். திடீரென்று எப்படிச் சொல்வது என்கிற தயக்கம்.

''வேறென்ன? வழக்கம் போலவே பாஸ் மார்க் போடுங்க சார்னு கேக்க வந்திருப்பான். இல்லையாடா ஏழுமலை?''

வாத்தியார் மனைவி அழகாகச் சிரித்தாள். பல் வரிசை எடுப்பாக இருந்தது.

''ஏண்டா... அப்பா கிட்ட இவ்வளோ பயம் உள்ளவன் ஒழுங்கா படிக்க வேணுமா?''

ஏழுமலை பதில் சொல்லவில்லை.

''நாளைக்கு உனக்கு வாத்தியார் நான்தான்னு கேக்கறவன் சிரிப்பான். எதுல போச்சு?''

''கணக்கு ஸார்...''

''அதிலென்னடா கஷ்டம். ரொம்ப சுலபமாத்தானே இருந்திச்சு...''

''.......''

''உங்கப்பா முகத்துக்காகப் பாக்க வேண்டியிருக்கு. ஒருநாள் சொல்லத்தான்போறேன்!''

ஏழுமலைக்குக் காரியம் கைகூடி வருகிற சமிக்ஞை தெரிந்தது. வாத்தியார் வீட்டுத் தோட்டத்தில் கத்தரிக்காய் முளைத்திருந்தது. பிஞ்சு பிஞ்சாய்க் காய்கள். இடையிடையே ஊதாப் பூப் பூத்து, பார்க்க அழகாயிருந்தது. போன பரீட்சையின்போது சரித்திரப் பாடத்துக்கு பாஸ் மார்க் போடும்படி கேக்க ராமுவும், இவனும் வந்தபோது—சேர்ந்து நட்டது.

''சார்... தோட்டத்துக்குத் தண்ணி பாச்சட்டுமா?''

''அதெல்லாம் வாணும். முத்துச்சாமி வரேன்னிருக்கான். அவன் பாத்துக்குவான். கொஞ்சம் இரு. உனக்கு வேறே வேலை இருக்கு'' என்று சொன்னவர் மனைவியைப் பார்த்து, மளிகை சாமான்லாம் வாங்கணும்னியே குடுத்து அனுப்பறதுதானே? ஏண்டா போயிட்டு வந்துடறியா?'' என்றார்.

''சரிங்க சார்....''

வாத்தியார் மனைவி பையை எடுத்து வர உள்ளே போனாள். ஏழுமலைக்கு ரொம்பவும் சந்தோஷமாக இருந்தது.

இரண்டு நாள்லீவுக்குப்பிறகு முதலியார் ஆபீஸுக்கு வந்திருந்தார்.

வேலைகள் குவிந்திருந்தன. நிறையக் கடிதங்கள்.

பொதுப்பணித் துறையின் கோட்டத் தலைமை அலுவலகம் அது. அதன் கட்டுப்பாட்டின் கீழ் ஜில்லாவின் பல இடங்களில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. வாய்க்கால், குளம், சில்லறை மராமத்துக்கள்....

''நான்தான் ரெண்டு நாளா வரலியே. கடிதங்களையாச்சும் ஒழுங்காவச்சிருப்போம்னு எவனுக்காவது தோணியிருக்கா பாரு...''

முதலியார் எல்லாவற்றையும் பிரித்து அடுக்கினார். அர்ஜெண்ட் — ஆர்டினரி. இரண்டு பைல்களில் கட்டி வைத்தார்.

பெரிய காண்ட்ராக்டர்களுக்குப் பரவாயில்லை. இரண்டு நாள் தாமதமானாலும் தாங்கும். சில்லறை ஆசாமிகளுக்குத் தான் கஷ்டம்! அனுப்பி விட வேண்டும்.



முதலியார் சிவப்பு இங்க் பேனாவைக் கையில் எடுத்துக் கொண்டார்.

இரண்டு பில்கள் முடிவதற்குள் பியூன் ராமகிருஷ்ணன் வந்து கூப்பிட்டான். ''சார்... டி. ஈ. கூப்பிடறார்.''

டி. ஈ. — டிவிஷனல் இஞ்சினியர்.

''என்ன விஷயம்?''

''தெரியலே சார்.''

''யாராச்சும் பார்ட்டி வந்திருக்கா?''

''ஆமா...ரெண்டு பேர் வந்திருக்காங்க.''

''என்ன கம்பெனி?''

''தெரியலே சார்.''

கள்ளப் பயல். இவனுக்கா தெரியாது? முதலியார் எழுந்து போனார்.

''மிஸ்டர் முதலியார்... என்ன தகராறு? இவுங்க பில் ரெண்டு வாரமா நிக்குதாமே!''

முதலியார் ஆசாமிகளைப் பார்த்தார். சமீபத்தில் ஆரம்பித்த பிராஜக்ட் ஒன்றின் பெரிய காண்ட்ராக்டர். போன வாரமே விவரத்தைச் சொல்லி அனுப்பியிருந்தார்.

''சார்... ஏ. இ. யின் சர்டிபிகேட் இல்லாமலேயே பில் வந்திருக்கு. வேலை முடிஞ்சிருச்சா இல்லையான்னு தெரியலே. அதான் எழுதிக் கேட்டிருக்கேன்.''

''என்னய்யா — வேலை முடியாம யாராச்சும் பில் அனுப்புவாங்களா? சர்டிஃபை பண்ணாதது யார் தப்பு? நம்ம பக்கம் தவறை வச்சுக்கிட்டு அவுங்க பணத்தை அனுப்பாம இருக்கிறது என்ன நியாயம்?''


''......''

''வீணா வேலை கெடுது. போங்க... போயி பில்லை பாஸ் பண்ணி அனுப்புங்க...''

''அடுத்த வாரத்துக்குள்ள ஏ. இ. ரிப்போர்ட் வந்திரும் சார். அப்புறமா பாஸ் பண்ணறதுதான் நல்லது. நாளைக்கு ஆடிட்ல.''

''என்னய்யா ஆடிட்? ஃபீல்ட் ஒர்க்கைப் பத்தி அவனுகளுக்கு என்ன தெரியும்? போங்க, உடனே பணத்தை அனுப்புங்க.''

இது விரோதம். சட்டத்துக்கு முரண். எந்த நடைமுறை விதியிலும் இப்படிச் செய்யலாம் என்று சொல்லவில்லை. முதலியாருக்குப் புரிந்தது டி. ஈ. ஆதாயம் இல்லாமல் பேசவில்லை.





அவர்: ''மூன்று மணி நேரம் என்னருகில் இருந்து எனக்கு ஆறுதல் சொன்னானுங்க என் மகன்!''

இவர்: ''அப்படி என்ன கவலை உங்களுக்கு...?''

அவர்: ''மூன்று வருஷமா அவன் பத்தாம் வகுப்பில் பெயிலாகிட்டானேங்கிற கவலைதான்!''

- உ. ராஜாஜி

இவன்களெல்லாம் காரியவாதிகள். தங்கள் லாபத்தைப் பார்த்துக் கொண்டு போய்விடுவான்கள். கடைசியில் மாட்டிக் கொள்ளுவது எவனுவது தலைநரைத்த அப்பாவி ஹெட் கிளார்க்கா?

முதலியாருக்குத் தன்மானம் பொத்துக் கொண்டு வந்தது.

''என்னால் முடியாது ஸார்.''

''முடியாது?'' டி. ஈ.க்குக் கோபம் வந்தது. அன்னிய மனிதர்களுக்கு மத்தியில் தமது அதிகாரம் எடுபடவில்லையே என்கிற கோபம்.

''முடியாது....''

''சரி, பார்க்கலாம் போங்க...''

முதலியார் வெளியே வந்துவிட்டார்.

அடுத்த வாரம்.—

பரீட்சை ரிசல்ட் வந்தபோது ஏழுமலை பாஸ் கணக்கில் நல்ல மார்க்.

அப்பாவிடம் தைரியமாகக் காட்ட முடியும். பள்ளிக்கூடத்திலிருந்து ஒரே ஓட்டமாக வீட்டுக்கு வந்தான்.

''அக்கா... நான் பாஸ்.''

''சீ, சத்தம் போடாம உள்ளே போ.''

ஏழுமலை சமையல் அறைக்கு ஓடினான்.

''அம்மா.... நான் பாஸாயிட்டேன்.''

''இந்த மனுஷருக்கு ஆரு சொல்றது? இவரோட வேலைக்குப் போனவனெல்லாம் ஊர்ல மாமனார் பேர்லேயும், மச்சினன் பேர்லியும் வயலும் மனையும் வாங்கிப் போட்டுண்டிருக்கான். இங்க உள்ளதுக்கே ஆபத்து வந்து நிக்குது. குடும்பம் இருக்கே, பொழைப்பு நடக்கணுமேன்னு கொஞ்சமாவது நெனைப்பு வேணும்?''

''அம்ம்மா... நான் பாஸ்.''

''அது ஒண்ணுதான் கொறச்சல் இப்ப. போடா அப்பாலே.'' அம்மா எரிந்து விழுந்தாள். ''நாளைக்கு உங்கப்பா ஒன்னைக் கலெக்டருக்குப் படிக்க வைப்பாரு. போ.''

ஏழுமலையின் ஆர்வமெல்லாம் சட்டென்று வடிந்தது. வீட்டில் ஏதோ ஒரு அசாதாரண தன்மை இருப்பது புரிந்தது. அப்போதுதான் உள்ளே கவனித்தான். அப்பா படுத்திருந்தார். இந்த நேரத்துக்கு இவர் எப்படி?

''என்னக்கா?''

''ஒண்ணுமில்லே.. அப்பா கோவமா இருக்கார். சத்தம் போடாம வா'' — அக்கா அவனை இழுத்துக் கொண்டு போவதற்காக வந்தாள்.

''யார் எக்கேடு கெட்டா நமக்கு என்ன? ஆபீஸர் சொன்னபடி செஞ்சிட்டுப் போக வேண்டியதுதானே. இப்ப வூட்ல உட்கார்ந்தாச்சு. தர்ம நியாயமா சோறு போடும்? பொழைக்கத் தெரியாத மனுஷர், எனக்குன்னு எழுதி வச்சிருக்கு...''

அம்மா பின்னும் ஏதோ புலம்பிக்கொண்டிருந்தது திண்ணைக்குக் கேட்டது. பாத்திரங்கள் ''ணங்... ணங்'' என்று தரையில் மோதின.

''என்னக்கா?'' ஏழுமலை மறுபடியும் கேட்டான்.

''ஒண்ணுமில்லேடா...''

''சொல்லுக்கா....''

விஜயா கொஞ்ச நேரம் பிகு செய்து கொண்டாள். பிறகு சொன்னாள்.

ஆபீஸ் மேலதிகாரி ஏதோ சொன்னதற்கு அப்பா செய்யவில்லையாம். அதனால் அவரை வேலையிலிருந்து கொஞ்ச நாட்கள் நிறுத்தி வைத்திருக்கிறார்களாம்.

ஏழுமலைக்குப் புரியவில்லை.

தனக்கு வாத்தியார் மாதிரிதானே அப்பாவுக்கு மேலதிகாரி. இது ஏன் அப்பாவுக்குத் தெரியவில்லை?

கையிலிருந்த கணக்குப் பேப்பரைப் பார்த்தபடியே யோசித்துக் கொண்டிருந்தான் ஏழுமலை.



''மீன்கள் சாப்பிட வேண்டும் என்றால் ரயில் தண்டவாளத்திற்குத்தான் போகும்!''

''ஏன் அப்படி?''

''அங்கேதானே fish plate இருக்கிறது!''

- பிரியாபாலு

நம்பிக்கைகள்



குந்தி தேவி கிருஷ்ண பரமாத்மாவிடம் ஒரு வரம் கேட்டாள்: ''கிருஷ்ணா! நீ எனக்குக் கஷ்டங்களையே கொடுத்துக் கொண்டிரு. அப்போதுதான் நான் உன்னை மறந்துவிடாமல் நினைத்துக் கொண்டே இருக்க முடியும்'' என்று.

வெய்யிலில் செல்கிறவனுக்குத்தான் நிழலின் அருமை நன்கு தெரிகிறது. கடும் பசியோடு இருப்பவன், உணவை மகிழ்ச்சியோடு உட்கொள்கிற மாதிரி பசியற்றவன் உட்கொள்வதில்லை.

தன்னுடைய சகல முயற்சிகளையும் மனிதன் செய்தான பிறகுதான் ''தெய்வம் ஒன்று உள்ளது'' என்ற எண்ணம் தோன்றுகிறது; அந்த மகா சக்தியை நாடி நிற்க வைக்கிறது.

பள்ளியில் படிக்கிற மாணவன் பல நாட்கள் படித்தாலும் தேர்வு எழுதிய பின் முடிவுக்காகக் காத்திருக்கிற மாதிரி ஒவ்வொரு மனிதனும் கடவுளின் அருளுக்காகக் காத்திருக்க வேண்டும்.

இறைவன் இருக்கிறான் என்ற எண்ணம் உறுதிப்பட்ட 'பிறகுதான், அவன் இருக்கிறானா இல்லையா என்கிற ஆராய்ச்சியே பிறந்தது.

ஆறறிவு பெற்ற மனிதர்களுக்கும் குறைவான அறிவு பெற்ற விலங்கினங்களுக்கும் இடையேயுள்ள பெருத்த வேறுபாடு தெய்வத்தை அறியக் கூடிய இயல்பு உள்ளமை தான்.

விலங்குகளுக்கு உடலில் இயற்கையாகத் தோன்றுகிற பசி முதலான உணர்வுகளைத் தவிர வேறு உணர்ச்சிகள் அவற்றுக்கு இல்லை. மனிதனுக்குக் கிடைத்த பாக்கியம் இறையுணர்வு.

மனிதனுடைய நிலை உணர்ச்சி வசப்பட்ட நிலை. அதுவே இறைவன்பால் உண்டாகும் போது ''பக்தி'' என்று சொல்லப்படுகிறது. மற்ற உணர்ச்சிகளுக்கு எல்லை உண்டு. பக்தி உணர்ச்சி அப்படி இல்லை. அதன் வளர்ச்சிக்கு முடிவில்லை.

வேறு வகையான எண்ணங்களுக்கு இடம் தராத தாய்மையான பக்திதான் சிறப்பானது. கன்றுக்கும் பசுவுக்கும் இடையேயுள்ள உறவு போல் நமக்கும் கடவுளுக்கும் இடையே இருக்கிறது. ''பக்த வத்சலன்'' என்கிற திருநாமம் கடவுளுக்கு இதன் காரணமாகவே அமைந்தது.

இறைவன்பால் கொண்டுள்ள உணர்ச்சிகள் என்கிற பாவ பக்தி முதிர்ந்து இருக்குமானால் அதுவே ஞானம் எனப்படுகிறது. மெய்யறிவு என்று பொருள்.

மகான்களும் ஞானிகளும் தங்கள் வாழ்க்கையை ஓரளவு விலங்குகளுக்கு ஒப்பாகவே பழக்கிக் கொண்டு விடுகிறார்கள். விலங்குகளுக்குக் கவலைகள், தேவைகள் இல்லாதது போலவே இவர்களுக்கும் இல்லை.

இயற்கை நடைமுறையில் விலங்குகளைப் போலவே வாழப் பயின்று, அதே நேரத்தில் அவற்றுக்கு இல்லாத இறையுணர்வையும் உள்ளூற வளர்த்துக் கொண்டு தங்கள் வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக் கொண்டு, அது முடிந்ததும் மீண்டும் பிறவாத நிலையை எய்துகிறார்கள்.


அவதூதர்கள், ஜீவன் முக்தர்கள் என்று சொல்லப்படும் இவர்களால் நமக்கென்ன பயன் என்று கேட்கலாம். இவர்கள் தங்களுக்குள் வளர்த்துக் கொண்ட ஆத்ம சக்தியின் பலம் நமக்கு அருளாசியாக, எல்லாரும் இன்பமடைய வழங்கப்படுகிறது.

ஆத்ம பலம்தான் மனிதனின் உண்மையான சக்தி. இது எல்லோரிடத்திலுமே உள்ளது. இதை மனிதன் வளர்த்துக் கொள்ள வேண்டும். மனிதன் உய்ய வேண்டும் என்றுதான் இதையும் உபநிஷத்துக்களும் சொல்கின்றன.

-ஸ்ரீ டி. எஸ். பாலகிருஷ்ண சாஸ்திரிகள் கூறியவற்றிலிருந்து தொகுத்தளித்தவர்
-சுப்ரபாலன்.

ஊறுகாயே
உணவா?
ஸ்பென்ஸர்ஸ்
ஊறுகாய்
என்றால்

அப்படித்தான்
அடிக்கடி ஆகிவிடுகிறது



S 2833A TAM

ஸ்பென்ஸர் & கோ. லிட். சென்னை

அழகிய குளியலறைக்கு முற்றிலும் தேவை

நெய்சரின் தனித்தன்மை வாய்ந்த டிசைன்கள், வண்ணங்கள் — அதனுடன் சேரட்டும் உங்கள் கற்பனை வளம்



இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் நெய்சரின் நம்பகமான கண்கவர் சாதனங்களை அழகிய வீடுகளில் காணலாம்.

குளியலறைகளில் உங்கள் கற்பனைத் திறனின் முத்திரையும் இருக்கட்டும் —

அழகிய அமைப்புகள், புதுமையான விளக்கொளி இவைகள் பின்னணியில், வண்ண வண்ண மலர்களில் நெய்சர்.



Neycer

நெய்சர் —
அழகிற்கு அழகு செய்யும்,
நீடித்து நிற்கும்.

OBM 6036.TM

ஷரீப் வழங்கும் சீறாப்புராணம்



இரவு மணி பத்து.

வட சென்னைப் பகுதியில் உள்ள அங்கப்ப நாயக்கன் தெருவின் வட கோடிப் பகுதியிலுள்ள சுதாப் பள்ளி வாசலின் உள்ளிருந்து இனிமையும் கம்பீரமும் கலந்த கர்நாடக இசை அலை பாய்ந்து வருகிறது. "உள்ளே சீறாப் புராண விரிவுரை நடக்கிறது. நீங்களும் வரலாம். அமர்ந்து ரசிக்கலாம்" என்று நண்பர்கள் சிலர் உள்ளே அழைத்துப் போகிறார்கள்.

அடேயப்பா! அமைதி என்ற உருவமற்ற உணர்ச்சியை நேரடியாக உணர்ந்து அனுபவிக்கக் கூடிய அமைப்புக் கொண்டிருக்கிறது அந்தப் பள்ளி வாசல். முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த பல இளைஞர்களும் முதியவர்களும் அந்த மண்டபத்தில் சிலைகளாகச் சித்தங்களை ஒருங்கிணைத்து அமர்ந்திருக்கிறார்கள்.

சாரீர வளத்தைப் பிரமிக்கும்படி பெற்றிருக்கும் கன்னியாகுமரி அபூபக்கர் சீறாப் புராணத்தின் அடிகளை இதய பூர்வமாகப் பாடி நிறுத்துகிறார்.

செவிகளைக் கவ்விய அந்த நாத இன்பத்தைத் தொடர்ந்து அதற்கான விளக்கங்களைச் சிந்தையைக் கவ்வுமாறு கவிஞர் கா. மு. ஷெரீஃப் எளிமையான தமிழில் ஏராளமான உதாரணங்களுடன் கொடுக்கிறார். இந்த நிகழ்ச்சி இரவு பதினொரு மணி வரை நடந்து முடிகிறது. தொடர்ந்து எட்டு நாட்கள் நடக்கிறது.

அந்தச் சூழ்நிலையின் புனித எளிமையையும் அது அளித்த மன நிறைவையும் அனுபவித்துப் பார்த்தால்தான் தெரியுமே ஒழிய வார்த்தைகளால் அதை உணர வைப்பது கடினம்.

பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் மகா கவி உமறுப் புலவர். கீழக்கரையைச் சேர்ந்த அவர் எட்டயபுர சமஸ்தானத்தில் ஆஸ்தான கவிஞராக இருந்திருக்கிறார். தமிழில் பல நூல்களை இயற்றியிருக்கிறார். சீறாப் புராணம் அவருடைய தலைசிறந்த படைப்பு. அல்லாஹ்வின் தூதரான நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றிய நூல்.

அவர் ஆரம்பித்த சீறாப் புராணத்தில் 5027 கவிதைகள் வரை எழுதினார். வரலாறு முற்றுப்பெறவில்லை. அதற்குள் அவர் காலம் முற்றுப் பெற்று விட்டது.

'சின்னச் சீறா' என்று பிற்காலத்தில் அழைக்கப்பட்ட பனி அகமத் என்ற கவிஞர் இந்த வரலாற்றுப் பணியை மேலும் தொடர்ந்து 2200 கவிதைகளைச் சேர்த்து முடித்து வைத்தார். இவரும் கீழக்கரையைச் சேர்ந்தவர்தான்.

தேசியப் பரம்பரையில் வந்த கவிஞர் கா.மு. ஷெரீஃப் மற்ற மார்க்கங்களின் காப்பியங்களையும் இலக்கியங்களையும் நன்கு கற்று உணர்ந்தவர் இஸ்லாமிய நூல்களிலும் நிறைய ஆராய்ச்சி செய்திருக்கிறார். அவருடைய விரிந்த ஆற்றல் பல மேற்கோள்களைக் காட்டும் போது வெளியாகிறது.

சில வருடங்களுக்கு முன் கவிஞர் ஷெரீஃப் தன் கண் கோளாறு போக அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள வேண்டியிருந்தது. மீண்டும் பார்வை சரியான முறையில் கிடைத்துவிட்டால் நபிகள் நாயகத்தின் பெருமையைச் சொல்லும் சீறாப் புராணத்தை அழைக்கும் இடங்களிலெல்லாம் சென்று சொல்லுவேன் என்று மனத்திற்குள் பிரார்த்தனை செய்து கொண்டார். அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது.

உடனே திருச்சி மாவட்டத்தில் உள்ள இளம் குளத்தூர் என்ற ஊரில் சீறாப் புராணம் விரிவுரையாற்ற வாய்ப்பும் கிடைத்தது. வேதநாயகம் பிள்ளை பிறந்த ஊர். இலக்கிய முக்கியத்துவம் வாய்ந்த ஊர். அங்கே ஒரு வாரம் தொடர்ந்து விரிவுரையாற்றினார்.

இப்போது ஏறத்தாழ நூறு முறைகளுக்கு மேல் இந்தப் பணியைப் பல ஊர்களிலும் செய்து விட்டார். இன்னும் எத்தனை நூறு தடவைகள் வேண்டுமானாலும் செய்யக் காத்திருக்கிறார். அபூபக்கரின் இசையும் ஷெரீஃபின் உரையும் வெகு இதமாக இணைந்து கேட்பவர்களைப் பரவசப்படுத்துவதுடன் புனிதப்படுத்தவும் செய்கிறது.

இதோ ஒரு சிறு உபகதை:

நபிகள் நாயகத்தின் காலத்துக்குப் பிறகு அவர் உபதேசங்களைப் பின்பற்றி நாட்டை ஆள பல கலிஃப்கள் வரிசையாக வந்தார்கள். அபூபக்கர் சித்திக் அவர்களில் ஒருவர். நேர்மையின் உருவம்.

ஒரு மாதத்தில் அவர் வாங்கிய சம்பளத்தில் குடும்பத்துக்கான அத்தியாவசியச் செலவுகள் போக ஐந்து நாணயங்கள் மிச்சமாகிவிட்டன. மறு மாதம் அவர் அந்த ஐந்து நாணயங்களைக் கஜானாவில் கட்டிவிட்டு 'இனி எனக்கு மாதா மாதம் ஐந்து நாணயங்களைக் குறைவாகவே கொடுங்கள். என் குடும்பச் செலவுக்குப் போதும்' என்று சொல்லி விட்டாராம். ஜனாதிபதியின் அந்தஸ்தில் இருந்தவர் அவர்.

இப்படி இன்னும் எத்தனையோ உயர்ந்த கருத்துக்களை, நீதிகளை உணர்த்தும் சம்பவங்கள் நிறைந்தது சீறாப் புராணம். அவைகளை எளிமையாகவும், இதமாகவும் எடுத்துச் சொல்வதில் கைதேர்ந்த கவிஞராக இருக்கிறார் கவிஞர் கா. மு. ஷெரீஃப்.

- கோமதி சுவாமிநாதன்





“ஹே வான்ட்டு மேரி”

—ராஜம் ராஜாமணி—

சென்னையிலிருந்து எர்ணாகுளம் போகும் ரயிலில் முதல் வகுப்பில் உட்கார்ந்திருந்தேன். கையில் ஹெரால்ட் ராபின்ஸின் 'பெட்ஸி' இருந்தது. கண்கள் என்னவோ எழுத்துக்களில் மேய்ந்து கொண்டிருந்தாலும் மனம் ஒன்றையாவது வாங்கிக் கொள்ளவில்லை. ''இப்போது இந்தப் பயணம் அவசியம் தானா? அங்கு போய் என்னத்தைச் சாதிக்கப் போகிறாய்? இருபத்தைந்து வருஷங்களுக்குப் பிறகு எதை எதிர்பார்த்து அங்கு போகிறாய்?'' என்று மனம் கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டு என்னைத் துளைத்துக் கொண்டிருந்தது. வண்டியி லிருந்து இறங்கி விடலாமா என்று கூட யோசித்தேன். ஆனால் ஏதோ ஒன்று என்னைக் கட்டிப் போட்டது போலிருந்தது. மனத்தில் இந்த 'டிபேடிங்' முடிவதற்குள் வண்டி பிளாட்பாரத்தை விட்டு நகரத் தொடங்கியது.

எர்ணாகுளத்தில் ஒரு காரியமும் இல்லை. பழைய நினைவுகளின் வேகத்தில் உந்தப்பட்டு சனி, ஞாயிறு விடுமுறைக்கு அங்கு ஓடிப் போய்க்கொண்டிருக்கிறேன்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் இதே போல் சென்னையிலிருந்து எர்ணாகுளம்தான் போய்க் கொண்டிருந்தோம். அப்போது முதல் வகுப்பில் இல்லை. மூன்றாம் வகுப்பில். ஒரு கம்பார்ட்மென்டையே நாங்கள் ரிசர்வ் செய்துகொண்டு எம். ஏ. முதலாண்டு மாணவர்கள் முப்பது முப்பத்தைந்து பேர் கேரளத்திற்குத் தாவர இயல் ஆராய்ச்சிக்காகப் போய்க் கொண்டிருந்தோம். பாட்டும் கூத்துமாக ஒரே கும்மாளம். கம்பார்ட்மென்டே இரண்டுபட்டுக் கொண்டிருந்தது. என் நண்பன் மாதவனுக்கு ஒரே குஷி. அது அவன் ஊராயிற்றே! தன் நண்பர்களையும் ஆசிரியர்களையும் அழைத்துக் கொண்டு போவதில் அவனுக்கு ஒரே பெருமை. அவன் என் உயிர் நண்பன். சாதாரணமாக நான் கொஞ்சம் ரிஸர்வ்ட்டைப். இன்ட்ரோவர்ட் என்பார்களே, அப்படி. யாருடனும் அதிகம் பேசமாட்டேன். அவன் எனக்கு நேர் மாறுதல்! பேசாதவர்களைக் கூடப் பேச வைத்துவிடுவான். எதிரெதிர் குணங்களில் ஈர்க்கப் பட்டுத்தானோ என்னவோ நாங்கள் இணைந்து விட்டோம். அவன் குடும்பத்தைப் பற்றி எல்லாம் எனக்குத் தெரியும். என்னைப் பற்றியும் அவனுக்குத் தெரியும். எர்ணாகுளத்துக்கருகில் சேப்பணங்காரா என்ற கிராமம் தான் அவனுடையது. எர்ணாகுளத்திலிருந்து படகில் போக வேண்டும். அங்கு அவர்களுக்கு நிறையத் தென்னந் தோப்புகளும் மிளகுத் தோட்டமும் வாழைத் தோட்டமும் இருந்தன. தந்தை இல்லை. தாயாரும், வயதான பாட்டியும் இருந்தனர். ஒரு தங்கை. பார்வதி பேராகி. இதெல்லாம் அவன் சொல்லி நான் அறிந்து கொண்ட விவரங்கள்.

அவன் மீது அவன் உயிரையே வைத்திருந்தான். பேச்சுக் கொரு தரம் 'என்டெ பாரு' என்ற வார்த்தை அடிபடாமல் இராது. பாருக்குட்டியைப் பற்றி அவனுக்கு என்னென்ன தெரியுமோ அவை யெல்லாம் எனக்கும் தெரியும். சிவப்பு புடவை அவளுக்கு மிகவும் பிடிக்கும். மல்லிகை என்றால் அவளுக்கு உயிர். பாடினால் இன்றைக்கெல்லாம் கேட்டுக் கொண்டே இருக்கலாம். அவியலும் சக்கப் பிரதமனும் அவள் செய்து சாப்பிட வேண்டும். எல்லாம் எனக்குத் தெரியும். அவள் மீது எனக்கொரு மானஸீகக் காதலே பிறந்து விட்டது. மாதவனை விட அவளை முதலில் சந்திக்கப் போகிறோம் என்று எனக்குத்தான் அதிக இன்பப் பரபரப்பு உண்டாகியிருந்தது. எர்ணாகுளத்தில் இருந்த மூன்று நாளும் சேப்பணங்காராவில் தங்கியிருக்க அவனோடு எனக்கும் அனுமதி வழங்கியிருந்தார் எங்கள் புரொபஸர். எர்ணாகுளத்திலிருந்து திருவனந்தபுரம் கிளம்புவதற்கு முதல் நாள் அவன் வீட்டில் அனைவருக்கும் விருந்து. இப்படி எல்லாமே முதலில் திட்டமிடப்பட்டு விட்டன.

மகாராஜாஸ் கல்லூரியில் எல்லோரையும் இறக்கி விட்ட பின், நானும் மாதவனும் ஒருசில துணி மணிகளை பையில் அடைத்துக் கொண்டு போட் ஜெட்டிக்குப் போனோம். டிக்கெட் எடுத்துக்கொண்டு தயாராக இருந்த படகில் ஏறினோம்.

அரை மணிப் பயணம்தான். தென்னையும் வாழையும் மிளகும் போட்டி போட்டுக் கொண்டு நெருங்கிப் படர்ந்திருந்த பசுமையானதொரு சிறிய தீவு சேப்பணங்காரா.

இரட்டையில் வெளுத்த முண்டு. சிவப்புச் சோளி. வாளிப்பான உடல். தாழம்பூ மேனி. எண்ணெய் குளித்த ஈரக் கூந்தல். கருஞ்

கருளாக இடைவரை விரிந்து படர்ந்திருந் தது. மையிட்ட நீள் நயனங்கள். படகையே ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தன. பாருக்குட்டி எங்களைப் பார்க்கு முன்பே நான் அவளைப் பார்த்துவிட்டேன். மாதவன் வர்ணனையை விட, போட்டோவில் பார்த்ததை விடப் பேரழகி அவள். செயலற்றுப் படகி லிருந்து இறங்கக் கூட மறந்து விழித்து நின்றிருந்தேன்.

''அம்மே! சேட்டன் வந்நு... சேட்டன் வந்நு....'' என்று கூவிக் கொண்டே துள்ளி ஓடினாள் அவள்.

''தே, பாருக்குட்டி, இவ்விட வரு'' மாதவன் கத்தினான். ஓடியவள் நின்று திரும்பினாள். மயிலின் ஒயிலோடு.

''இதே, என்டே ப்ரெண்டு ராகவன். இவளாணு என்டே அனுஜத்தி பாருக் குட்டி'' என்று எங்களை அறிமுகப்படுத்தி வைத்தான்.

அவள் அழகாகக் கரம் கூப்பினாள். அவளது ஒவ்வொரு செயலிலும் அழகின் முத்திரையைக் கண்டு அதிசயித்தேன் நான்.

நாற்புறமும் முற்றம். நடுவில் வீடு. ஓட்டுக் கூரை தான். விசாலமான கூடம். வராந்தாவில் நாங்கள் அமர்ந்தோம். மாதவனின் தாய் வணக்கம் சொல்லிவிட்டு எங்களுக்குத் தேனீர் தயாரிக்க உள்ளே போனாள். மாதவனும் கூடவே போனான். பாருக்குட்டியும் நானும் மட்டும் உட்கார்ந்திருந்தோம். என்ன பேசுவதென்றே தெரியவில்லை. எனக்கு முத்து முத்தாக வியர்த்தது.

''கத்து எழுதும்போளெல்லாம் சேட்டன் நிங்களைப் பற்றி எல்லா விவரங்களும் எழுதிட் டுண்டு.'' பாருதான் பேசினாள்.

''அ....அஃ...'' நான் திணறினேன்.

''சாருக்கு மலையாளம் மனஸிலாகுவோ''— பாரு கலகலவென்று அருவி போல் சிரித்தாள்.

''ஆகும். மாதவன்டே கொறைய படிச் சிட்டுண்டு.''

அடுத்த நாள் காலை நான் கண் விழிக்கும் போது எங்கோ இனிய பாட்டுக் குரல் கேட் டுக்கொண்டிருந்தது. குரல் வந்த திசையை நோக்கி நடந்தேன். விரித்த குழல் முதுகில் புரள முண்டும் தோர்த்தும் உடுத்து, புழைக் கரையில் உட்கார்ந்திருந்தாள் பாருக் குட்டி. கால்கள் நீரில் அளைந்து கொண் டிருந்தன. எதிர்த் திசையை நோக்கி யிருந்த தால் பின்னால் வந்த என்னைக் கவனிக்கவில்லை. திடுக்கிட்டுத் திரும்பியவள் ''நிங்களோ? ஞான் பேடிச்சுப் போயி!'' என்று எழுந்தாள்.

எங்கள் பேச்சு வளர்ந்தது. எர்ணாகுளத் திலிருந்த மூன்று நாட்களும் மூன்று நொடி யாகப் பறந்தன. பாட்டனி கலெக்ஷனுக்காகக் காடு மேடெல்லாம் சுற்றினோம். சமயம் வாய்க்கும்போதெல்லாம் நானும் பாருவும் தனியாகப் போய் ஏதேதோ பேசினோம். எங்கள் நட்பை மாதவனும் வரவேற்கிறான் என்று புரிந்தது. புறப்படும் நாளும் வந்தது பாருவின் முகத்தில் சுரத்தே இல்லை. தென்னந் தோட்டத்தில் நாங்கள் வழக்க மாக உட்காரும் இடத் தில் அவளைச் சந்தித் தேன்.

''பாரு! நான் வரட்டே!''

''என்னை மறக்க ருது. எப்போள் திரிச்சு வரும்?''

''வேகம் வரும். உன்னைக் கல்யாணம் கட்டிக்கான்.''

அவள் முகம் சிவந்து குனிந்தாள். பட்டுக் கன்னங்களைத்தொட்டு



முகத்தை திருப்பினேன். அவள் விழியோரங்களில் நீர்.

''இதெந்தா பாரு. எத்தினு கரையுன்னது?''

''நிங்கள் வந்தில்லெங்கில் நான் ஜீவிச்சிருக்குக இல்லா.''

அவளது கொவ்வை இதழைக் கையால் மூடினேன். அவளிடம் பிரியா விடை பெற்றுப் பிரிந்து வந்தேன்.

நாட்கள் உருண்டன. பரீட்சை முடிந்தது. அவரவர் ஊருக்குப் புறப்பட்டோம். வீட்டில் சொல்லிச் சம்மதம் பெற்று விரைவில் பாருவை மணக்க வருவதாகச் சொல்லி மாதவனிடம் விடை பெற்றேன். நான் எத்தனை கோழை என்பதை நான் அப்போது உணர்ந்திருக்கவில்லை. மனத்தில் பாருவைப் பற்றிய ஆயிரமாயிரம் கனவுகளோடு ரயிலேறினேன்.

எங்கள் ஊர் மாயவரம். அங்கு என் தந்தை ஒரு பெரிய மிராசுதார். நான் ஒரே பிள்ளை. எனக்கு ஒரு அக்கா. அவளுக்குத் திருமணமாகிக் கும்பகோணத்தில் இருந்தாள். அதுவும் பெரிய இடம். என் காதலுக்கு வீட்டில் அனுமதி கிடைக்குமா என்று குழப்பமாக இருந்தது. என் தந்தை மகா கோபக்காரர். எலேலே சிறு வயதிலிருந்தே அவரோடு நேரில் பேசி அறியாதவன் நான். இத்தனை பெரிய விஷயத்தை எப்படிச் சொல்லப் போகிறேன் என்று படபடப்பாக இருந்தது. மாயவரம் சேந்தங்குடி அக்ரஹாரத்தில் உள்ள எங்கள் வீட்டை அடைந்த போது எனக்குப் பெரிய அதிர்ச்சி காத்திருக்கும் என்று நான் நினைக்கவே இல்லை. வீட்டில் அக்கா, அத்திம்பேர் யாவரும் வந்திருந்தார்கள். விஷயம் தெரிய வந்தபோது நான் துடித்து விட்டேன். இரண்டு நாட்களில் எனக்கு நிச்சயதார்த்தம். தஞ்சாவூரில் உள்ள எங்கள் தூரத்து உறவினர் பெண் ஜானகிதான் மணப் பெண். பார்க்க லட்சணமாக இருப்பாள். படித்திருக்கிறாள். நான் அவளைப் பார்த்திருக்கிற காரணத்தால் எனக்கு எவ்வித ஆட்சேபணையும் இருக்காது என்று ஏற்பாடுகளை முடித்திருக்கிறார்கள். எப்போதுமே எதிர்த்துப் பேசி அறியாத நான் இப்போது எப்படிப் பேசுவேன்? வாழ்வில் முக்கியமான திருப்பு முனையில் கூட ஊமை

''நிலையான அரசு அமைய எங்கள் சின்னத்தில் முத்திரையிடுங்கள்.''

''என்ன சின்னம்?''

'' 'தஞ்சாவூர் பொம்மை' சின்னம்!''

- வெ. சீதாராமன்



யாய் உட்கார்ந்து விட்டேன். கல்யாணக் கடிதம் மாதவனுக்கு அனுப்பத் துணிவு வரவில்லை எனக்கு. கல்யாணம் முடிந்த பிறகு எல்லாம் விவரமாக எழுதி என்னை மன்னிக்குமாறு கோரினேன். பதிலே இல்லை.

விவசாய இலாக்காவில் வேலை ஏற்று டெல்லி சென்று விட்டேன். காலவெள்ளத்தில் கற்பனைக்கிடமின்றி யந்திரமாக இயங்கினேன். மூன்று குழந்தைகளையும் பெற்று விட்டேன். பெண்கள் இருவரும் மணமாகி அமெரிக்காவில் இருக்கின்றனர். பையன் ஐ. ஏ. எஸ். பாஸ் பண்ணிவிட்டு வேலைக்கு ஆர்டருக்குக் காத்திருக்கிறான். இன்னும் நான் அதிகம் பேசுவதில்லை. வீட்டு மேற்பார்வை யெல்லாம் ஜானகிதான். குழந்தைகள் எது வேண்டுமானாலும் அவளிடம் தான் கேட்பார்கள். என் பிள்ளைப் பருவத்துக் காதல் என் மனத்திலிருந்து அகலவேயில்லை. எத்தனையோ முறை சென்னை போகும்போதெல்லாம் எர்ணாகுளம் போகத் துடிக்கும். துணிவின்றித் திரும்பி விடுவேன். இப்போது நாற்பத்தி ஏழு வயதில் துணிவுடன் போகிறேன். எதை எதிர்பார்த்து? எனக்கே தெரியவில்லை.

படகில் தனியாக ஒரு மூலையில் அமர்ந்து சேப்பணங்கரா வரும் வரை கனக்கும் இதயத்தோடு வீற்றிருந்தேன். அன்று எங்கள் வரவை எதிர்பார்த்துப் பாருக்குட்டி நின்றிருந்த தோற்றம் பசுமையாய் மனக் கண் முன் விரிந்தது. இப்போது எங்கிருக்கிறாளோ? அவள் கணவர் எப்படி இருப்பார்? மாதவன் என்ன செய்துகொண்டிருப்பான் என்றெல்லாம் எண்ணங்கள் ஓடின. முற்றத்தில் நின்று கொண்டு குரல் கொடுத்தேன்.

''ஆராணு நிங்கள்?''

''மாதவண்டே வீடல்லே இது!''

''அதே!''

''மாதவன் உண்டோ''

''நிங்கள் ஆராணு அகத்து வரு.''

கண்ணை இடுக்கிய வண்ணம் ஒரு மூதாட்டி வெளியே வந்தார். மாதவனின் தாயார்தான் அது. காலம் அவர் மீது விளையாடியிருந்தது.

கல்யாணி அம்மாள் சொன்ன கதை என்னைக் கலங்க அடித்து விட்டது. என் இருமணம் பற்றி நான் எழுதியிருந்த கடிதம் கண்டு மாதவன் கோபத்தில் துள்ளிக் குதித்தானாம். பாருதான் ''அப்பா, அம்மா பேச்சைத் தட்ட முடியாமல் கல்யாணம் பண்ணிக் கொள்ள நேர்ந்தால் அவர் மீது கோபித்து என்ன பயன்?'' என்று சமாதானப்படுத்தினாளாம். கல்யாணமே வேண்டாம் என்று தான் இருந்தாளாம். பிறகு எல்லோரும் சொல்லிக் கட்டாயப்படுத்தியதன் பேரில் ரவீந்திரனை மணந்து கொண்டிருக்கிறாள். திருவனந்தபுரத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டராக இருந்தானாம். திருமண போட்டோவைக் காட்டினார். கம்பீரமான தோற்றம். என்னைவிட எல்லா விதத்திலும் பாருவுக்குப் பொருத்தமானவன்தான். பாருவின் விழிகளில்தான் எனக்கு மட்டுமே புரிந்த சோகம் தெரிந்தது. குற்ற உணர்வுடன் போட்

டோவை மேஜை மீது வைத்தேன். மண மான மறு ஆண்டே மாதவி பிறந்தாளாம். மாதவிக்கு ஒரு மாதம் ஆனபோது ரவீந்தரன் அவர்களை அழைத்துச் செல்ல லீவில் வந்திருக்கிறான். குழந்தையை வீட்டில் விட்டுவிட்டு மாதவனுடன் இருவரும் ஆல்வாய் வரை பிக்னிக் போனார்களாம். பெரியாறில் படகில் போகையில் என்ன நேர்ந்ததுஎப்படி நேர்ந்தது என்று தெரியாது. படகு கவிழ்ந்து மூவரையும் மூன்று நாட்கள் கழித்துப் பிணமாகத்தான் பார்த்தார்களாம்.

''இக் கொச்சுக் குட்டிக்காக வேண்டி ஞான் ஜீவிச்சிருக்குன்னு. அச்சனும் அம்மையும் இல்லாத இக்குட்டிக்கு ஒரு நல்ல பர்த்தா கிட்டிக் கழிஞ்சால் எண்டே ஜீவனும் போய்க் கழியும்'' கரகரத்த குரலில் அவர் கூறி முடித்தார். மாதவி சாயா கொண்டு வந்தாள்.

அக் குழந்தையைப் பார்க்கும்போது என் மனத்தில் பாசம் பொங்கியது. 'என் பாருவின் மகள்' என்ற உணர்வில் அவளை அருகில் அழைத்து அமரச் சொன்னேன்.

''நிண்டே அம்மாவண்டே சிநேகிதராணு. அம்மையையும் அறியும்'' என்றான் கல்யாணி அம்மாள்.

''ஓ!'' அதற்கு மேல் அவள் ஒன்றும் சொல்லவில்லை.

''அம்மா! அன்று நான் பாருக்குட்டிக்குத் துரோகம் செஞ்சிட்டேன். பிராயச் சித்தம் நிச்சயமாயிட்டுச் செய்வேன். அதான் குருவாயூரப்பன் என்னை இத்தரை காலம் கழிச்சி இவ்விடம் கொண்டு வந்து விட்டுண்டு. மாதவியோட கல்யாணம் எண்டே மகனோட கூட நடக்கும்'' என்று ஏதோ சபதம் செய்வது போல் கூறினேன்.

கல்யாணி அம்மாள் விரக்தியாகச் சிரித்தாள். ''ராகவன், நீ எண்டே மாதவன் போலத் தன்னே எனிக்கி. பாருக்கு நீ யாதொரு துரோகமும் செஞ்சில்லா. கல்யாணம் தெய்வ சித்தம். நீ விசனிக்காண்டா. மாதவிக்கு பர்த்தா இனி ஜனிக்கான்போகுக இல்லா. நிண்ட மகனோட இஷ்டம் இல்லாண்ட கல்யாணம் எங்ஙனம் நடக்கும்'' என்றாள்.

அவரது கேள்வி என்னைத் தூக்கி வாரிப் போட்டது.

• • •

டில்லி போகும் வரை என் மகன் சங்கர் என் வார்த்தையைத் தட்ட மாட்டான் என்று தீவிரமான நம்பிக்கை இருந்தது. ஸ்டேஷனுக்குச் சங்கர் காரோடு வந்திருந்தான்.

''ஹலோ டாடி, ஹவ் ட்ரெயின் ஜர்னி?''

''கம்மாதான் ரிலாக்ஸ்டா வரணும் போலிருந்தது'' என்றேன்.

''டாடி, மீட் ஆர்த்தி. திஸ் இஸ் மை டாட்''

அதுவரை அவனருகில் நின்று கொண்டிருந்த அந்தப் பெண்ணைக் கவனிக்கவில்லை. அடிவயிற்றில் ஏதோ சங்கடம் விரைந்தது.

''நமஸ்தே!'' என்று அழகாகக் கைகூப்பினாள் அவள்.

''டாடி, ஆர்த்திக்கும் எனக்கும் காலேஜ் படிக்கும் போதிருந்தே பழக்கம். நேஷனல் ஆன் இன்டீரியர் டெகரேட்டர். அவள் அப்பா மிஸ்டர் குப்தாவும் ஒரு இன்டீரியர் டெகரேட்டர்தான். அப்பாவின் கம்பெனியிலேயே இவளும் வேலை பார்க்கிறாள். வி லவ் ஈச் அதர். வி வாண்ட் டு மேரி ஸூன். என் வேலை ஆர்டர் வந்த பிறகு உங்களிடம் சொல்லணும்னு காத்திருந்தேன்.''

எத்தனை கம்பீரமாக, தன்னம்பிக்கையுடன் என் மகன் பேசுகிறான்! பிரமித்துப் போய் நடந்து கொண்டிருந்தேன். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் இதே போல் எர்ணாகுளத்திலிருந்து திரும்பியபோது என்னால் பேச முடிந்திருந்தால்... என் மகனைப் பார்க்கையில் எனக்குப் பொறாமையாகக் கூட இருந்தது.

நடந்து கொண்டிருந்தவன் அப்படியே நின்றேன் ஒரு கணம்.



''உங்க பையன் எந்த பாடத்திலும் 16 மார்க்குக்கு மேல் வாங்க மாட்டானு? அவன் பெயர் என்ன?''

''மார்க்கண்டேயன்!'' - பிரியாபாலு

ஆர்த்தியின் முகத்திலும் அறிவும் தன்னம்பிக்கையும் சுடர் விட்டுக் கொண்டிருந்தன. அச்சமோ தயக்கமோ மருந்துக்குக் கூடக் காணோம்.

''வாட் டாடி! ஆர் யூ ஸர்ப்ரைஸ்ட்?''

''நோ, நோ மை ஸன். சந்தோஷம். காட் பிளெஸ் யூ போத். ஆனா அவ அப்பா....?''

''அவருக்கும் தெரியும். இன்றுசாயங்காலம் அவர் உங்களைப் பார்க்க வருவார் அப்பா.''

நான் என்ன சொல்ல? அன்று எனக்கில்லாத தைரியம் இன்று என் மகனுக்கு இருக்கிறதே என்று மகிழ்வதா, அல்லது இன்றும் மகனிடம் கடுமையாகப் பேசி மாதவியைத்தான் மணக்க வேண்டும் என்று வற்புறுத்த முடியாமல் கோழையாக இருக்கிறேனே என்று என்னையே நொந்துகொள்வதா? — பிரமை பிடித்தவன் போல அவர்களைப் பின் தொடர்ந்து நடந்தேன்.



அவர்: ''அஜீரணம் தாங்காம வயிறு ஏகமா இரையுது... ராயப்பேட்டை ஜி. எச். போகணும்... வர்றியாப்பா'..?''

ஆட்டோ ஆறுமுகம்: ''இதுக்கு எதுக்கு அங்கே போகணும்...! போசாம நம்ம ஆட்டோவில் ஏறிக் குந்து... ஒரு ரவுண்டு போயிட்டு வந்தா எப்பேர்ப்பட்ட அஜீரணமும் சரியாயிடும் தலைக் கலில்!''



மகன்: ''இதுக்கு ஏம்ப்பா ஆட்டோனு பேயர் வந்துச்சு...?''

ஆறுமுகம்: ''ஓடும்போது உள்ளே உட்கார்ந்திருப்பவர்களை ஆட்டோ ஆட்டோன்னு ஆட்டுவதால் தான்டா!''



ஆட்டோ ஆறுமுகம்

பிரயாணி: ''சிலபேர் சுத்த மோசம்ப்பா! மட்டமான சரக்கைப் போட்டுட்டுப் போதையில் கண் மண் தெரியாம ஓட்டி ஆக்ஸிடெண்ட் ஆக்கிடறாங்க...!''

ஆறுமுகம்: ''கவலைப்படாதே ஸார்! நான் எப்பவும் ஒசத்தியான விஸ்கி சாப்பிட்டுட்டுத்தான் வண்டியை எடுக்கிறது!''



அவன்: ''உன் ஆட்டோவில் நீ வைத்திருக்கும் கடிகாரம் ஆட்டோ ஓடும்போ ஓடுறது... ஆட்டோ நிற்கும்போது நின்னு




ஆறுமுகம்: "என் ஆட்டோ ரொம்ப ராசியானது!"
அவன்: "எப்படிச் சொல்றே...?"
ஆறுமுகம்: "இதில் பயணம் செய்த சிலபேர் மந்திரிங்களுக்கு ஆட்டோகிராப் போட்டுத்தர்ற அளவுக்குப் பிரபலமாயிட்டாங்க... இன்னும் சில பேர் ஆட்டோபயாகிரஃபி எழுதற அளவுக்கு ஓசந்துட்டாங்க!"



ஆறுமுகம்: "எனக்கு இருக்கிற பெருமை என்ன தெரியுமா...?"
அவன்: "என்ன...?"
ஆறுமுகம்: "ஆட்டோ நுழைய முடியாத இடத்தில்கூட அவன் நுழைஞ்சிடுவான்!"

ஆறுமுகம்: "ஆமாமா! அது புதுமாதிரியான ஆட்டோமாடிக் கடிகாரம்!"



அவன்: "என்ன ஆறுமுகம்! எதுக்காகச் சற்று முன் அந்த ஆசாமியை அடிக்க விரட்டினே...? யார் அவன்...?"
ஆறுமுகம்: "பேர்ச்சம் பழக்காரன்! என் ஆட்டோவையே கத்திக் கத்தி வந்துக்கிட்டிருந்தான்... கோபம் வராதா எனக்கு...?"

—உ. ராஜாஜி





சாண்டில்யன்

அத்தியாயம் 40

இயங்கிய சிலை

கிருஷ்ண பட்சம் முடிந்து சுக்ல பட்சம் துவங்கிய பிரதமை, பின்னிருட்டை மிகக் கருமையாக வீசியிருந்ததால் சிந்து துர்க்கமெனும் கற்கோட்டையும் அதன் கருங்கல் ஸ்தூபிகளும் பெரும் பிசாசுகளைப் போல் காட்சியளித்ததல்லாமல், அந்தக் கற்கோட்டையின் துறைமுகங்களில் எட்ட காற்றில் ஆடி நின்ற காஸண்ட்ரா தனது இரண்டொரு விளக்குகளைக் காட்டிக் கொள்ளி வாய்ப் பிசாசின் உருக் கொண்டு விட்டதால், மேலைக் கடலின் அந்தப் பகுதியில் பயங்கரமான சூழ்நிலை நிலவிக் கிடந்தது. அத்தகைய நிலையில் அவ்வப்பொழுது வீசிய கடலின் ஊதுகாற்றும் அதனால் உந்தப்பட்ட அலைகள் சிந்து துர்க்கத்தின் கோட்டை மீதும் காஸண்ட்ரா மீதும் மோதியதால் ஏற்பட்ட சரேல் சரேல் என்ற ஓசையும், எங்கும் எம தாண்டவம் நடப்பது போன்ற பிரமையை உருவாக்கியிருந்தன. அத்தனை காற்றுக்கும் அணையாமல் லேசாக அசைந்த சிந்து துர்க்கத்தின் வட கிழக்கு வாயில் விளக்குகளும் சங்கர்பந்தின் மாளிகை விளக்குகளும் நமனை அஞ்சோம் என்று சிந்து துர்க்கவாசிகளின் அச்சமற்ற நெஞ்சங்களுக்கு அடையாளமாகத் திகழ்ந்தன. இந்தச் சமயத்தில் பேரலைகள் எழுந்த நேரத்தில் காஸண்ட்ரா மிக மெதுவாகத் திரும்பியது சிந்து துர்க்கத்தின் கோட்டை வாயிலை நோக்கி. அதன் முகப்பு, கோட்டை வாயிலை நோக்கியதால் அதன் வலது பக்கம் பூராவும் கோட்டை மதிலை நோக்கலாயிற்று. அப்படி அந்தப் பெரும் இருளின் உதவி கொண்டு திரும்பி நின்றதால் அதன் பக்கப் பீரங்கிகள் சிந்து துர்க்கத்தின் மதிலைப் பார்த்து விழித்தன பயங்கரமாக. சிந்து துர்க்கம் நல்ல உறக்கத்திலிருந்ததன் விளைவாக மூன்றாவது ஜாமத்தில் ஏற்பட்ட அந்த நிகழ்ச்சியைக், கவனிக்கவில்லையாயினும், அதிலிருந்த ஒரே ஒரு மனிதன் மட்டும் என்ன காரணத்தாலோ உறங்காமல் மிக அமைதியாகவும், சாமர்த்தியமாகவும் ஏற்பட்ட அந்த நிகழ்ச்சியைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

சிந்து துர்க்கத்தின் வட்ட பீரங்கி நிலையம் ஒன்றில் ஒதுக்குப்புறமாக அமர்ந்திருந்த அந்த மனிதன் காஸண்ட்ரா நன்றாகத் திருப்பப்பட்டதும் பக்கத்திலிருந்த டெலஸ்கோப்பை எடுத்து அதைக் கவனித்தான். காஸண்ட்ரா திரும்பியதும் அதிலிருந்து ஒரு படகு இறக்கப்பட்டதையும், அலைகளின் உக்கிரத்தை அலட்சியம் செய்து இருவர் அந்தப் படகில் ஏறிக் கொண்டதையும் அவன் பார்த்தான். அந்த இருவரும் டெய்லரும் ஸில்வரும் என்பதையும் உணர்ந்ததால் அடுத்தபடி டெலஸ்கோப்பைக் கண்களிலிருந்து எடுத்துப் பழையபடி பக்கத்தில் வைத்துக் கொண்டு கருங்கல் சுவரில் மல்லாந்து கண்களை மூடிக் கொண்டான் சுமார் அரை ஜாம நேரம். பிறகு டெலஸ்கோப்பின் பக்கத்தில் வெளிப்பக்கம் நோக்கி வாயை நீட்டிக் கொண்டிருந்த பீரங்கிக்கு மருந்து திணிக்கும் இடத்தில் அதை வைத்து மறைத்துவிட்டு, தான் இருந்த இடத்தை விட்டு நேராக நடந்தான் சிந்து துர்க்கத்தின் வாயிலை நோக்கி. அப்படி நடந்தவன் சிவாஜி சிலைக்கு அருகில் வந்ததும் சிலைக்குப் பின்னால் இன்னொரு சிலையாக மறைந்து நின்றான். அப்பொழுதே படகை வாயிலின் தூணில் பிணைத்துவிட்டு இறங்கி உள்ளே வந்த டெய்லரும் ஸில்வரும் நேராக சங்கர்பந்தின் மாளிகையை நோக்கி நடப்பதையும் அவன் பார்த்தான். அவர்கள் மாளிகை வாயிலை அடைந்ததும் தானும் வெளிவந்து மறுபடியும் பழைய இடத்துக்குச் சென்று சிறு விளக்கு ஒன்றைக் கொளுத்திக் காஸண்ட்ரா கப்பலை நோக்கி இருமுறை ஆட்டிவிட்டு விளக்கை அணைத்து இருளில் அமர்ந்திருந்தான். சுமார் பத்து நிமிடங்கள் ஓடியதும் காஸண்ட்ராவின் பீரங்கித் துளையில் ஒரு தீபம் இருமுறை கண்ணைச் சிமிட்டி மறைந்தது. அதனால் பெரிதும் திருப்தி அடைந்த அந்த மனிதன் மறுபடியும்

வெளி வந்து இருந்த இடத்திலிருந்தே சங்கர் பந்தின் மாளிகையைக் கவனித்தான்.

அங்கு சென்று வாயிலில் நின்ற டெய்லரும் ஸில்வரும் சிறிது நேரம் ஏதோ தர்க்கத்தில் இருந்தார்கள். பிறகு ஸில்வர் மட்டும் தனது தடியை ஊன்றிப் படிகளில் ஏறிச் சென்று கதவைத் தட்டினான். கதவு திறக்கப்பட்டு வெளியே வந்த காவலன் மார்பை நோக்கிக் கைத் துப்பாக்கியை நீட்டி, ''தளபதியை நாங்கள் உடனே பார்க்க வேண்டும். எழுப்பு'' என்று உத்தரவிட்டான்.

காவலன் ஸில்வரின் துப்பாக்கியை மிக அலட்சியமாகப் பார்த்தான். ''தளபதி உறங்குகிறார்'' என்று அறிவித்தான்.

''அதனால்தான் எழுப்பச் சொல்கிறோம்'' என்று டெய்லர் படிகளுக்குக் கீழிருந்த வண்ணம் சீறினான்.

டெய்லரைப் பார்த்ததும் சிறிது சிந்தனை வசப்பட்ட காவலன், ''சரி வாருங்கள் உள்ளே'' என்று கூறிக் கதவை நன்றாகத் திறந்துவிட்டு ஸில்வரும் டெய்லரும் பின் தொடர மாளிகைக்குள் நடந்து, முன் கூடத்தில் அவ்விருவரையும் உட்காரச் சொல்லி விட்டு உள்ளே சென்றான். சற்று நேரத்துக்கெல்லாம் உள்ளிருந்து நீளமான அங்கியொன்றை அரை குறையாக அணிந்து கொண்டும், தூக்கம் முழுவதும் கலையாததால் கண்களைக் கசக்கிக் கொண்டும் கூடத்துக்கு வந்த சங்கர்பந்த் மஞ்சங்களில் அமர்ந்திருந்த இரு வெள்ளைக் கொள்ளையரையும் பார்த்து. ''எதற்காக இந்த நேரத்தில் என்னை எழுப்பினீர்கள்?'' என்று விசாரித்தார்.

''நீங்களும் உட்காருங்கள் பேசுவோம்'' என்றான் ஸில்வர்.

''அவசியமில்லை, சொல்லுங்கள்'' என்றார் சங்கர்பந்த்.

''சொல்ல வரவில்லை நாங்கள்'' என்றான் டெய்லர் கடுமையான குரலில்.

அவன் குரலிலிருந்த கடுமையை பந்த் கவனிக்கவே செய்தார். அதனால் சினத்தின் வசப்பட்டாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல், ''வேறு எதற்கு வந்தீர்கள்?'' என்று விசாரித்தார்.

டெய்லர் தனது கைகளை ஒன்றுக்கொன்று தேய்த்துக் கொண்டு ஸில்வரைப் பார்த்தான். ஸில்வர் புரிந்து கொண்டதற்கு அறிகுறியாகத் தலையை ஆட்டிவிட்டு ''சில கேள்விகள் கேட்க வந்தோம்'' என்றான் பந்தை நோக்கி.

பந்த் மெள்ளச் சற்றுத் தள்ளியிருந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டு காலையும் நீட்டிக்கொண்டார் அவர்களை நோக்கி. ''கேள்வி கேட்க விடியும்வரை பொறுத்திருக்க முடியாது போலிருக்கிறது'' என்று விஷமி இருவரையும் மாறி மாறிப் பார்த்தார் இகழ்ச்சியுடன்.

அவர் இகழ்ச்சியைக் கவனிக்கவே செய்தான் ஸில்வர்; ஆகவே அவனும் லேசாக நகைத்து விட்டுத் தோளிலிருந்த கிளியைத் தடவிக் கொடுத்தான் ஒரு முறை. ''பொறுத்திருக்க முடியுமானால் இப்பொழுது வர மாட்டோம்'' என்று கூறினான். கையிலிருந்த குப்பியை எடுத்து ரம்மை ஒரு வாய் குடித்து விட்டு மஞ்சத்தில் பந்த் போலவே சாய்ந்து கொண்டு காலை அவரை நோக்கி நீட்டினான்.

அவன் காட்டிய அலட்சியத்தையும், அவமரியாதையையும் பந்த் கவனித்தா



ராஜனும் அதைக் கவனிக்காதது போலவே நடந்து கொண்டார். "ஆட்டுக்கு வாலை அளந்துதான் வைக்கிறான் ஆண்டவன்" என்று சொன்னார் பந்த்.

"அதற்கு என்ன அர்த்தம்?" என்று கேட்டான் டெய்லர்.

"இரண்டு கால்கள் இருந்தால் வில்வர் என்னை நோக்கி இரு கால்களையும் நீட்டலாம்" என்றார் பந்த் சாதாரணமாக.

அவர் செய்த கேலியைப் பற்றி வில்வர் சிறிதும் கவலைப்படவில்லை. "சிலர் இரண்டு கால்கள் இருந்தும் செய்ய முடியாத வேலையை ஒற்றைக் கால் இருப்பவன் செய்ய முடிகிறது" என்று கூறினான். தனது மரக் காலைச் சிறிது தரையில் நீட்டித் தட்டவும் செய்தான் இருமுறை.

"அப்படி ஒரு வேலை இப்பொழுது நடந்திருக்கிறதாக்கும்?" என்றார் பந்த்.

"ஆம்."



அவன் : எங்கப்பா ரொம்ப பிடிவாத குணம் உடையவர்.

இவன் : அப்படியா?

அவன் : ஆமாம். நான் எவ்வளவோ வேண்டாம் என்று சொல்லியும் நான் காதலிச்ச பொண்ணையே கட்டி வைச்சிட்டார்னா பார்த்துக் கோயேன். - ஆர். கோபாலகிருஷ்ணன்

"அது என்னவென்பதை நான் அறியலாமா?"

"அறியலாம்."

அதற்கு மேல் வில்வரை டெய்லர் பேச விடவில்லை. "காஸண்ட்ராவின் பீரங்கிகள் இந்தக் கோட்டையை நோக்கிக் கொண்டிருக்கின்றன" என்று மட்டும் சொன்னான்.

இதைக் கேட்ட பந்த் சிறிதும் பதற்றமடையவில்லை. "அப்படியானால் இந்தக் கோட்டை உங்கள் வசத்திலிருக்கிறது?" என்று கேட்டார்.

"ஆம்" என்று டெய்லர் பதில் சொன்னான்.

"நீங்கள் விடிவதற்குள் வந்த காரணம் தெரிகிறது" என்றார் பந்த்.

"மகிழ்ச்சி. நீங்கள் எச்சரிக்கை அடையு முன்பு நாங்கள் காஸண்ட்ராவைத் திருப்பி விட்டோம். இனி எங்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்லலாம்" என்றான் டெய்லர்.

பந்த் ஏதோ சிந்தித்தார் சில விநாடிகள். "கேளுங்கள்" என்ற ஒற்றைச் சொல்லை வீசினார் முடிவில்.

வில்வரே முதல் கேள்வியை வீசினான். "உங்கள் பெண் சென்று இன்று பத்தாவது நாள். அவள் என்று வருவாள்?" என்று கேட்டான்.

"இன்று அல்லது நாளை வரவேண்டும்" என்று சொன்னார் பந்த்.

"நிச்சயமாகத் தெரியுமா?" என்றான் டெய்லர்.

"தெரியாது."

"நாளைக்குள் வராவிட்டால் என்ன ஆகும் தெரியுமா?"

"தெரியாது."

"இந்தக் கோட்டையின் விதி?"

"தெரியாது."

இதைக் கேட்ட டெய்லர் மிகவும் சீற்றமடைந்து "எதைக் கேட்டாலும் தெரியாது என்றால் என்ன அர்த்தம்?" என்று கேட்டான்.

சங்கர் பந்த் நகைத்தார் பெரிதாக. "தெரியாது என்பதற்கு அர்த்தம் தெரியாத அத்தனை முட்டாளா நீ?" என்று கேட்கவும் செய்தார் நகைப்பின் ஊடே.

சாதாரணமாக எதற்கும் கோபமடையும் டெய்லர் இதைக் கேட்டும் பொறுமையைக் காட்டினான். "முட்டாள் யாரென்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறாயா?" என்று வினவினான் மிக நிதானமாக. அவன் கை அவன் இடையில் செருகப்பட்டிருந்த கைத் துப்பாக்கியை எடுத்தது நிதானமாக.

அதைக் கண்டு சங்கர் பந்த் அஞ்சியதாகத் தெரியவில்லை. "டெய்லர்! அந்தக் கைத் துப்பாக்கியை இடுப்பில் செருகிக்கொள். கடல் ராணியை நீங்களெல்லாம் சம்மதித்துத் தான் அனுப்பினீர்கள். அவள் சென்றிருக்கும் பணியும் சுலபமானதல்ல" என்று கூறினார்.

"அவ்ஞ்ஜைக் கண்டு பிடித்து அழைத்து வருவதாகக் கூறினாள். அதனால் அனுப்பினோம். ஒரு வாரத்தில் வருவதாகச் சொன்னாள். ஆனால் நாள் பத்தாகிறது" என்று சொன்னான் டைல்வர்.

"ஆம்." பந்த் ஒப்புக்கொண்டார்.

"என்ன ஆம்?" என்று கேட்டான் டைல்வர்.

"நாள் பத்தாகிறது என்பது உண்மை" என்றார் பந்த்.

டெய்லருக்கு அவர் பதில் திருப்தியாயிருந்தபடியால் "பத்து நாட்களில் ஏன் வரவில்லை?" என்று வினவினான்.

"அதை அவளைத்தான் கேட்க வேண்டும்" என்றார் பந்த்.

"அவள்தான் வரவில்லையே?" என்றான் டெய்லர்.

"ஆம் ."

"அப்படியிருக்க எப்படிக் கேட்பது?"

"முடியாதுதான்."

"என்னுடன் விளையாடுகிறீர்களா?"

"என் தலையெழுத்து" என்றார் பந்த்.

"என்ன உன் தலையெழுத்துக்கு?"

"உன்னோடு விளையாடும்படி எழுதியிருக்கிறதே!"

பழனி டாக்டர் எஸ். காளிமுத்து



Dr. S. காளிமுத்து

இன்றைய முன்னணி பிரபல பழனி வைத்திய திலகம், வைத்தியராஜ் டாக்டர் எஸ். காளிமுத்து R. M. P. (IND) V. V. C. A. M. I. H. அவர்களின் வெற்றிகரமான மாதாந்திர சுற்றுப் பயணத்தில் எல்லா வியாதிகளுக்கும் அன்பர்கள் நேரில் சந்தித்து ஆலோசனைகளும் மருந்துகளும் பெற்று சுகவாழ்வு வாழ அழைக்கின்றோம். வணக்கம்.

தங்களின் உடல் மிகவும் பலமில்லாமல் இளைத்து, உடல் வலுவில்லாமல் குடும்ப வாழ்க்கையில் நிம்மதியில்லாமல் வயோதிகரைப் போல் களைப்பு மேலிட்டு, வேலைகளைச் சரவர செய்ய இயலாமை — இதனால் கஷ்டப்படுகிறீர்களா? வாலிப வயதில் தெரிந்தும், தெரியாமலும் செய்த தவறுதல்களே இப்போது உடல் கெட்டு பலஹீனமடைந்து ரத்தக் குறைவு, சோர்வு, தலைவலி, உஷ்ணம், சோம்பல், கைகால் அசதி, பலஹீனம், உடல்வலி, களைப்பு, தூக்கக் குறைவு, ஆயாசம், பீதி, வெட்கம், பயம், வெறுப்பு உண்டாகி, தாம் தந்தையாரிடமும் மற்றவர்களிடமும் சொல்ல முடியாமல் மனவேதனையும் கஷ்டமும் அடைந்து, நிம்மதியில்லாமல் வாழ்கிறார்கள். மேற்படி காரணங்களால் உடல் நலம் பாதிக்கப்பட்டவர்களும், கவலைப்பட வேண்டாம். இம்மாதிரியான வியாதிஸ்தர்கள் 81 வருட அனுபவம் பெற்ற நமது சாஸ்திரிய முறையான மிக உயர்தரம் சாப்பிட்டாலே, எடை அதிகப்பட்டு, இரத்த விருத்தியுடன் உடல் பலமடைந்து புதிய சக்தி, புத்துணர்ச்சி பெற்று நிம்மதியான வாழ்க்கை வாழலாம். எவ்விதமான பத்தியமும் இல்லை. ஆர்டரில் தேவைப்பட்ட மருந்தின் விலைகளைக் குறிப்பிட்டு எழுதவும். வி. பி. பி. தபால் பார்சலில் பெற இன்றே எழுதுங்கள். சென்னையிலும், பழனியிலும், கேம்புகளிலும் நேரில் பெறலாம். மருந்தும் விருந்தும் மூன்று நாள் என்பது பழமொழி. மருந்து உபயோகிக்கும்பொழுதே பலனைக் காணலாம். வி. பி. பி. தபால் செலவு இலவசம். வெறும் கடிதம் கவனிக்க இயலாது. சித்த வைத்திய மருந்துகளும், பழனி மருந்துகளும் நல்ல பலன் தரும் என்பதை அறியவும்.

:ஒரு மாத சிகிச்சை மருந்துகள்:

ஸ்பெஷல் லேகியம், ஸ்பெஷல் பஸ்பம் ரூ. 90.

தங்கபஸ்பம், சிட்டுக்குருவி லேகியம்

90 வேளை ரூ. 180. 60 வேளை ரூ. 120. 30 வேளை ரூ. 60.

எங்கள் மாபெரும் வெற்றிகரமான மாதாந்திர சுற்றுப்பயண தேதி விலாசங்கள் கவனிக்கவும்

1-ந் தேதி	திருநெல்வேலி நெல்லை லாட்ஜ், ஜங்ஷன் ரோடு. போன்: 147. காலை 8 மணி முதல் 12 மணி வரை
1-ந் தேதி	நாகர்கோவில் பகல் 2 மணி முதல் 4 மணி வரை. ஸ்ரீ உடுப்பி கிருஷ்ண பவன், தபாலாபீஸ் சந்திப்பு
2-ந் தேதி	மதுரை மணிஸ் கிபே, டவுன் ஹால் ரோடு. போன்: 2019. காலை 8 மணி முதல் மாலை 2 மணிவரை
2-ந் தேதி	புதுக்கோட்டை. மாலை 4 மணி முதல் 5-30 மணி வரை. சாந்தி லாட்ஜ். (வசந்தா லாட்ஜ்). போன்: 46
3-ந் தேதி	காரைக்குடி காலை 9 மணி முதல் 11 மணி வரை. AVM. PL ரெஸ்ட் ஹவுஸ். போன்: 309
3-ந் தேதி	பட்டுக்கோட்டை. பகல் 2 மணி முதல் 3-30 மணி வரை. வசந்த பவனம். மணிக்கூண்டு சமீபம்
3-ந் தேதி	மன்னார்குடி. மாலை 4-30 மணி முதல் 6 மணி வரை. மன்னை லாட்ஜ், ஸ்டேட் பாங்க் அருகில்
4-ந் தேதி	திருச்சி ஹோட்டல் அஜந்தா, ஜங்ஷன் ரோடு, காலை 8 மணி முதல் மாலை 2 மணி வரை. போன்: 4501
4-ந் தேதி	கரூர். மாலை 3-30 மணி முதல் 5 மணி வரை. பெரியார் லாட்ஜ், ஜவஹர் பஜார்
5-ந் தேதி	தஞ்சாவூர். காலை 8 மணி முதல் 12 மணி வரை. ராஜா ரெஸ்ட் ஹவுஸ். போன்: 57
5-ந் தேதி	திருவாரூர். மாலை 2 மணி முதல் 4 மணி வரை. அபூபக்கர் பில்டிங் (EMR) நாகை ரோடு, விஜயபுரம்
5-ந் தேதி	நாகப்பட்டினம். இளைய விலாஸ், ரயில்வே ஸ்டேஷன் எதிரில் மாலை 5 மணி முதல் 6 மணி வரை
6-ந் தேதி	காரைக்கால். அசோக் லாட்ஜ், பஸ் ஸ்டாண்ட் எதிரில் காலை 8 மணி முதல் 10 மணி வரை
6-ந் தேதி	கும்பகோணம். காலை 12 மணி முதல் பகல் 2 மணி வரை. தாஜ்மஹால் லாட்ஜ், பொற்றாமரைக்குளம்
6-ந் தேதி	மாயவரம். மாலை 3 மணி முதல் 4-30 மணி வரை. காளியாகுடி லாட்ஜ், பெரியகடை வீதி, போன்: 469
6-ந் தேதி	சிதம்பரம். மாலை 5-30 மணி முதல் 7 மணி வரை. ஜெயராம் லாட்ஜ் .
7-ந் தேதி	பாண்டிச்சேரி. காலை 8 மணி முதல் 9-30 மணிவரை. அருணா லாட்ஜ், ஜவஹர்லால் வீதி, போன்: 352
7-ந் தேதி	கடலூர். NT காலை 10-30 மணி முதல் 12 மணி வரை. ஹோட்டல் பிருந்தாவனம்
10-ந் தேதி	சென்னை, திரு உட்லண்ட்ஸ், எட்வர்ட் எலியட்ஸ் ரோடு. காலை 9 முதல் 12, மாலை 3 முதல் 6 மணி வரை
12-ந் தேதி	பெங்களூர் சிட்டி. ஹோட்டல் பிராட்வே, காலை 8 மணி முதல் பகல் 2 மணி வரை. கெம்பா கவுடா ரோடு
13-ந் தேதி	சேலம். பகல் 2 முதல் 5 வரை. லக்ஷ்மி ராஜ்பவன் லாட்ஜில், டவுன் ரயில்வே ஸ்டேஷன் எதிர். போன்: 2301
17-ந் தேதி	சென்னை, திரு உட்லண்ட்ஸ், எட்வர்ட் எலியட்ஸ் ரோடு, காலை 9 முதல் 6 மணிவரை. போன்: 83111
18-ந் தேதி	சென்னை திரு உட்லண்ட்ஸ், எட்வர்ட் எலியட்ஸ் ரோடு, காலை 9 முதல் 12 மணிவரை. போன்: 83111
19-ந் தேதி	பம்பாய், காலை 9 முதல் மாலை 6 வரை. பிரகாஷ் லாட்ஜ், ரயிலடி சமீபம், செம்பூர். போன்: 521049
20-ந் தேதி	பம்பாய். காலை 9 முதல் 10 மணிவரை. பிரகாஷ் லாட்ஜ், ரயிலடி சமீபம், செம்பூர். போன்: 521049

[illegible] விற்பனை நிலையம்: 10/23, பாண்டி பஜார், (ராஜகுமாரி தியேட்டர் அருகில்) சென்னை-600017. போன்: 444076, 31448.

GOVT. REGD. T. M. No. 204811. REGD. 15443. MFG. LIC. No. 5

போன்: 316. 316A, **பழனி சித்தர் வைத்தியசாலை, பழனி S. I.** தந்தி: சித்தர்.

பழைய தாராபுரம் ரோடு. (இந்தியாவின் மாபெரும் வைத்திய ஸ்தாபனம்)

''அப்படியானால் இத்தனை நேரம் பேசியது விளையாட்டுப் பேச்சுத்தானா?''

''கேள்விக்குப் பதில் சொன்னேன்.''

''முட்டாள்தனமான பதில்.''

''முட்டாள்தனமான கேள்விகளுக்கு வேறு எப்படிப் பதில் கிடைக்கும்?''

இதைக் கேட்ட வில்வர் எழுந்தான் ஆசனத்தை விட்டு. கக்கத்தில் தடியையும் இடுக்கிக் கொண்டான். ''சங்கர் பந்த்! இந்தக் கோட்டைக்கு இனி நீ தளபதியல்ல'' என்றான்.

''என்றும் தளபதியாக இருந்ததில்லை'' என்ற பந்த். ''இந்தக் கோட்டையின் தலைவி எப்பொழுதும் கடல் ராணிதான். நான் மால்வானுக்குத்தான் தளபதி'' என்று சுட்டிக் காட்டினார்.

''நீர் எதற்குத் தளபதியானாலும் இப்பொழுது எங்கள் கைதி'' என்றான் வில்வர்.

''எப்படி?'' என்று வினவிய பந்த், டெய்லரும் ஆசனத்தை விட்டு எழுந்துவிட்டதையும் அவன் இரு கைத் துப்பாக்கிகளும் தம்மை நோக்குவதையும் கண்டார்.

''எழுந்திரு'' என்று உத்தரவிட்டான் டெய்லர் துப்பாக்கியை அவர் மார்புக்காகக் குறி வைத்த வண்ணம்.

அவன் சொன்னபடி எழுந்தார் பந்த். ''நட'' என்று வாயிலைச் சுட்டிக் காட்டினான் டெய்லர். அவன் காட்டியபடி வாயிலை நோக்கி நடந்தார் பந்த். முன்னால் பந்த் நடந்து செல்ல டெய்லரும் வில்வரும் அவரைத் தொடர, மூவரும் சிவாஜி சிலைக் கருகில் வந்ததும், முன்பு அனந்த் படுத்திருந்த அறைக்குள் தளபதியை வைத்து இருவரும் பூட்டினார்கள்.

''இப்போது நாம் கோட்டையை நமது வசமாக்கிக் கொள்ளத் தடையில்லை'' என்ற வில்வர் சட்டென்று சொற்களை நிறுத்தினான்.

''என்ன?'' என்று கேட்டான் டெய்லர் சிறிது சலைத்துடன்.

எட்ட இருந்த கோட்டைச் சுவரைக் காட்டினான் வில்வர். அங்கு பத்து மாலுமிகள் பதுங்கிப் பதுங்கிப் பீரங்கி அறைகளுக்குள் சென்று மறைந்து கொண்டிருந்தனர்.

அது என்னவென்று பார்க்க ஓர் அடி எடுத்து வைத்தான் டெய்லர். ''அப்படியே நில்'' என்ற அதிகாரக் குரல் அவன் நடையைத் தேக்கியது. யார் உத்தரவிடுவது அப்படி என்று திரும்பிப்பார்த்தான்வில்வர். பின்னாலிருந்தது சத்ரபதி சிவாஜியின் சிலை. அதன் கையில் ஒரு பெரிய கைத் துப்பாக்கி காட்சியளித்தது.

''சிவாஜியா பேசியது?'' என்றான் டெய்லர்.

''அப்படித்தான் தெரிகிறது'' என்றான் வில்வர். அவன் முகத்தில் மித மிஞ்சிய குழப்பம் தெரிந்தது. அந்தக் குழப்பத்தைத் தவிர்க்கச் சிலையின் கையிலிருந்த துப்பாக்கியின் குதிரை சட்டென்று இழுக்கப்பட்ட சத்தம் கேட்டது. அடுத்த விநாடி டெய்லரின் காலுக்கடியில் ஒரு ரவை பூமியில் பட்டுத் துள்ளியது. (தொடரும்)

BEYOND THE POSEIDON ADVENTURE

தொடர் நாவல்களைப்போல, ஹாலிவுட்டிலிருந்து இப்போது தொடர்படங்களும் வர ஆரம்பித்துவிட்டன! பயங்கர சூழ்நிலைகளை உருவாக்கி நம்மைத் திகிலிலும் - திகைப்பிலும் ஆழ்த்துவதில் என்றுமே இர்வின் ஆலன் சூரர். ''போஸிடான் அட்வென்சர்'' ''டவரிங் இன்ஃபெர்னோ'' போன்ற அவரது முந்தைய படங்கள் இதற்குக் கட்டியம் கூறியுள்ளன. போஸிடான் என்ற பெயர் கொண்ட கப்பல், கடல் அலைகளை எதிர்க்கச் சக்தியற்று, தலைகீழாக நீரில் கவிழ்ந்து விடுகிறது. ஆங்காங்கே விரிசல் கண்டு வெடித்துக் கொண்டும் இருக்கிறது. இதன் விளைவாகக் கப்பலிலுள்ள பொக்கிஷங்கள் மதுக்கிடங்கில் விழுந்து பணமும், நகைகளும் நாற்புறமும் சிதறுகின்றன. இவைகளைக் கைப்பற்ற இரு குழுவினர் தனித்தனியே வருகின்றனர். கவிழ்ந்த கப்பல், கடல் கொந்தளிப்பினால் இரண்டாகப் பிளக்கும்போது இரு குழுவினரும் எரிந்து கொண்டிருக்கும் கப்பலின் வயிற்றுப் பாகத்தில் சந்திக்கிறார்கள். அதே சமயம் கடல்நீரும் குபுகுபுவென்று உட்புகுந்து நிரம்பத் தொடங்குகிறது. கடைசியில் கடலில் கவிழ்ந்து மூழ்கி மறைந்து கொண்டிருக்கும் கப்பலின் அடிவாரத்திலிருந்து தப்பிக்க முயல்கிறார்கள். பேராபத்தில் இறங்கி பெருஞ்செல்வத்தை மீட்க முயல்வதுடன் இரு குழுவினரும் ஒருவரிடமிருந்து ஒருவர் தப்பவும் வேண்டும்.

போஸிடான் கவிழ்ந்த கப்பலின் உடற்பாகத்தினருகில் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தப்பட்ட மற்றொரு சிறு கப்பலிலிருந்து கொண்டு திரைப்படக் காட்சிகளை இர்வின் படமாக்கினார். மைக்கேல் கேய்ன், ஸாலிபீல்ட் ஆகியோர் நடித்துள்ள வார்னர் பிரதர்ஸ் படம் இது. - டி. எம். ஆர்



ஒரே ஒரு ஆண்குழந்தை

கருணை மணாளன்





ஜவ்வாது பாஷாவுக்கும் கவுஸ் கானுக்கும் இணைய முடியாத ஒரு பிளவு உருவாகி விட்டதைக் கண்டு சந்தைப்பேட்டைவாசிகள் பெரிதும் வருந்தினர்.

ஒற்றுமையின் இலக்கணமாக — பாசத்தின் உறைவிடமாக விளங்கிய சகோதரர்கள் இருவரும் இப்படி இரு துருவங்களாக விலகிப் போய்க் கொண்டிருக்கிறார்களே என்று சில பெரிய மனிதர்களும் கவலைப்பட்டார்கள்.

—ஊருக்குள் - யார் வீட்டிலாவது சண்டைச்சரவு என்று வந்து விட்டால் ஜவ்வாது சகோதரர்களின் ஒற்றுமையை முன் உதாரணம் காட்டிச் சமாதானம் செய்து வைப்பார்கள். — அவர்களைப் போல் விளங்க வேண்டும் என்று.

யாருடைய கண்ணேறோ — மூன்று மாதமாகிறது அவர்களுக்குள் பிணக்கு உருவாகி. நடந்தது இதுதான்.

ஜவ்வாது பாஷாவுக்கும், கவுஸ் கானுக்கும் ஒரே மேடையில் திருமணம் நடந்தது. பதினைந்து வருடங்களுக்கிடையில் சொல்லி வைத்தாற்போல் இருவருக்கும் ஒன்பது குழந்தைகள் பிறந்தன. ஜவ்வாதுவுக்கு ஒன்பதும் ஆண் குழந்தைகள். கவுஸுக்கு ஒன்பதும் பெண் குழந்தைகள். சகோதரர்கள் இருவருக்குமே ஆசை தப்பித் தவறி நமக்கு பெண் — ஆண் குழந்தை பிறந்துவிடாதா என்று. ஆனால் பிறந்தது இருவரின் எதிர்பார்ப்புக்கும் நேர் மாறாகவே இருந்தது.

அப்போதுதான் வெளியூரிலிருந்து வந்த தூரத்து உறவினரான மூதாட்டி ஒருத்தி சொன்னாள் — ஜவ்வாது பாஷாவின் மனைவியிடம், ''சாயிதா, உன் மகனை உன் கொழுந்தன் பெஞ்சாதியிடம் கொடுத்துவிடு..அந்தப் பலனில் அவனுக்கு அடுத்துப் பிறக்கும் குழந்தை ஆண் குழந்தையாக இருக்கும்... செய்வாயா?'' என்று.

கண்களை உருட்டி ஒரு முறைப்பு முறைத்தாள் சாயிதா. மூதாட்டி மௌனமாகிவிட்டாள்.

ஆனால், இந்தக் குழந்தை மாற்று விஷயம் கவுஸ் கானின் மனைவி ஷிஃபா பானுவுக்குச் சிறிது நம்பிக்கை அளித்தது. தயவாய் ஓரகத்தியிடம் கேட்டுப் பார்த்தாள். ''அக்கா, அந்த மூதாட்டி சொன்ன பிரகாரம் எனக்கும் ஆண் குழந்தை பிறக்கும் — உங்கள் கைப்பிள்ளையை என்னிடம் தந்துவிடுங்களேன்.''

''ஷிஃபா, எந்தப் பேச்சுப் பேசினாலும் இந்தப் பேச்சை மட்டும் பேசாதே!'' என்று நறுக்குத் தெரித்தாற்போல் முடித்துவிட்டாள் சாயிதா.

சமையல் — இருப்பிடம் இரண்டையும் தவிர்த்து அவர்கள் ஒரே வீட்டில் குடி இருந்தார்கள். அப்படிக்கிருந்தும் சாயிதா அசைந்து கொடுக்கவில்லை.

ஷிஃபாவும் விடவில்லை. சமயம் அறிந்து கணவனின் காதில் பக்குவமாக ஓதிவிட்டாள்.

''என்ன அண்ணன் தம்பி உறவு வேண்டிக் கிடக்கு? அவர்கள் பெறுவது எல்லாம் ஆண் குழந்தை. நமக்கோ பெண் குழந்தை. குழந்தையை மாற்றிக் கொண்டால் இந்த மாதிரி ஒரே குழந்தையாகப் பிறக்காதாம். உங்கள் அண்ணனிடம் சொல்லி அவர்கள் கைப்பிள்ளையை நமக்குக் கேளுங்கள் — அடுத்ததாவது ஆண் குழந்தையாக இருக்கட்டும்!''

''இது என்ன பைத்தியக்காரத்தனம்? எந்த மடையன் சொன்னான் இப்படி ஏற்படும் என்று?'' கவுஸ் வெடித்தான்.

''நடக்கப்போய்த்தானே சொல்கிறார்கள்! நானும் சாயிதா அக்காவிடம் கேட்டுப் பார்த்துவிட்டேன். அவங்க மறுத்துட்டாங்க. நீங்க ஒங்க அண்ணனிடம் சொல்லியாவது அந்தக் கைப்பிள்ளையை வாங்கித் தாருங்களேன்!''

''வேண்டாத வேலை இது!''

''எனக்கும் ஆசை இருக்காதா? ஒரு ஆண் பிள்ளைக்குத் தாயாக வேண்டும் என்று? இப்படி ஏன் எடுத்தெறிந்து பேசுறீங்க? உங்க அண்ணனிடம் கேட்டுத்தான் பாருங்களேன். உண்மையிலேயே நம்ம பேரில் ஒரு கரிசனம் இருந்து இவங்களுக்கும் ஆண் குழந்தை கிடைக்கட்டும் என்ற நல்ல எண்ணம் இருந்தால் நிச்சயம் சம்மதிக்கத்தான் செய்வாங்க. இத்தனை சொத்துக்களையும் உங்களுக்குப் பின்னே ஆள்வதற்கு ஒரு ஆண் குழந்தை வேண்டாமா?'' கண்களைத் துடைத்துக்கொண்டாள் ஷிஃபா.

கவுஸ் ஒரு வழியாக இசைந்தான்.

• • •

சீலியாலூரில் கல்யாண வைபவத்தில் கலந்துவிட்டு, ஜவ்வாதும் கவுஸும் வில் வண்டியில் திரும்பிக் கொண்டிருந்த போது, கவுஸ் தன் மனைவியின் வேண்டுகோளைத் தமையனிடம் தெரிவித்தான்.

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

பாலு : நம்ம கணக்கு வாத்தியார், நேற்று தியேட்டரில் எனக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்து விட்டார்.

வேலு : ஐய்யய்யோ! அப்புறம்...?...!

பாலு : அங்கேயும் வழக்கம்போல உறங்கிக் கொண்டிருந்தார். - ஜி. திருவேங்கடம்



''இதில் என் இஷ்டம் என்னப்பா இருக்கிறது. அவள் சம்மதித்தால் வாங்கிக் கொள்ளட்டும்.''

''அண்ணியிடம் ஷிஃபா கேட்டதற்குச் சம்மதிக்கல்லியாம்... நீங்கள் சொல்லி...''

''அப்படியா சொன்னாளாம் சரி சரி, நான் சொல்லி அவளைச் சம்மதிக்க வைக்கிறேன்....''

ஆனால் நடந்தது ....

ஜவ்வாது பாஷா சொன்னதும் எரிமலையாகிவிட்டாள் சாயிதா.

''இன்னும் பத்துப் பிள்ளை நான் பெற்றாலும் ஒரு பிள்ளை கூடத் தரப்போவதில்லை! இது என்ன, ஆட்டுக் குட்டி, முயல் குட்டி சமாசாரம்னு நினைத்து விட்டீர்களா?'' படுக்கை அறை என்றும் பாராமல் சாயிதா உரத்த குரலில் முழங்கினாள்.

''அவங்களுக்கும் ஆசை இருக்காதா, சாயிதா?''

''அதற்காக...? இந்தப் பேச்சை இத்தோடு நிறுத்திக் கொள்ளுங்கள். உங்களை எதிர்க்கிறேன்னு பின்னே வருத்தப்படாதீங்க, ஆமா!''

அடங்கி விட்டார் ஜவ்வாது பாஷா.

—தன்னுடைய நாட்டம் தோல்வி கண்டதால் வருந்திய ஷிஃபா, இவர்கள் உறவு இனி என்ன நமக்கு வேண்டிக் கிடக்கிறது என்று எதிர் மறையில் திரும்பி விட்டாள்.

''ஆயிரம் அண்ணன் தம்பி என்றாலும் வாரிசும், வயிறும் வேறுதான் என்று நம்மை ஒதுக்கி விட்டார்களே, நாளைக்கே வீட்டை இரண்டாகப் பிரித்து, சொத்து பத்துக்களை பாகப் பிரிவினை செய்து விடுங்கள். இனிமேல் இவர்கள் உறவும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம்.''

''நிதானி, ஷிஃபா! திடுதிப்பென்று அப்படி நாம் போய்விடலாமா? என்ன இருந்தாலும் எனக்குத் தமையன்...''

''பெரிய்ய்ய தமையன்! தம்பிக்கு ஒரு ஆண் பிள்ளை பிறக்கக் கூடாது என்று நினைக்கும் தமையன்!'' கடைசி வார்த்தைக்கு ஆழமாக அழுத்தம் கொடுத்தாள்.

''ஷிஃபா!''

''நிறுத்துங்கள்! நம்ம தம்பிக்கும் ஒரு ஆண் குழந்தை பிறக்க வேண்டும் என்ற நல்ல எண்ணம் இருந்திருந்தால்... அந்தப் பிசாசிடமிருந்து பிள்ளையைப் பிடுங்கித் தந்திருக்க மாட்டாரா? இரண்டு பேருக்குமே அந்த நல்ல எண்ணம் இல்லை. நாளையே குடும்பப் பிரிவினை நடந்தாக வேண்டும். இல்லை... நான் தூத்துக்குடிக்குப் போய் விடுவேன்... இங்க மூஞ்சியிலேயே விழிக்கப் போறதில்லை! இது உறுதி!''

தம்பிக்கும் ஷிஃபாவுக்கும் நடந்த வாக்குவாதத்தை ஜவ்வாது பாஷா கேட்காமல் இல்லை. ஒரே வீட்டில் நடைபெற்ற இந்த ரகளை ஜவ்வாது பாஷாவைத் திக்குமுக்காட வைத்தது.

• • •

மறு தினம்.

ஷிஃபா துணி மணிகளைப் பெட்டியில் அடுக்கிப் பிரயாணத்துக்கான ஆயத்தங்களை
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

மேற்கொண்டதைக் கண்ட ஜவ்வாது, பாகப் பிரிவினைக்குத் தயாராகி விட்டார்.

ஷிஃபா தன் பயணத்தை நிறுத்திவிட்டாள். அப்படியும் கூட அவள் நெஞ்சம் அமைதி அடையவில்லை.

''ஹூசும் மகள் விதவையானாலும் மருமகன் இறந்தேயாக வேண்டும் என்று எண்ணித் துணிந்தாலும் ஒரு மாமன்! அதைப் போல இருக்கிறது இந்த வீட்டு தர்பார்! குடும்பம் உடைந்து பிரிந்தாலும் தம்பிக்கு ஆண் குழந்தை பிறக்கக் கூடாது என்று நினைத்து விட்டார்கள். இவர்கள் முகத்திலே கூட விழிக்கக் கூடாது!'' வார்த்தைகளைப் பட்டாசாகக் கொளுத்தி விட்டாள்.

வயல்களில் வரப்பும், தோட்டங்களில் வேலியும், வீட்டின் நடுவில் சுவரும் உருவாகி அண்ணன் தம்பிகளிடையே ஒரு பிளவு உண்டாகிவிட்டதைக் காட்டிக் கொண்டிருந்தது.

இந்தப் பிரச்னைக்குப் பிறகு தமையனுடன் பேச்சு வார்த்தை வைத்துக் கொள்ளக்கூடாதென்று ஷிஃபா கண்டிப்பாக சவுஸிடம் கூறிவிட்டாள். சவுஸூம் இத்தனை வந்த பிறகு இனி என்ன உறவு தேவையிருக்கிறது என்று குழந்தைகளைக் கூட அங்கே போகக் கூடாது என்று கட்டுப்படுத்தி விட்டான்.

அண்ணன் தம்பிகளுக்கிடையில் இனி சமரசத்தை ஏற்படுத்தி முன்போலவே ஒற்றுமை ஏற்படுத்த முடியாது என்று ஊரிலுள்ளவர்களும் புரிந்து கொண்டார்கள்.

• • •

ஐந்தாறு தினங்களாக சாயிதா ஒன்பதாவது கைக்குழந்தைக்குச் சுகமில்லை என்று கைப் பக்குவமாக மருந்துகள் கொடுத்தாள். சுகம் இடைக்கவில்லை. ஒரு வாரம் கழித்து டாக்டரிடம் காட்டியபோது...

''தாய்க்கு மஞ்சள் காமாலை ஆரம்பித்திருக்கிறது. இதுவே குழந்தைக்கும் தொற்றிக்கொண்டிருக்கிறது. உடனடியாகத் தாய்ப்பாலை நிறுத்திவிட்டு இருவருக்குமே சிகிச்சை செய்தாக வேண்டும். இருந்தாலும் குழந்தை பிழைப்பது கடினம்!''

மறு வாரம்.

டாக்டர் சொன்னபடி குழந்தை பிழைக்கவில்லை.

குழந்தையின் அடக்கத்துக்குக்கூட சவுஸூம் ஷிஃபாவும் ஜவ்வாது பாஷா வீட்டுக்குப் போகவில்லை.

''இப்போது திருப்திதானே உனக்கு? கொழுந்தன் பெண்சாதி எவ்வளவு ஆசைப்பட்டுக் கேட்டாள் — இந்தக் குழந்தையைத் தாருங்கள், எனக்கும் ஆண் குழந்தை பிறக்கட்டும் என்று.. கொடுத்தாயா பாதகி! இப்போ ஆண்டவனே பறிச்சுக்கிட்டான்! திருப்திதானே?'' கண்ணீரைக் காட்டாமல் கவலைகளை நெஞ்சுக்குள் புதைத்துக்கொண்டு கேட்டார் ஜவ்வாது பாஷா.

''விஷயம் தெரியாமல் பேசாதீர்கள்..... வீணாக என் மனத்தை வேதனை செய்ய வேண்டாம்!''

''என்ன விஷயம்... நான் தெரியாமல் இருக்கிறேன்?''



''நான் என் மனைவியைச் சிலவேளைகளில் அடிப்பது உண்டு. ஏன் என்றால் அவள் வீட்டுக் காரியங்களை ஒழுங்காகச் செய்வது கிடையாது. விருந்தினர்களை மதிப்பது கிடையாது. வீட்டு விசேஷங்களில் அக்கறை எடுப்பதில்லை.

அவள் படித்தவள் - நல்ல உத்தியோகம் பார்ப்பவள்தான்!

அவளுக்கு சம உரிமை கொடுப்பதற்காகச் சில சமயங்களில் அவள் திருப்பிக் கொடுக்கும் அடிகளை நானும் வாங்கிக் கொள்வதுண்டு.

— இப்படி ஒரு கடிதம் சமீபத்தில் 'சண்டே வீக்லி'யில் வெளியாகியிருந்தது!

- ஜி. நடராஜன்

''எங்க ரெண்டு பேருக்கும் பேறுகாலம் பார்த்த டாக்டர் ரமாதேவியிடம் கேளுங்கள் சொல்லுவான்!''

''நீயே சொல்லக் கூடாதா?''

''டாக்டரம்மா சொன்னாங்க, 'ஷிஃபா கர்ப்பப் பை ரொம்பப் பலஹீனமாகிவிட்டது. அதனால், இதற்கு மேல் ஷிஃபா குழந்தை பெறக் கூடாது. அப்படி மீறிக் கருவுற்றால் அவள் உயிர் பிழைக்கவே முடியாது! இதை உங்கள் தங்கை ஷிஃபாவிடம் சொல்லி வையுங்கள். இப்போதே சொன்னால் அதிர்ச்சி வசப்படக் கூடும். அதனால் சாவதானமாகச் சொல்லி வையுங்கள்' என்று. அவங்களுக்குக் குழந்தை பிறக்கக் கூடாது என்ற காழ்ப்பில் நான் மறுக்கவில்லை! ஒன்பது குழந்தைகளை விட்டுவிட்டு அவள் போய்விட்டால் அந்தக் குழந்தைகளை யார் பார்ப்பது? உங்கள் தம்பிக்கு இத்தனை சொத்து சுகம் இருந்தும் ஒன்பது குழந்தைகளைப் பராமரிக்க எவள் வருவாள் இரண்டாந் தாரமாக? அவர்கள் நன்றாய் இருக்க வேண்டும் என்ற நினைப்பில் தான் நான் மறுத்தேன். டாக்டரம்மா சொன்ன செய்தியை அவளிடம் நானே கூறலாம் என்று இருக்கும்போது ஒரு நாள் முந்தி குழந்தையைக் கேட்டாள். அதன் பிறகு நான் சொன்னால் இட்டுக்கட்டிக் கூறுவதாக நினைப்பாள்! ஐந்தாவது, ஆறுவது, குழந்தை பிறந்தபோது கேட்டிருந்தால் நான் மறுத்திருக்கவே மாட்டேன்!''

''பைத்தியக்காரி! இதை முன்கூட்டியே சொல்லித் தொலைத்திருக்கக் கூடாதா? இப்பவே என் தம்பியிடம் போய்ச் சொல்லப் போகிறேன்.'' — பகைமையை மறந்தவராக விரைந்தார்.

ஷிஃபா வாந்தி எடுத்துக் கொண்டிருந்தாள் பத்தாவது குழந்தைக்கு அடையாளமாக!



கடுகு பதில்கள்



✠ பி. ஆர். தோ, ஓசூர்
கே. ஒழுங்கான பதில் வராது என்று தெரிந்து என்னை உங்களிடம் கேள்வி கேட்க வைத்தது எது?

ப: ஒழுங்கற்ற பதில்கள் மேல் உங்களுக்கு உள்ள விருப்பம்!

✠ எஸ். அம்புஜம், கேகே நகர்
கே. பத்திரிகையில் எழுதுபவர்கள் திரைக்கு எழுத முடியாது என்ற ரீதியில் நீங்கள் கூறியுள்ள பதில் தவறு என்று ஆதாரத்துடன் கூறமுடியும்!

ப: அந்தப் பதில் சற்று சரியில்லைதான்- பத்திரிகையிலிருந்து திரை உலகிற்குச் சென்று எழுத முடியும். ஆனால் அங் இருப்பவர்கள்தான் பத்திரிகையில் எழுதுவதற்குச் சிரமப்படுவார்கள் — ஒன்றிரண்டு விதிவிலக்குகளைத் தவிர. மகேந்திரன், சோ, புஷ்பா தங்கதுரை, கோவி. மணிசேகரன், ஜெயகாந்தன் சுஜாதா போன்ற பத்திரிகை எழுத்தாளர்கள் திரைத் துறையிலும் கொடி நாட்டியிருக்கிறார்கள்.

✠ கே. பிரதாப்சிங், அரகண்ட நல்லூர்
கே. அதிக புத்திசாலித்தனம் கூட ஒரு வகையில் ஆபத்தானது என்று எண்ணுகிறேன்!

ப: அந்த ஆபத்து நம் இருவருக்கும் நிச்சயம் ஏற்படாது!

✠ டி. கூடலரசன், மதுரை-10
கே. உமது பதில்கள் விளைவிப்பது மாற்றங்களா, அல்லது ஏமாற்றங்களா?

ப: தடுமாற்றங்கள்!

✠ பி. எஸ். துரை, புதுடில்லி-2
கே. மகேந்திரனை எல்லாப் பத்திரிகைகளும் பாராட்டுகின்றனவே அது ஒரு ஃபாஷன் என்பதாலா?

ப: டைரக்டர் மகேந்திரன் இரண்டு படத்திலேயே தமிழ்த் திரையில் ஒரு மைல் (கிலோ மீட்டர்?) கல்லாகச் சிறப்புப் பெற்றுவிட்டார். அவர் படங்கள் ரியலிஸ்டிக்காக இருக்கின்றன. ரியலிஸம் என்கிற பொய்யான சமாசாரங்கள் கிடையாது. நடிகர்களுக்கு நடிக்க வாய்ப்புத் தருகிறார். டயலாக் பேசும் பெஷினாக ஆக்குவதில்லை. ஆகவேதான் அவரைப் பாராட்டுகிறார்கள்.

✠ பா. உதயகுமார், திருநின்றவூர்
கே. மனசாட்சியை ஏன் படைத்தான் இறைவன்?

ப: ஒவ்வொரு மனிதனுக்கும் தனியாக ஒரு வாட்ச்மேன் படைப்பதைத் தவிர்க்க.

✠ சுதா மணிமேகலை, வேலூர்
கே. திருவள்ளுவர், திருக்குறளை என்ன நினைத்துக் கொண்டு எழுதியிருப்பார்?

ப: பல பிரசுரகர்த்தர்கள் பின்னால் பல பதிப்புக்கள் போட்டு, ராயல்டி தொல்லை இல்லாமல் நிறையப் பணம் சம்பாதிக்கட்டும் என்கிற எண்ணத்தில் எழுதியிருந்தாலும் இருக்கக்கூடும்!

✠ ஏ. பாரதிசங்கர், சங்கரன்கோவில்
கே. அழகான பெண்களைக் கண்டால் என்ன என்னுவீர்கள்? (பயனுள்ள பல கேள்விகளை நான் அனுப்பினேன். அவைகளை விட்டு உதவாத கேள்விகளைப் போடுகிறீர்களே!)

ப: உங்களுக்கு ஏன் வருத்தம்? இந்த வாரம் உங்களுடைய ''பயனுள்ள'' கேள்வியைப் போட்டிருக்கிறேன்.

✠ கே. ஸ்ரீ. ரமணி, புதுடில்லி-67
கே: பெரியவர்களை 'நீங்க' என்று அழைக்கிறோம். கடவுளை மட்டும் 'நீ' போட்டு அழைப்பதன் காரணம் என்ன?

ப: 'நீங்க' என்றால் கடவுள் நம்மை விட்டு நீங்கிப் போய்விடுவார் என்பதால் இருக்கலாம்.

✠ மது கண்ணன், ஹைதராபாத்
கே. வாழ்க்கை என்பது என்ன?

ப: கேள்வி என்ன என்பது தெரியாமலேயே விடை கண்டு பிடிக்க வேண்டிய கணக்கு. சில சமயம் விடையே இல்லாத கணக்கையும் நாம் சந்திக்க வேண்டி வரும். வேறு சில சமயங்களில் விடை தரப்படும். கணக்கை நாம் கண்டுபிடிக்க வேண்டும். (தத்துவமாகப் பதில் கூற முடியாது என்று என்னைப் பற்றி நினைப்பவர்களுக்கு இந்தப் பதில் எச்சரிக்கையாக இருக்கட்டும்!)

ரூ 5 பரிசு பெறுபவர் :

பா. உதயகுமார்
11. மண்டபம் வீதி
திருநின்றவூர்-602024

பயங்கள்

ஹில்டா ஜெரோத்தனம்



ரவி அலறி அடித்துக் கொண்டு எழுந்தான். பாம்பு கடித்துவிட்டது.

சடக்கென்று போர்வையை உதறி எறிந்தான். உடம்பு கிடுகிடுவென்று நடுங்கியது.

'டக்'கென்று லைட்டைப் போட்டான்.. வெளிச்சம் அவன் பயத்தைப் போக்குவதற்குப் பதில் அதிகமாக்கியதாய் உணர்ந்தான். கண்கள் மிரளத் தலையை மறுபுறம் திருப்பிக் கொண்டான்.

மேலே ஃபேன் சுற்றிக் கொண்டிருந்தும் உடம்பெங்கும் வியர்வை பெருக்கெடுத்துப் பிசுபிசுத்தது.

எதிரில் பீரோ கண்ணாடியில் தெரிந்த அவன் கண்களில் அப்பிக் கொண்டிருந்த அந்த மிரட்சி — உடம்பின் நடுக்கம்—ரவிக்கு உடம்பு சிலிர்த்தது.

டக்...டக்...

திடுக்கிட்டுத் திரும்பினான். இவ்வளவு நேரம் இல்லாமல் இந்தச் சத்தம் எங்கிருந்து வருகிறது?.... அப்பாடா.... கடிகாரம்.

மெல்லக் கட்டிலை விட்டு இறங்கினான். மெதுவாய் ஒரு ஒரு அடியாய் எடுத்து வைத்து நடந்தான். மேஜை மேல் இருந்த மண் கூஜாத் தண்ணீரை கிளாஸில் ஊற்றிக் குடித்தான். 'மடக்' , 'மடக்' கென்ற சத்தம் அவன் நெஞ்சில் இன்னும் பயமாய் அடைப்பது போல உணரவே டக்கென்று தண்ணீர் குடிப்பதை நிறுத்திக்கொண்டான்.

—ஒரு கனவா? ஒரு கனவினாலா நான் இவ்வளவு பாதிக்கப்பட்டு விட்டேன்? பாதித்தது கனவா? இல்லை, பூகம்ப நெருப்பாய் மனசுக்குள் புதைந்து கிடக்கும் அழுத்தமும் இறுக்கமும் கனவின் விரிசலால் பொங்கிச் சிதறுகின்றனவோ?

தெருவில் திடீரெனக் குரைத்த ஒரு நாயின் ஓசை ரவியின் உடம்பை ஒரு தூக்குப் போட்டுக் குலுக்கியது.

ரவியை மறுபடியும் பயம் அப்பிக்கொள்ளத் திரும்பிக் கட்டிலுக்கு வந்து உட்கார்ந்து கொண்டான். போர்வையை இழுத்து மேலே போட்டுக் கொண்டு லைட்டை அணைத்தான். மெல்லப் படுக்கையில் சாய்ந்து கண்களை படியவாறே முகத்தையும் போர்வையால் இழுத்து மூடிக் கொண்டான்!

புஸ்ஸென்று சீறிக் கொண்டு ஒரு பாம்பு ஓடிவந்தது... ஒன்றில்லை இரண்டு... பின்னால் இன்னும் இரண்டு... அதோ இன்னும் நான்கு எட்டு... பதினாறு.... இருபது... இருபது முப்பதாய்.... பாம்பு!... பாம்பு! பாம்பு!! இவன் தலைக்கு மேல் காலின் கீழ், மார்பின் மேல், பக்கத்தில், சுவர்களில், மேஜை மேல், கட்டிலின் கீழ்.. அறையெங்கும் பாம்புகள்... பாம்புகள்,

'வீல்' என்று அலறிக் கொண்டு எழுந்தவன் லைட்டைப் போட்டான். மிரள மிரளத் தன்னைச் சுற்றிச் சுற்றியும், மேலும் கீழும் பார்த்தான். உடம்பு நடுங்கியது. அந்த நடுக்கம் அவனுள் இன்னும் பயமாய்ப் பரவியது.

—ஆமாம், என்னை ஏன் கனவில் பாம்பு கடிக்க வேண்டும்? கனவில் பாம்பு கடிப்பது நல்லதற்கா? கெட்டதற்கா?

—'பாம்பு கடிச்சிச் செத்துட்டா — கனவுல, அது நல்லதுக்குத்தான். எதிர்பார்க்காம ஒரு பெரிய அதிர்ஷ்டம் அடிக்கும்னு அம்மா சொல்வாங்க. பாம்பு கடிச்சதுமே நான் விழிச்சுக்கிட்டேன். செத்தேனா இல்லையான்னு தெரியலியே...

—ஒரு சமயம் என்னைக்கிருந்தாலும் ஒரு நாளைக்கு அந்தப் பாம்பு என்னைக் கடிக்காமல் விடாதுங்கறதைத்தான் இந்தக் கனவு உணர்த்துதோ...

இதை நினைத்ததும் ரவியின் மனசு 'குப்' பென்று அடித்துக் கொண்டது. அந்தப் பாம்பு—

• • •

மூந்தாநாள்.

சாயந்திரம்.

அம்மாவும் விஜியும் தோட்டத்தில் அவரைக் காய் பறித்துக் கொண்டிருந்தார்கள். ரவி கிணற்றங்கரையில் சலவைக் கல்லின் மேல் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

விஜி திடீரென்று கத்தினாள்.

''அம்மா பாம்பு...பாம்பு!....''

''எங்கே? எங்கே?'' ரவியும் எழுந்து ஓடினான்.

''அதோ பார் வேலி யோரத்துலே. ஒதிய மரத்துக்குப் பக்கத்திலே.''

பார்த்தான். நல்ல பாம்பு. பெரிசாய்க் கை மொத்தத்துக்கு இருந்தது. பக்கத்தில் கிடந்த செங்கலைக் குனிந்து எடுத்தான்.

''டேய் ரவி! வாணாம் வுட்டுடுடா... அது பெரிய பாம்பு. உன்னால அடிக்க முடி



யாது'' அம்மா அவசரமாய்த் தடுத்தது ரவியின் மனதில் விழவில்லை. ஓங்கி அடித்தான். குறி தவறவில்லை. அதன் நடு வயிற்றில் 'சத்'தென்று செமத்தியாய் விழுந்தது.

அடுத்த கணம்—

'புஸ்'ஸென்று அப்படியொரு பெருஞ் சீறலுடன் அது எகிறும் என்று ரவி நினைக்கவில்லை. எல்லோருமே பின்னுக்கு ஓடினார்கள்.

பெரிய விசிறி மட்டை அளவுக்கான அதன் படத்தைக் கண்டதும் ரவியும் பயந்துதான் போனான். அப்புறம், அவன் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அடுத்த கல்லைத் தேடி எடுப்பதற்குள்' அது சரசரவென்று ஓடி மறைந்து விட்டது. கிட்டப் போய்த் தேடவும் பயம். அம்மாவும் திட்டினாள். அப்புறம் அவர்களும் அவரைக்காய் பறிக்கவில்லை.

அப்பொழுதுதான் அம்மா சொன்னாள். ''சொன்னாக் கேட்டாத்தானேடா. நல்ல பாம்ப பாதியிலே அடிச்சு விடக் கூடாதுன்னு சொல்வாங்க. வஞ்சம் வச்சுக்கினே இருக்குமாம்.'' அம்மாவின் விசனம் அவனுக்கு அப்பொழுது வேடிக்கையாய்ப் பட்டது.

இப்பொழுது அந்த வார்த்தைகளின் தாக்குதலில் மனசு சிலிர்த்தது. தலையை உலுக்கிப் பலவந்தமாய்த் தன்னைத் தன் பயங்களில் இருந்து உதறிக்கொள்ள எத்தனித்தான்.

—ஜெயா இப்பொழுது எப்படி நிம்மதியாய்த் தூங்கிக் கொண்டிருப்பாள்! தூங்கிக் கொண்டிருப்பாளா?... இல்லை விழித்துக் கொண்டிருப்பாளோ... அவளும் என்னைப் போல் ஏதேனும் கனவு கண்டு விழித்துக் கொண்டிருப்பாளோ... ஆமாம்! அவள் என்ன கனவு கண்டிருப்பாள்?... அந்தச் சிவப்புத் தாவணிக்கு மேட்சா சிவப்பு வளையல் வேணும்னு போன வாரமே கேட்டா... இந்த வாரமாவது மறக்காம வாங்கிண்டு போகணும்....

'டிங்...டிங்...' தன் நினைவுகளைப் பலவந்தமாக்கிக் கொண்டு பயங்களிலிருந்து விடுபட முயன்று கொண்டிருந்தவன், திடுக்கிட்டான். கடிகாரம், நான்கு மணி அடித்தது.

மனத்தில் மறுபடியும் வேதாளம் முருங்கை மரம் ஏறிக் கொண்டது. தூக்கம் வராத மனசைப் பயங்கள் ஞாபகங்களும் காட்சிகளுமாய் அலைக்கழித்தன.

வயலுக்குப் போகும் வழியில் ஏரிக் கரையில் ஒரு பெரிய சப்பாத்திப் புதர். முன் ராத்திரி நேரங்களில் அங்கே எப்பொழுதும் ஒரு வாசனை — உளுந்து வாசனை போல் — வரும். நல்ல பாம்பும் சாரையும் உறவு கொள்ளும்போது அப்படி வாசனை வருமாம். ரவி ஒரு நாள் கூடப் பார்த்தது இல்லை. ஆனால், தனித் தனியாய் நல்ல பாம்பு, சாரை இரண்டையும் பார்த்திருக்கிறான்.

இரண்டு வருடங்களுக்கு முன்னாலேயே நடந்தது — அதுவும் வெயிற் காலம்தான். உள் வாசலில் படுத்துக் கொண்டிருந்த கலோசனா அண்ணியைப் பாம்பு கடித்து... 'அய்யோ அம்மா' என்று அலறி, எல்லோரும் எழுந்துகொள்ள... பத்தே நிமிஷம்....

கம்பு, கழி, சில்லாக் கோல், விளக்கு சகிதம் தேடி, மூலையில் அடுக்கியிருந்த ஓட்டுக்குள்ளிருந்து அதை அடிப்பதற்குள்—

மாட்டுக் கொட்டாயில் படுத்திருந்த உன்னேரிப்பட்டானை எழுப்பி, வண்டி விழுத்து, நுகத்தடி பூட்டி, மாடு கட்டிக் கிளப்புவதற்குள்—


இவன் கண் முன்னாலேயே அண்ணி நுரை தள்ளி விகாரமாய்ச் செத்துப் போனாள்.

நினைவும், காட்சிகளும், பயமும் தொடர்ந்து கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை.

அம்மா எழுந்து வெளியில் சாணம் தெளிக்கிற சப்தம் கேட்டது. ரவிக்கு மனசில் ஒரு தைரியம் வந்தது. அப்படியே கண்ணயர்ந்து போனான். விளக்கைக்கூட அணைக்காமல்.

அம்மா வந்து காப்பியுடன் எழுப்பினவள், இவன் முகம் வெளிறிக் கிடப்பதைப் பார்த்து உடம்பு என்னவோ ஏதோ என்று கேட்டாள்.

வழக்கமான காரியங்கள் எல்லாம் முடிந்து ஒன்பது மணிக்கு வீட்டை விட்டுக் கிளம்பினான். கல்லூரிக்குப் போக மனசில்லை.



'ஜெயா வீட்டுக்குப் போகலாம்.' ஜெயா கிட்டப் பேசிக்கிட்டிருந்தா மனப்பிரமைங்க எல்லாம் போயிடும் என்று நினைத்துக்கொண்டான். சைக்கிளை ஜெயா வீட்டுக்கு மிதித்தான்.

ஜெயாவின் இனிய ஞாபகங்களில்—அடுத்த வருஷம் கல்யாணம் செய்து கொண்டு அவர்கள் தொடங்கப் போகும் புது வாழ்க்கை பற்றிய கற்பனைகளில்—லயித்தவனுய்ச் சைக்கிளை மிதித்துக் கொண்டிருந்தான்.

ரயில்வே ஸ்டேஷனைத் தாண்டியாகி விட்டது. இன்னும் பாதித் தூரம்தான்.

ஓடைப் பாலத்தைக் கடந்தவன் கண்ணில் பட்டது — அந்தப் பெரிய பாம்புப் புற்று. எப்பொழுதும் பார்ப்பதுதான். ஆனல் இப்போது—

மனசுக்குள் பதுங்கிக் கிடந்த அந்தப் பயங்கள் எல்லாம் குபுக்கென்று விஸ்வரூபம் எடுத்தாட ஆரம்பித்தன. அவ்வளவுதான்; பயம் 'ஆக்டோபஸாய்' அவனைப் பின்னிக்கொள்ளப் பார்வை மங்கியது போல் இருந்தது.

ரோடு மறைந்தது.

வரிசை வரிசையாய்... கூட்டம் கூட்டமாய் பாம்புகள்... பாம்புகள்... சின்னதாய்—பெரியதாய் — சீறிக்கொண்டு — படம் எடுத்துக்கொண்டு...

''அய்யோ...அம்மா....''

ரவியின் அலறலைத் தேய்த்து அமுக்கிக் கொண்டு கிறீச்சிட்டது அந்த லாரி.

வடநாட்டிலிருந்து தேடிப் பிடித்துக் கொண்டு வரும்படி இப்படத்தின் கதையில் அப்படி விசேஷமாக என்ன இருக்கிறதென்று புரியவில்லை. 'கர்' என்ற ஹிந்திப்படத்தின் தமிழ் வடிவம் இப்படம். ''காதல் கிளிகள்'' (சிவகுமார்—ரதி) இடைவேளைக்குப் பிறகு வேதனைப் பறவைகளாக மாறி விடுகின்றனர்.

இரவு சினிமாக் காட்சி பார்த்து விட்டுக் காலாற நடந்து வந்து கொண்டிருந்த காதல் பறவைகளைச் சில குண்டர்கள் தாக்கி, பெண் பறவையைக் களங்கப்படுத்தி விட்டு ஓடி விடுகின்றனர். இருவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெறுகின்றனர். இதற்குப் பிறகு ரதியின் போக்கு மாறி விடுகின்றது. தன்னைக் களங்கப் படுத்திய குண்டர்களையே நினைத்து அலறுகிறுள்; தான் களங்கப்பட்டு விட்டது பெரிய பாவம் என்று தீர்மானித்துப் பிறந்த வீடு சென்று விடுகிறுள். அதற்குப் பிறகு மனேதத்துவ முறைச் சிகிச்சை நடந்து குணமடைந்து காதல் பறவைகள் இன்ப வானத்தில் மீண்டும் சிறகடித்துப் பறக்கின்றன'. அவ்வளவுதான் கதை.

மொழு மொழு கன்னமும், குழிவிழும் சிரிப்புமாக வரும் ரதி இப்படத்தில் ஓரளவு நடித்திருக்கிருர் — இல்லை, டைரக்டர் ரதியை நடிக்க வைத்திருக்கிருர். இகிலேயும், துயரத்தையும் ரதியிடம் காண முடிகிறது.

சிவகுமாரின் திரையுலக அநுபவம் கை விட்டு விடவில்லை. ரதியோடு ரமிக்கிருர். கடைசியில் கண்ணீர் துளிக்கிருர்.

போலீஸ் இலாகாவைப் பரிகசிப்பது என்பது நம் சினிமாப் படங்களின் மரபு. இந்தப் படத்தில் அது அதிகமாகவே போய் விட்டது. ஹோட்டலில் 'ரெய்டு' செய்யும் இன்ஸ்பெக்டர் தடுக்கி விழுவதும் அசடு வழிவதும் எவ்வளவு மட்டம்! இன்ஸ்பெக்டராக வருபவர் நாகேஷ் என்பதால் ஓர் அபத்தத்தைச் சகித்துக் கொள்ள முடியுமா?

கருணிராஜனின் தேர்தல் காமெடி நன்ருயிருக்கிறது. கூட்டத்தில் சோடா புட்டி வீச ஏற்பாடு செய்வதும், அவரே அதில் விபத்துக்குள்ளாவதும் நல்ல தமாஷ். சச்சு சினிமாவில் நடிக்கப் போவதாகச் சொல்லிக் கணவனைப் பயமுறுத்துவது நன்ருயிருக்கிறது. அந்தக் காட்சியில் சச்சுவின் முக பாவங்கள் பிரமாதம்!

—மேஜர் வருகிருர், பிள்ளையை மிரட்டுகிருர், போய்விடுகிருர். வந்தேன்; பார்த்தேன்; திரும்பிப் போனேன்!

அநுபவ முதிர்ச்சி பெற்ற டைரக்டர் ஏ.சி. திருலோகசந்தரிடம் ரசிகர்கள் இன்னும் நிறைய எதிர்பார்க்கிருர்கள். அவர் போய் இப்படிப் படம் எடுத்திருக்கிருரே!

விசுவநாத் ராயின் வண்ண ஒளிப் பதிவு சிறப்பா யிருக்கிறது.

காதல் கிளிகள் பஞ்சவர்ணக் கிளிகளாக வித விதமான உடைகளில் பறக்கின்றன. ஓவர் டோஸ்!

-காந்தன்



டாக்டர் பேசுகிறேன்!

குழந்தை பிறக்கவில்லை என்றும் மனைவியை மட்டும் வைத்தியப்பரிசோதனைக்கு உட்படுத்துவது சகஜமாக இருக்கிறது. பேசும் போதும் குழந்தை பிறக்காமலிருப்பதற்குக் குறை அவளிடம் மட்டும்தான் இருப்பது போல் குறிப்பிடுகிறார்கள். மலடி என்கிறார்கள். இது மிகவும் தவறு. கணவன் மனைவி இருவரும் வைத்தியப் பரிசோதனைக்கு வரவேண்டும். டாக்டர் முதலில் கணவனைப் பரிசோதித்த பிறகுதான் மனைவியைப் பரிசோதிக்க வேண்டும்.

குழந்தை இல்லை என்று ஏங்கும் தம்பதிகளைச் சோதித்தால் நாற்பது சத விதம் மலட்டுத்தன்மைக்குக் காரணம் கணவன் தான் எனக் காண்கிறோம். சிலருக்கு விந்துவில் உயிரணுக்கள் இல்லாமலிருக்கலாம். அல்லது விந்து வருகிற பாதையில் ஏதாவது அடைப்புக்கள் இருக்கலாம். இவர்கள் பரிசோதனைக்கு வந்தால் தகுந்த வைத்தியம் செய்ய முடியும்.

மலட்டுத்தன்மை மனைவியிடம் மட்டுமா?

பெண்களுக்குக் கர்ப்பப்பையுடன் தொடர்பு உள்ள குழாய்களில் ஏதாவது தொந்தரவு இருக்கக் கூடும். அல்லது பால் வியாதியால் அப்பெண் தாக்கப்பட்டிருக்கலாம். செப்டிக் அபார்ஷன் அவளுக்கு நேர்ந்திருக்கலாம். இந்தக் காரணங்களால் கர்ப்பம் தங்காது. ஒருசில பெண்களுக்குக் கர்ப்பப்பை பூரண வளர்ச்சியடையாமல் இருக்கலாம். சிலருக்குக் கர்ப்பப் பை வாய் சரியாக இல்லாமல் இருக்கக் கூடும். இவை எல்லாம் 'கரு' உருவாகாமல் செய்யும். சிகிச்சை செய்து சரிப்படுத்தி விடலாம்.

சில சந்தர்ப்பங்களில் கணவன் — மனைவி இருவருக்குமே உடலுறுப்புக்களில் எத்தகைய குறையும் இல்லாமல் இருந்தும் குழந்தை பிறப்பதில்லை. இது விநோதமாகத் தோன்றும். இதற்கும் பல காரணங்கள் உண்டு. அவை மனோதத்துவ ரீதியானவை. சாதகமான சூழ்நிலை வேண்டும். மனத்தில் இனைவின் தாபம் வேண்டும். அதிகப்படியான மனப் பதற்றமோ, அலை மோதும் மனக் கவலைகளோ கூடாது. மனத்தில் சொல்ல முடியாத அளவு கவலைகள் வைத்துக்கொண்டிருப்பவருக்குக் குழந்தை உண்டாவது கடினம். முதல் இரவுக்கு அறையை அமர்க்களமாக, கவர்ச்சியாக அலங்கரிப்பது இந்த அடிப்படையில்தான்.

சில ஆண்கள் பார்க்க வாட்ட சாட்டமாக இருப்பார்கள். மனைவியிடமும் மிகுந்த ஈடுபாடு இருக்கும். எல்லாம் சாதகமாக இருந்தும் குழந்தை பிறக்காது. காரணம் இவர்களுடைய விந்துவில் ஜீவ அணுக்கள் இருப்பினும் அவை போதிய சக்தி அற்றவையாக இருக்கலாம். நீந்திச் சென்று முட்டையை அடையும் ஆற்றலற்று இருக்கலாம்.

இந்தக் குறையையும் வைத்தியர்களை அணுகி னால் தீர்த்துக் கொள்ள வழியுண்டு.

தன்னிடம் ஏதோ குறைபாடு இருப்பதாகக் கற்பனை செய்து கொண்டு அதனால் ஏற்படும் பயமும் கவலையுமே சில ஆண்களுக்கு மனைவியைச் சேருவதற்கு இடையூறாக இருக்கலாம்.

இந்த மாதிரி பாதிக்கப்பட்டவர்கள் வெட்கப்பட்டு மருத்துவப் பரிசோதனை செய்து கொள்ளாததால் வாய்ப்புக்களை இழக்கிறார்கள். இது பரிதாபம். டாக்டரிடம் மனம் விட்டுப் பேசுவதிலேயே மனப் பாரம் குறைந்து புத்துணர்ச்சி, பிறக்க வாய்ப்புண்டு. மருத்துவ ரீதியிலும் டாக்டர் உதவுவார்.

இயற்கையாகக் குழந்தை உண்டாக ஏதாவது தடங்கல் இருக்குமானால் கணவருடைய விந்துவை எடுத்து மனைவிக்குச் செலுத்திச் செயற்கை முறையில் கர்ப்பம் ஏற்படவும் செய்யலாம். இந்த முறையில் பிறந்த குழந்தை ஆரோக்கியமாகவும் இருக்கிறது. இதை என் மருத்துவ பணியிலேயே செய்திருக்கிறேன்.

டாக்டர்: திருமதி ருக்மிணி
சௌரிராஜன்
பேட்டி: குயிலி ராஜேஸ்வரி



அவன் அவள் அது

சிக்கலான கதைக் கரு. அருமையாகப் படமாக்கப் பட்டிருக்கிறது. பிரசித்திபெற்ற எழுத்தாளர் சிவசங்கரியின் கதைக்கு விசு, திரைக் கதை உரையாடல்கள் எழுதியிருக்கிறார். தம் பணியைச் சிறப்பாகச் செய்திருக்கிறார்.

லாவண்யாவும், ராமநாதனும் அன்புமிக்க தம்பதி. ஒரு ஆபரேஷன் காரணமாக லாவண்யா தாய்மைப் பேற்றை அடைய முடியாத நிலையை அடைகிறாள். ராமநாதனின் தந்தை பேரக் குழந்தையைச் சீராட்ட மிகவும் ஆசைப்படுகிறார். தன் சுவைவயின் உயிரணுக்களைக் கொண்டு இன்னொரு பெண்ணைக் கருவுறச் செய்து' குழந்தைப் பேற்றை அடைய விரும்புகிறாள், லாவண்யா. மேனகா என்ற ஓர் அநாதைப் பெண் லாவண்யாவுக்காகக் குழந்தையைப் பெற்று அவளிடம் கொடுத்துவிடச் சம்மதிக்கிறாள்.

—லாவண்யாவாக வரும் லக்ஷ்மி எவ்வளவு சிறப்பாக நடிக்கிறார்! தாய்மைப் பாசம், குழந்தைப் பாசம் இவற்றுக்கிடையில் ஊடல் கோபம், தாபம் அனைத்தையும் தம் முக பாவங்களிலேயே காட்டி விடுகிறார். நவரச பாவங்களையும் அவர் நடிப்பில் காண முடிகிறது.

ஸ்ரீப்ரியா லக்ஷ்மியுடன் போட்டி போட்டுக் கொண்டு நடித்திருக்கிறார். தன் வயிற்றில் வளரும் சிசுவின் தந்தை யாரென்று அறிந்ததும், அவனுடன் பழக, பேச, அளவளாவ மேனகா துடித்த துடிப்பை அப்படியே ஸ்ரீப்ரியாவிடம் காண முடிகிறது. அவர் ராமநாதனுடன் டெலிபோனில் பேசிய போது அடைந்த மகிழ்ச்சி, புத்துணர்ச்சி, அப்பப்பா... பிரமாதம்!

சிவகுமார் கதாநாயகன். தாம் ஏற்ற பாகம் ஏற்றம் உறும் அளவில் நன்றாய் நடித்திருக்கிறார்.


படத்தின் நகைச் சுவையின் தனி நாயகியாக விளங்குபவர் மனோரமா. ராமநாதன், மேனகாவுக்கு போன் செய்தபோது, மனோரமாவிடம் போன் சிக்கி அவர் படுத்திய பாடு! கொட்டகையே அதிர்கிறது!

ஆர். சம்பத்தின் வண்ண ஒளிப் பதிவு கண்ணைப் பறிக்கிறது!

முக்தா வி. ஸ்ரீனிவாசன் படத்தை அருமையாக டைரக்ட் செய்திருக்கிறார்.

நெருப்புடன் விளையாடக் கூடாது என்பார்கள். இயற்கைச் சக்திகளுடன் விளையாடுவதும் ஆபத்துத்தான். அதைப் படம் நன்றாகவே உணர்த்துகிறது.

- காந்தன்



அலசுகிறர்கள்..

ஐந்து வருஷங்களுக்கு மேலாக மழலைச் செல்வத்துக்காகத் தவமிருக்கும் திரு ஜெயராம் தம்பதியரை, 'அவன் அவள் அது' படம் பார்க்கச் செய்து அபிப்பிராயம் கேட்டோம்.

திரு ஜெயராமன்: 1980ம் வருடத்தில் தான் நாம் வாழ்கிறோம் என்றாலும் சிவகுமார் படத்தில் அவ்வளவு எளிதாக ஒப்புக் கொள்வது எனக்குப் பிடிக்கவில்லை. மனைவி ரொம்பவும் வற்புறுத்த, அவளுக்காக, அவள் மனத் திருப்திக்காக உடன்படுவது போல் இன்னும் சரியான முறையில் காட்டப்பட வேண்டும். முடிவு புத்தகத்திலிருந்து மாறுபடுகிறது. கணவனின் அன்பு தன் ஒருத்திக்கு மட்டுமே வேண்டும் என்று உறுதியுடனிருக்கும் கதாபாத்திரம் கணவன் வேறொரு பெண்ணுடன் தொடர்பு கொண்டுவிட்டான் என்று தெரிந்த பிறகு புத்தகக் கதையின் பிரகாரம், பிரிவுக்குத்தான் ஏற்பாடு செய்திருக்க வேண்டும். திரும்பவும் ஆயாவாக வந்து அடுப்பு மூட்டக் கூடாது. நாகரிக யுகத்தில் செயற்கைக் கருத்தரிப்பு முறை வேகமாகப் பிரபலமடைந்து கொண்டிருக்கிறது. இந்தப் படத்தின் ஆணி வேரும் அதுதான். ஆயினும், படத்தின் கதாநாயகி பால்காரனிடமிருந்து விவரத்தைத் தெரிந்து கொள்வதும் வீட்டு வாசல்படியில் அவனுடன் சரி சமமாக உட்கார்ந்து செயற்கைக் கருத்தரிப்பு முறையை அலசி ஆராய்வதும் அநாகரிகமாகத் தோன்றி மனத்தை நெருடுகிறது. பாடல்களை யெல்லாம் வெட்டி விட்டால் படத்தில் உட்காரலாம்.

திருமதி ஜெயராமன்: என் மனத்தில் நின்ற ஒரே காட்சி டாக்டராக வரும் புஷ்பலதா தமிழ் நாட்டைப் பற்றி, அதில் வாழும் பெண்மணிகளைப் பற்றிக் கூறிவிட்டு, ''எந்தப் பெண்ணுமே இதை ஒப்புக் கொள்ள மாட்டாள்; அப்படியே ஒப்புக் கொண்டாலும் ஒரு பிள்ளையைப் பெற்றுக் கொடுத்து விட்டு எல்லாவற்றையும் மறக்கத் துணிய மாட்டாள்'' என்று சொன்னதுதான். இந்தப் பேருண்மை படத்தில் நிலைநாட்டப்படுகிறது. டாக்டரின் இக்கருத்தை டாக்டர் உட்பட எல்லோரும் அசட்டை செய்ததால் எத்தனை பேருக்கு எவ்வளவு துன்பம்! ஒரு மிகச் சிறிய கதையை நீண்ட படமாக எடுக்கக் கஷ்டப்பட்டிருப்பது நன்றாகவே தெரிகிறது. சம்பவச் சேர்க்கைகள் எல்லாம் சத்துள்ளதாக இல்லை.

ஒரு காட்சியில் சிவகுமார் ஸ்ரீப்ரியாவைப் பார்த்து 'உன்னைப் பார்த்தால் கர்ப்பிணி மாதிரியே இல்லையே' என்று கேட்க, ஒவ்வொருவர் உடல் வாகு அப்படி யென்று ஸ்ரீப்ரியா பதில் அளிக்கிறார். உண்மையாகவே ஸ்ரீப்ரியாதான் உடல் வாகைக் கவனித்துக் கொள்ள வேண்டும்.

லட்சுமியை அதிகம் பேச விட்டிருக்கிறார்களோ என்று தோன்றுகிறது. அதுவும் அவர் தனக்குத் தானே பேசிக் கொள்ளும் கட்டங்கள் வரும்போது இந்த எண்ணம் வலுப்பெறுகிறது.

கடைசியில் தாதியாக வருவது சரிதான். ஏனென்றால் எந்தக் கணவனின் மேலும், பிறக்கப் போகும் குழந்தையின் மேலும் அதிக பாசம் வைத்திருந்தாளோ அந்தக் கணவனும் குழந்தையும் மேனகா இறந்த பிறகு தனக்காகக் காத்துக் கொண்டிருப்பதை அறிந்தவுடன் வராமலிருக்க முடியுமா?

பேட்டி: சலன்

தாய்த் தமிழே!



முத்தமிழே! முழுநிலவே! மூச்சி யக்கும்
வளியுயிரே! முக்கனியே! நெஞ்சில் கொஞ்சும்
சித்திரமே! வித்தகமே! மழலைத் தாயே!
தெவிட்டாத தேனமுதே! அருவிப் பண்ணே!
புத்தமுதே! பூங்காற்றே! சந்தச் சிந்தே
புவியாளும் இலக்கியத்தின் இலக்க ணத்தின்
சொத்துநிறை கருவூலத் தாயே! உன்னைத்
தரணியாள வைத்திருந்து மகிழ்வோம் என்றும்!

— வலங்கொண்டான்

இரக்கமற்ற இரவுகள்

ஹேமா ஆனந்ததீர்த்தன்



4

வாசலில் நின்றது ராதாவேதான்!

பரபரப்புடன் ரவி வாசல் கதவைத் திறந்து ''வா, ராதா, வா உள்ளே'' என்று அழைத்தான்.

''உங்க அப்பாவுக்கு எப்படி இருக்கு?'' என்று கேட்டுக் கொண்டே ராதா உள்ளே நுழைந்தாள்.

''ஒண்ணும் சரியாகத் தெரியல்லே. டட் ஹி ஸீம்ஸ் டு பி அவுட் ஆஃப் டேன்ஜர்'' என்று கூறியபடியே ரவி அவளை வழி காட்டி உள்ளே அழைத்துச் சென்றான்.

ஹாலுக்குள் நுழைந்த ராதாவை அங்கிருந்த எல்லோருமே வியப்புடன் பார்த்தார்கள். ராமுவும் ஆச்சரியத்தோடுதான் பார்த்தான். ஆனால் மற்றவர்களுக்கும் அவனுக்கும் ஒரு வித்தியாசம். ''யார் இவள்?'' என்ற வியப்பு மற்றவர்களுக்கு. ''எதற்காக இவள் ரவியின் வீடு தேடி வந்து விட்டாள்?'' என்ற வியப்பு ராமுவுக்கு.

ரவியும் ராதாவும் ராகவனின் படுக்கை அருகில் வந்து நின்று அவரைப் பார்த்தனர். ராகவனும் ராதாவையும் ரவியையும் பார்த்தார். அந்தக் கண்களில் பளிச்சிட்ட கேள்வியை ரவி புரிந்து கொண்டான்.

''ராயப்பேட்டையிலே வக்கீல் குப்புசாமி இருக்காரில்லையா? அவரோட பெண். அவளும் எங்க பாங்குக்குப் பக்கத்தில் இன்னொரு பாங்கிலேதான் வேலை செய்யறா'' என்று அறிமுகப்படுத்தினான்.

''நமஸ்காரம்'' என்று ராதா தன் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டாள்.

ராகவன் தனது வலது கையை மட்டும் சற்று உயர்த்திப் பதில் வணக்கமோ, ஆசீர்வாதமோ எதுவோ செய்தார்.

''டெலிபோனில் மிஸ்டர் ராமு விஷயத்தைச் சொன்னதும் எனக்கு ஒரே 'ஷாக்' ஆயிடுத்து. அதனால்தான் மனசு கேக்கலே. பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன்'' என்றாள் ராதா.

ரவிக்குத் தர்மசங்கடமான நிலை. ராதாவுடன் என்ன பேசுவது? எல்லோர் முன்னிலையிலும் எப்படிப் பேசுவது? தகப்பனாரின் நிலைமையைப் பற்றியும் அவர் எதிரிலேயே பேசுவது உசிதமல்ல.

''தாங்க்யூ ராதா. உட்கார்; நின்னுண்டே இருக்கியே'' என்று சுற்று முற்றும் பார்த்தான் ரவி. அதன் குறிப்பை உணர்ந்து கொண்ட உமா உள்ளே அறைக்குச் சென்று ஒரு மடக்கு நாற்காலியைக் கொண்டுவந்து போட்டாள்.

ராதா உமாவைக் கவனிப்பதைக் கண்ட ரவி அவளுக்கு எல்லோரையும் அறிமுகப் படுத்தினான்.

''இவள் உமா. க்யூ. எம். ஸி.யிலே பி.ஏ. செகண்ட் இயர் படிச்சுண்டிருக்கா. இவ உஷா. ஷி இஸ் இன் ஸ்டெல்லா. பி.யூ.ஸி. ரெண்டு பேரும் என் ஸிஸ்டர்ஸ். இவங்க என் மதர். அவர் எங்க தாத்தா — அதாவது அப்பாவுக்கு அப்பா.''

ராதா எல்லோருக்கும் புன்னகை உருவில் வணக்கம் செலுத்தினாள்.

''அப்பாவுக்குத் தொந்தரவா இருக்குமோ என்னமோ. எல்லோரும் உள்ளே வேணா போய் உட்கார்ந்து பேசுங்கோ'' என்றாள் ஜானகி. பிறகு உமாவைக் குறிப்பாகப் பார்த்து, ''சமையலறைக்கே அழைச்சிண்டு போ. காப்பி போட்டுக் கொடு'' என்றாள்.

அரை மணி நேரம் கழித்து ராதா அவர்களிடமெல்லாம் விடை பெற்றுக் கொண்டு கிளம்பியபொழுது ரவியும் அவனுடன் புறப்பட்டான். ராமு அதற்கு முன்பாகவே விடை பெற்றுக் கொண்டு போய்விட்டிருந்தான்.

''கொஞ்சம் வெளியே போய்ட்டு வரேன், அம்மா. மனசுக்கு நிம்மதியாயிருக்கும். ஆனா சீக்கிரம் வந்துடறேன்'' என்று தாயாரிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

இருவரும் மௌனமாக நடக்கலாயினர்.

சிறிது தூரம் சென்றதும் ரவி, ''வீட்டுக்கா ராதா?'' என்று கேட்டான்.

''வேற எங்கியாவது போகணுமா?''

''சாந்தோம் பீச்சுக்குப் போய் ஒரு அரை மணி நேரமாவது உட்கார்ந்திருக்கணும்னு தோணறது.''

''போவோம்.''

கடற் கரையை நோக்கி நடந்துகொண்டிருந்தபோது ரவியின் மனத்தில் ராதாவைப் பற்றிய சிந்தனைகள் நிறைந்திருந்தன. அவள் மற்றொரு பாங்கில் வேலை செய்வதாகத் தகப்பனாரிடம் அறிமுகப்படுத்தினான். உண்மைதான். ஆனால் அவளைத் தனக்கு வெகு நாட்களுக்கு முன்பாகவே தெரியும் என்பதை அவன் அவரிடம் சொல்லவில்லை. அவளைத் தான் முதன் முதலில் சந்தித்த அந்த நினைவு எவ்வளவு இனிமையாக இருக்கிறது! தகப்பனாரின் உடல் நிலை, குடும்பத்தின் எதிர் காலத்தைப் பற்றிய கவலை, எல்லாவற்றையும் மறந்து அந்தப் பழைய நினைவை அவன் மனம் அசை போட ஆரம்பித்தது.

அப்போது ரவி லயோலா கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். பி. ஏ. இரண்டாவது வருடம். கல்லூரி மாணவர் மன்றத்துக்கும் அவன்தான் காரியதரிசி. படிப்பில் கெட்டிக்காரனாக இருந்ததைப் போலவே ரவி மேடைப் பேச்சிலும் சமர்த்தனாக இருந்தான். அந்தத் திறமைதான் அவனை மாணவர் மன்றத்தின் காரியதரிசியாக ஆக்கியிருந்தது.

அன்றைக்கு கோகலே ஹாலில் ஒரு பேச்சுப் போட்டி. சென்னையிலுள்ள அனைத்துக் கல்லூரிகளிலிருந்தும் மாணவர்களும் மாணவிகளும் கலந்துகொள்ளும் வருடாந்தர நிகழ்ச்சி. எந்தக் கல்லூரியிலிருந்து வரும் மாண



வன் அல்லது மாணவி சிறந்த பிரசங்கியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறாரோ அவருக்குப் பரிசு கொடுப்பதல்லாமல் அந்தக் கல்லூரிக்கும் ஒரு கேடயம் வழங்கப்படும். அடுத்த வருடம் வரையில் அந்தக் கேடயத்தை அந்தக் கல்லூரி வைத்துக் கொள்ளலாம். கால் பந்து, கிரிக்கெட் முதலிய விளையாட்டுக்களில் வெற்றி பெற்றுக் கேடயம் பெறுவதை எவ்வளவு பெருமையாகக் கல்லூரிகள் போற்றி வந்தனவோ அதே பெருமையுடன் இந்தக் கேடயம் பெறுவதையும் போற்றி வந்தன. பந்தயம் நடைபெறும் அன்று முடிவுகளை மட்டும் வெளியிடுவார்கள். பரிசளிப்பு விழா, போட்டியை நடத்தும் சங்கத்தினர் ஆண்டு விழா அன்று நடைபெறும்.

ரவி பி. யூ. சி. படித்துக் கொண்டிருந்த போதே இந்தப் போட்டியில் கலந்துகொண்டு மூன்றாவது பரிசு பெற்றிருந்தான். அப்போதிலிருந்தே முதல் பரிசு கிடைக்காமல் போய் விட்டதே என்ற குறை அவனுக்கு இருந்தது. அதற்கு அடுத்த வருடம் என்ன காரணத்தாலோ போட்டியே நடத்தப்படவில்லை. அதன் பிறகு இப்போதுதான் போட்டி மீண்டும் துவங்கியிருப்பதால் ரவி உற்சாகத்தோடு எப்படியும் இந்த முறை முதல் பரிசைப் பெற்றுவிட வேண்டும் என்ற உறுதியோடு போட்டியில் கலந்து கொள்ள வந்திருந்தான்.

போட்டி ஆரம்பிப்பதற்கு முன்னால் அதில் கலந்து கொள்பவர்களையெல்லாம் ஒரு தனி அறையில் இருக்கச் செய்வார்கள். அங்கிருந்து ஒவ்வொருவராகப் பத்து நிமிடங்களுக்கு ஒருவர் வீதம் அடுத்த அறைக்குச் செல்ல வேண்டும். அந்த அறையில் பேச வேண்டிய விஷயத்தின் தலைப்பைச் சொல்வார்கள். யோசிப்பதற்கு இருபது நிமிடம், பிறகு பேசுவதற்குப் பத்து நிமிடம். பேசி முடித்தவர்கள் பார்வையாளர்களோடு சேர்ந்து உட்கார்ந்து கொண்டு பிறகு போட்டியில் கலந்து கொள்பவர்களின் பேச்சைக் கேட்கலாம். முதலில் பேசுபவர்களின் பேச்சைத்தான் பின்னால் பேச இருப்பவர்கள் கேட்க முடியாது.

தனி அறையில் அப்படிக் கூடிய பத்துப் பன்னிரண்டு மாணவ — மாணவியர்களில் ராதாவும் ஒருத்தி. எஸ்.ஐ.இ.டி. பெண்கள் கல்லூரியின் பிரதிநிதியாக வந்திருந்தாள். மற்ற பெண்கள் கல்லூரிகளிலிருந்தும் இரண்டு மூன்று பெண்கள் வந்திருந்தார்கள். ஆனால் ராதாதான் பெண்கள் குழுவில் எல்லோர் கண்களையும் கவரும் வண்ணம் 'பளிச்' சென்று விளங்கினாள். ரவிக்கு அவளைப் பார்த்ததும் உடல் சிலிர்த்தது. இதற்கு முன் இது போன்ற போட்டிகளில் அவளை எங்கும் கண்டதாக அவனுக்கு நினைவில்லை.

மாணவ— மாணவிகள் ஒருவருக்கொருவர் தாங்களே அறிமுகம் செய்து கொண்டு பேசத் தொடங்கினர். ராதா ரவியுடன் பேசுவதற்குத் தானே முன்வந்தாள்.

''உங்களுக்குத்தான் முதல் பரிசு நிச்சயம் என்று எல்லோரும் சொல்கிறார்கள்'' என்று ராதா பேச்சை ஆரம்பித்தாள்.

அவள் குரலும் கூட எவ்வளவு அழகாக இருக்கிறது என்று ரவிக்குத் தோன்றியது. தோன்றியதை உடனே சொல்லி விட்டான்.

''அதெப்படி முதல் பரிசு எனக்குத்தான் என்று நிச்சயமாகச் சொல்ல முடியும்? உங்கள் குரலினிமைக்காகவே உங்களுக்கு முதல் பரிசு கிடைக்கலாமல்லவா?''

''அப்போ எனக்குப் பரிசு கிடைச்சா குரலினிமைக்காக மட்டும்தான் இருக்கும் என்று சொல்றீங்க?'' என்று கூறி ராதா கலகலவென்று சிரித்தாள்.

''நோ, நோ. அப்படிச் சொல்லலே. தயவு செஞ்சு தவறா நினைக்க வேண்டாம்.''

''இல்லே. நானும் வேடிக்கைக்காகத்தான் சொன்னேன்.''

''உங்க பேச்சைக் கேக்கணும்னு எனக்கு ஆசையாயிருக்கு. முதல்லே பேசற வாய்ப்பு எனக்கு வந்துட்டாத் தேவலே.''

''அப்படின்னா நான் உங்க பேச்சைக் கேட்க முடியாமப் போயிடுமே!''

''யூ வோண்ட் லூஸ் எனித் திங்!''

''ஓ யூ ஆர். வெரி மாடஸ்ட்.''

அதற்குள்ளாக நிர்வாகிகள் வந்து பெயர்களை வரிசையாகச் சொன்னார்கள். ராதாவின் பெயரும் ரவியின் பெயரும் கடைசியில் இருந்தன.

''எனக்கு ரொம்ப சந்தோஷம். உங்க பேச்சைக் கேட்க முடியும்'' என்று ராதா சிறு குழந்தையைப் போல் மகிழ்ச்சியை வெளியிட்டாள்.

''நானும் உங்க பேச்சைக் கேட்க முடியுமே!'' என்றான் ரவி.

''அதெப்படி?''

''நான் அந்த அடுத்த அறைக்குள்ளே இருபது நிமிடம் உட்கார்ந்து யோசிச்சுண்டு இருந்தால்தானே உங்க பேச்சைக் கேட்க முடியாமல் போகும்? எனக்கு யோசிக்க அவ்வளவு டைம் வேண்டாம். பத்து நிமிடம் போதும். நானும் உங்களோடேயே மேடைக்கு வந்துடுவேன்'' என்றான் ரவி.

தொடர்ந்து அவளுடனேயே பேசிக் கொண்டிருக்க வேண்டும் என்றுதான் ரவிக்கு ஆசை. ஆனால் அவளை அவ்வாறு செய்ய விடாமல் அவளையோ அவளையோ யாராவது பேச்சுக்கு இழுத்துக் கொண்டே இருந்தார்கள்.

போட்டி தொடங்கி விட்டது. ஒவ்வொருவராக அந்த அறையிலிருந்து அடுத்த அறைக்குப் போவதும், அங்கிருந்து பேச வேண்டிய ஹாலுக்குப் போவதுமாக இருந்

''ஏனய்யா டிக்கெட் வாங்காமல் பிரயாணம் செய்கிறாய்?''

''இதிலிருந்து தெரிந்து கொள்ளுங்கள் நான் எவ்வளவு சிக்கனம்னு!''

- பிரியாபாலு



தார்கள். கடைசியாக ரவியும் ராதாவும் தான் அந்த அறையில் மிஞ்சி இருந்தார்கள்.

''எனக்கு ரொம்ப நெர்வஸாக இருக்கிறது'' என்ருள் ராதா புன்முறுவலுடன்.

''டோண்ட் வொரி. விஷ் யூ தி பெஸ்ட் ஆஃப் லக்.''

நிர்வாகி ஒருவர் வந்து ராதாவை அடுத்த அறைக்குப் போகச் சொன்னுர். ராதா கண்களாலேயே ரவியிடம் விடை பெற்றுக் கொண்டு அடுத்த அறையை நோக்கிச் சென்ருள்.

''சார், எனக்கு யோசிக்க இருபது நிமிடம் டைம் வேண்டாம். பத்து நிமிடம் போதும். நான் மிஸ் ராதாவின் பேச்சைக் கேட்க ஆசைப்படுகிறேன். ஆகவே அவர் மேடைக்குப் போகும் போதே நானும் ஹாலுக்குள் போய்விடலாம் அல்லவா?'' என்று கேட்டான்.

''நோ நோ, நீங்க யோசிச்சாலும் யோசிக்காவிட்டாலும் அந்த அறையில்தான் இருந்தாகவேண்டும். யு கான்ட் என்டர் த ஹால்.''

''ஏன்?''

''அவங்க பேசறதை நீங்க கேட்டா அந்த ஐடியாவை டெவலப் பண்ணியோ எதிர்த்தோ நீங்க பேசிட முடியுமே? அப்படி அனுமதிக்க முடியாது'' என்று நிர்வாகி சொல்லிவிட்டதும் ரவிக்கு ஏமாற்றமாகப் போய்விட்டது. ராதா பேசுவதைக் கேட்க வேண்டும் என்கிற ஆவலில் தனக்கு இந்தச் சின்ன விஷயம் கூடத் தோன்ருமல் போய் விட்டதே என்ற வெட்கமும் ஏற்பட்டது.

கடைசியாக ரவியின் முறை வந்தது. பேசுவதற்கு மூன்று விஷயங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. கிராம வாழ்க்கை, பட்டண வாழ்க்கை, இவைகளில் எது உயர்ந்தது; சென்னை நகரத்தை எப்படி 'அழகிய சென்னை'யாக்குவது; காதல் கல்யாணம், பெற்ருேர்கள் செய்து வைக்கும் கல்யாணம் இவைகளில் எது சிறந்தது — இவைகள்தான் அந்த மூன்று விஷயங்கள். இவைகளில் எதையாவது ஒன்றைப் பற்றிப் பேசலாம். மூன்று பிரமுகர்கள் நடுவர்களாக இருந்து சிறந்த பேச்சாளர்கள் யார் என்பதைத் தேர்ந்தெடுப்பார்கள்.

ரவி மேடை மீது தோன்றியதும் கூட்டத்திலிருந்து கரகோஷம் எழுந்தது. கம்பீரமாக எல்லோரையும் ஒரு பார்வை பார்த்தான் ரவி. ராதா முதல் வரிசையில் உட்கார்ந்திருப்பதையும் அவன் கவனிக்கத் தவறவில்லை.

''சகோதர சகோதரிகளே,

கரவொலி எழுப்பி என்னை வரவேற்றீர்கள். நன்றி. நான்தான் கடைசிப் பேச்சாளன் என்ற மகிழ்ச்சியால் எழுந்த கைதட்டலாகவும் இருக்கலாம்....''

உடனே 'கொல்'லென்ற சிரிப்பொலியும் மீண்டும் கை தட்டலும். ரவி அப்போது ராதாவின் முகத்தைத்தான் கவனித்தான். முகம் மலர்ந்து முத்துப் பல் வரிசை பளிச்சிட அவள் சிரித்துக் கொண்டிருந்தாள். ஆயிரம் பேரின் கையொலியை விட அந்த மலர்ப் புன்னகை அவன் உடலில் புளகம் பாய்ச்சியது.



அவன்: ''புகாரிக்குப் போனு கண்ணை மூடிக் கிட்டுத்தான் சாப்பிடுவேன்!''

இவன்: ''ஏண்டா...?''

அவன்: ''புலால் வகைகளைக் கண்ணெடுத்தும் பார்க்கக் கூடாதுன்னு எங்க அப்பாவின் கண்டிப்பான உத்தரவு!'' - உ. ராஜாஜி

ரவி தொடர்ந்தான்: ''எங்களுக்குப் பேசுவதற்காக இன்று மூன்று விஷயங்கள் கொடுக்கப்பட்டிருப்பதை நீங்கள் அறிவீர்களோ என்னவோ....''

மேடையில் வீற்றிருந்த நிர்வாகி ஒருவர் அங்கே கரும்பலகையில் அந்த மூன்று விஷயங்களும் எழுதப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டினுர்.

''ஓஹோ... ஆனல் இந்த மூன்று விஷயங்களில் கிராம வாழ்க்கை பட்டண வாழ்க்கையைப் பற்றியோ, சென்னை நகரை அழகாக்குவது பற்றியோ எனக்கு முன்பு பேசியவர்களில் யாருமே பேசியிருக்க மாட்டார்கள் என்று எனக்கு நிச்சயம் தெரியும்....''

லேசாகச் சிரிப்பொலி படர்ந்தது அவையில்.

ரவி மேலும் சொன்னன்: ''காதல் என்கிற விஷயம் இருக்கும்போது இளம் தலைமுறையினராகிய நாம், அதை விட்டு விட்டு மற்ற விஷயங்களில் கவனம் செலுத்துவோம் என்று நிர்வாகிகள் எப்படி எதிர்பார்த்தார்களோ எனக்குத் தெரியவில்லை....''

மீண்டும் பலத்த கைதட்டல். சிரிப்பு ஆரவாரம்.

அவையில் நிசப்தம் ஏற்பட்டதும் ரவி மேலே பேசத் தொடங்கினன். காதலைப் பற்றி ஆங்கிலத்திலும், தமிழிலும் பழைய இலக்கியங்களிலிருந்தும் நவீன இலக்கியங்களிலிருந்தும் பல மேற்கோள்கள் எடுத்துச் சொல்லி, காதல் என்பது என்ன என்று விவரித்தான். காதலுக்கும் காமத்துக்கும் உள்ள வேறுபாட்டை விளக்கினன். பழந்தமிழ் நாட்டில் வழக்கில் இருந்து வந்த பல விவாக முறைகளை விளக்கி, கடைசியாக ''ஆகவே, காதலித்துக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமா, கல்யாணம் செய்து கொண்ட பின் காதலிக்க வேண்டுமா என்பதல்ல முக்கியம். கடைசி வரை, கணவனும் மனைவியும் இருவரும் கட்டையில் ஏறும்வரை காதல் அவர்கள் வாழ்க்கையில் நிலவ வேண்டும் என்பதுதான் முக்கியம். முறை எது என்பது அல்ல பிரதானம். பயன்தான் நாம் சிந்திக்க வேண்டியது. காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டு, கல்யாணமாகி

இரண்டு வருடங்களில் விவாகரத்துக்கோரும் முறை நமக்கு வேண்டாம். பெற்றோர்களின் வற்புறுத்தலுக்காக மணம் செய்துகொண்டு கட்டிய மனைவியைப் பிறகு கண் கலங்க வைத்துவிட்டு வேறெங்கோ காதலை நாடி ஓடும் முறையும் வேண்டாம்., குற்றமோ குணமோ இந்த முறைகளில் இல்லை. நமது மனப் பக்குவத்தில்தான் இருக்கிறது. அந்த மனப் பக்குவத்தை வளர்த்துக் கொள்ளுவோம்'' என்று கூறி முடித்ததும் படபடவெனப் புளியம் பழம் உதிர்வது போல மண்டபமெங்கும் கரவொலி காதை நிறைத்தது.

நடுவர்கள் கூடி ஆலோசித்தார்கள். பத்து நிமிடங்களுக்குள் போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டன. முதல் பரிசுக்குரியவன் ரவி என்று அறிவித்ததும் அதை ஆமோதிப்பது போல் குழுமியிருந்தோர் பலத்த கைதட்டல் செய்தனர். இரண்டாவது மூன்றாவது பரிசு பெற்றவர்களின் பெயரும் அறிவிக்கப்பட்டன. ராதாவுக்குப் பரிசு எதும் கிடைக்கவில்லை.

மாணவர்கள் கும்பல் ரவியைச் சூழ்ந்து கொண்டு கை குலுக்கியும் முதுகில் தட்டிக் கொடுத்தும் இறுக அணைத்துக் கொண்டும் பலவாறாகத் தத்தம் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டனர். ரவி அந்தப் பாராட்டுகளில் சிக்கித் திணறிப் போய்விட்டான் என்றே கூற வேண்டும்.

ரவியைச் சுற்றியிருந்த கும்பல்கள் சிறிது குறைந்ததும் ராதா அவனை நெருங்கினாள்.

''ஹார்ட்டி கங்க்ராட்ஸ்!''

''தாங்க்யூ வெரிமச் ராதா. நான்தான் உங்கள் பேச்சைக் கேட்க முடியாமல் போய் விட்டது.''

''யூ ஹேவ் நாட் வாஸ்ட் மச்'' என்று அவன் முன்பு கூறிய வார்த்தைகளையே திருப்பிச் சொல்லி ராதா சிரித்தாள்.

''போகலாமா?''என்று அருகில்நின்றிருந்த ராமு ரவியிடம் கேட்டான்.

''போக வேண்டியதுதான்'' என்று அங்கிருந்து மூவரும் நகர்ந்தனர்.

''நீங்க எந்த பஸ்லெ போகணும்?'' ரவி ராதாவைக் கேட்டான்.

''மைலாப்பூர்.''

''தட்ஸ் குட். நாங்களும் மயிலாப்பூர் தான். உங்க வீடு?''

''ராயப்பேட்டையிலே.''

''அப்ப ராயப்பேட்டை வரைக்கும் பேசிக் கொண்டே போகலாம்.''

''ஏன், அதுக்கப்புறமும் பேசலாம், நீங்க மனசு வைச்சா. நீங்க என் வீட்டுக்கு வரணும். ஐ வில் இன்ட்ரட்யூஸ் யூ டு மை ஃபாதர். ஹி வில் பி வெரி க்ளாட் டு மீட் யூ'' என்றாள் ராதா.

''இன்விடேஷன் ரவிக்கு மட்டும்தானா?'' என்று அருகிலிருந்த ராமு வேடிக்கையாகக் கேட்டான்.

''ஐ எம் சாரி ராமு. நான் உன்னை ராதாவுக்கு இன்ட்ரட்யூஸ் பண்ண மறந்தே போயிட்டேன்'' என்று கூறி ரவி ராமுவை அவளுக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

ராதா அவனையும் தன் வீட்டுக்கு வரும்படி அழைத்தாள். ஆனால் ராமு இங்கிதம் தெரிந்தவன். அவளது மனப்பூர்வமான அழைப்பு ரவிக்கு மட்டும்தான் என்று அவனுக்குத் தெரியாதா? மரியாதைக்காக அவனையும் அழைக்கிறாள். அதை அறிந்து கொண்டு ராமு தான் அவசரமாக வீட்டுக்குப் போக வேண்டும் என்று சொல்லி ராயப் பேட்டையில் இறங்காமலே போய்விட்டான்.

ரவி அன்று ராதாவின் வீட்டில் வெகு நேரம் தங்கினான். அங்கேயே சாப்பிட்டான். ராதாவின் தகப்பனார் குப்புசுவாமியின் சுபாவம் அவனுக்குக் கொஞ்சம் பழகுவதற்குள்ளாகவே பிடித்து விட்டது. ராதா தன்னுடன் சகஜமாகப்பேசிப் பழகியதையோ முதல் சந்திப்பிலேயே தன்னை வீட்டுக்கு அழைத்து வந்ததைப் பற்றியோ வேறு யாராவதாக இருந்தால் தவறாகத்தான் நினைத்திருப்பார்கள். குப்புஸ்வாமிக்கு ராதாவின் நடத்தையில் தவறென்றும் தோன்றவே இல்லை.

பேச்சு வாக்கில் ராதா குப்புஸ்வாமியின் முதல் மனைவியின் ஒரே பெண் என்பதையும், இப்பொழுது அவர்கள் வீட்டில் அவரது இரண்டாவது மனைவியும் அவளுக்குப் பிறந்த மூன்று பெண்களும், இரண்டு ஆண்களும் இருக்கிறார்கள் என்பதையும் அறிந்து கொண்டான். ராதா ஐந்து வயதுப் பெண்ணாக இருந்தபோதே தாயை இழந்துவிட்டதனால் குப்புசுவாமிக்கு அவள் மீது அளவு கடந்த வாஞ்சை என்பதையும் தெரிந்து கொண்டான்.

இரவு அவர்களிடமிருந்து அவன் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டபோது மணி பத்தரைக்கு மேல் ஆகிவிட்டிருந்தது. அன்று அவன் மனம் எவ்வளவு மகிழ்ச்சியால் நிறைந்திருந்தது!

''இங்கியேஉட்கார்ந்துக்கலாமா? இன்னும் கொஞ்சம் தள்ளிப் போகலாமா?'' என்று ராதா கேட்டதும்தான் ரவி தன் நினைவுகளின் சுழியிலிருந்து விடுபட்டு வெளி வந்தான். கடற் கரை மணலில் தானும் ராதாவும் நின்று கொண்டிருப்பதை உணர்ந்தான்.

''இங்கேயே உட்காரலாம்'' என்றான்.

(தொடரும்)

அவள் : ஓவர்டைம் வேலை செய்து உடம்பைக் கெடுத்துக்கிடுறார்டி என் கணவர்!

இவள் : என் கணவர் அதைவிட மோசம்! ஓவர் டேட் வேலை செய்து உடம்பைக் கெடுத்துக் கிடுறார்... பிப்ரவரி மாதத்தில் மட்டும் 31 நாள் வேலை செய்திருக்கிறார்னு பார்த்துக் கோயேன்!

— உ. ராஜாஜி



மொத்தப் பரிசுத் தொகையை ரூ. 2000லிருந்து இந்த ஆண்டு ரூ. 2500 ஆக உயர்த்தியுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். இதனை ஐந்தாகப் பிரித்து ஐந்து விதமான சிறு கதைகளுக்கு ஐந்து பரிசுகளை வழங்குகிறோம். ஒவ்வொரு பிரிவிலும் சிறந்த சிறுகதைக்கு ரூ. 500 பரிசு:

- சமூகச் சிறுகதை
- ஹாஸ்யச் சிறுகதை
- சரித்திரச் சிறுகதை
- விஞ்ஞானச் சிறுகதை
- மர்மச் சிறுகதை

என்று ஐந்து தலைப்புக்களில் சிறுகதைகளை வரவேற்கிறோம்.

பரிசு பெறும் கதைகள் தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு சிறுகதையும் ரூ. 100 சன்மானம் பெறும். இவற்றில் அறிமுக எழுத்தாளர்களுக்கு போனஸ் உண்டு.

- கதைகள் சொந்தக் கற்பனை என்ற உறுதிமொழி தேவை.

- அறிமுக எழுத்தாளர் எனில் இதுவரை எந்தப் பத்திரிகையிலும் எழுதியது இல்லை என்றும், போட்டி முடிவு அறிவிக்கப்படும்வரை எழுத மாட்டேன் எனவும் உறுதி மொழி தரவேண்டும்.

- நடுவர்கள் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

- முடிவு தேதி மே 31உ.

- உறையின் மேல் அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி என்று குறிப்பிடுதல் அவசியம்.

- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பிப் பெறப் போதிய அளவு தபால் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். தபால் தலைகளை மட்டும் இணைப்பதிலோ அல்லது பின்னால் தனியே அனுப்புவதிலோ பயனில்லை.

- கதைகள் கல்கியில் நான்கு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் இடையாது.

- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

- அமரர் கல்கி அவர்கள் நினைவாக ஆண்டுதோறும் நடக்கும் இந்தச் சிறு கதைப் போட்டியில் வழக்கம்போல் இந்த ஆண்டும் எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகமாகக் கலந்துகொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

ஆசிரியர், கல்கி, சென்னை–32

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி 1980



எளியோரைக் காத்து, அவர்களுக்கு உதவுங்கள்

ஹரிஜனங்களும் வேறு எளிய பிரிவினரும்
தாக்கப்படுதல் நமது சமூகத்துக்கு இழுக்காகும்.
இது நமது முன்னேற்றத்தை தடுக்கிறது.



இந்திய மரபை போற்றிப் பேணுவோம்.

நாம் எல்லோரும் ஓரினம்

DAVP/537

ஆறு பாங்குகள் அரசுடைமை

கே. ஸ்ரீனிவாசன்

முதலில் மத்திய அரசின் உடைமையாகி விட்ட ஆறு பாங்குகளைக் கவனிப்போம். இவைகளில் மூன்று தென் மாநிலத்தைச் சேர்ந்தவை. ஆந்திரா பாங்கு ஆந்திரப் பிரதேசத்திலும் கார்ப்பொரேஷன் பாங்கும், விஜயா பாங்கும். கர்நாடகத்திலும் இயங்கி வந்தவை. 1969-ல் அரசுடைமை யாக்கப்பட்ட 14 பாங்குகள் செய்த தவறுகளை நன்றாகக் கவனித்து அவைகளுக்குப் பரிகாரம் போல் இவை செயல்பட்டன.

அதாவது வாடிக்கைக் காரர்தான் எஜமான் (Customer is King) என்பது அவர்களுக்குக் குறிக்கோள். பாங்கில் பணம்போடவோ அல்லது எடுக்கவோ சென்றால் ஏதோ அமாவாசைப் பிச்சைக்காரன் வந்திருக்கிறான் என்பது போல முகத்தைச் சுளிக்காமல் சேவை. ஆகவே அவைகளின் டெபாஸிட் குவிந்ததுடன் அவை கடன்கள், சொத்து மேல் அட்வான்ஸ், விவசாயக் கடன், புது நிறுவனங்களுக்குப் பணம் கொடுத்து உதவியது வெகுவாகப் பாராட்டப்பட்டது. இந்தப் பக்கத்தில் பஞ்சாப் — ஸிந்த் பாங்க் கிராமப்புறங்களில் நல்ல பெயரைச் சம்பாதித்து விட்டது.

சுமார் ரூ. 18.5 கோடி மூலதனம் உள்ள பாங்குகள் ரூ. 2300 கோடி டெபாஸிட்களைக் கவர்ந்தன என்றால் அது காரணம் இல்லாமல் இருக்குமா?

டெபாஸிட் செய்ய வரும்போது ஆசார, உபசாரம் செய்து அதே ஆள் யாருக்காவது கடன் சிபாரிசு செய்ய வரும் பொழுது அவர் யார் என்று தெரியாதது போலவோ அல்லது பாங்கி விதிகளைத் தூக்கி, வந்தவர் முகத்தில் எறிவது போலவோ அவர்கள் நடந்து கொள்ளவில்லை.

14 பாங்குகளிடம் ரூ. 2800 கோடி டெபாஸிட்டுகள். இப்பொழுது அரசுடைமையான ஆறு பாங்குகளிடம் ரூ. 2300 கோடி டெபாஸிட்டுகள் என்றால் நிலைமை வெகு தெளிவாக இருக்கிறது. 10 வருடங்களுக்கு முன் இருந்த மதிப்பு இன்று ரூபாய்க்கு இல்லை என்பது உண்மை. அதில் பாதி அல்லது இன்னும் குறைவு என்று வைத்துக் கொண்டால் கூட இப்பொழுது அரசுடைமையான பாங்குகள் சக்கைப்போடு போட்டுள்ளன, என்பது தெளிவு.

ஆறு பாங்குகளை, இன்று உள்ள பொருளாதார நிலையில் அரசு மேற்கொள்வது அவசியமாகி விட்டது. அந்தப் பணத்தை அத்தியாவசிய உற்பத்திக்கு உபயோகப்படுத்தலாம். நோட்டடித்தால் பண வீக்கம்தான் உண்டாகும். அதே சமயம் ரூ. 2800 கோடி கடன் என்றால் உலக பாங்குகூட இல்லை என்று சொல்லும். காரணம் அவ்வளவு பெரிய தொகை.

அரசுடைமையாக்கப்பட்ட பாங்குகளுக்கு நஷ்ட ஈடு அல்லது மூலதன ஈடு சுமார் ரூ. 18.50 கோடி கொடுக்கப்படும். இதில் எந்த வித கஷ்டமும் இல்லை. இந்தப் பாங்குகள் நன்றாகச் செயல்பட்டது என்றேன். அதே சமயம் அவை செயல் பட்டதில் ஒரு குறைபாட்டையும் சொல்லத்தான் வேண்டும். இந்தப் பாங்குகள் மூலம் பருத்தி, சணல், புகையிலை மற்ற அத்தியாவசிய பண்டங்களை வாங்கி இருப்பில் வைத்து விலைவாசிகளைச் செப்பிடு வித்தை மாதிரி ஆட்டி வைத்தவர்கள் பலர். இவர்களில் சிலர் இந்த பாங்குத் தலைவர்களுக்கு நெருங்கியவர்கள். ஆதலால் முதல் காரியமாக இந்தப் பதுக்கல் விஷயத்தைக் கவனித்தால் பல துறைகளில் நன்மை பயக்கும்.

இதெல்லாம் சொன்ன பிறகு ஒரு அம்சத்தை மத்திய அரசு மறக்கக் கூடாது. இதை நிதிமந்திரி படித்தால் அவருக்கு ஒரு யோசனை. தகுந்த பாதுகாப்புகளுடன் ஒவ்வொரு மாவட்டத்திலும் பல்வேறு நகரங்களில் சிறிய தொகைகள் சேமித்துக் கணக்கு வைத்துக் கொள்ள நிதி அமைப்புகள் தேவை. அவை இருந்தால்தான் பெரிய பாங்குகள் பொறுப்புணர்வுடன் செயல்படும். தங்களுக்கு இதுவரை எந்த அலவன்ஸ் (படி) கிடைக்கவில்லை என்று ஆராய்ச்சி செய்து அதை அடைய நாடெங்கிலும் வேலை நிறுத்தம் நடத்துவது இன்று சர்வ சகஜமாகி விட்டது. இச் சமயங்களில் அவதிப்படுபவர்கள் சாமானிய சம்பளக்காரர்கள். பாங்கில் பணம் போடு என்று சொல்லிவிட்டுச் சரியான சமயத்தில் மௌனவிரதம் பிடிக்கும் வழக்கம் போகாது. அது இந்திய தொழிற்சங்க வல்லாயுதம். அதில் ஏன் ஏழைபாழைகள் அகப்பட்டுக் கொள்ள வேண்டும்?



இதை எழுதும் போது அமெரிக்காவிலும் மேற்கு ஜெர்மனியிலும் ஜப்பானிலும் போட்டா போட்டி வட்டி போர் நடக்கிறது. ஆறு மாதக் காலத்துக்கு அமெரிக்காவில் வட்டி என்ன தெரியுமா? பத்தொன்பதரை சதம்; ஆம் ஒன்பதரை அல்ல. இதற்குக் காரணங்கள் வேறு. இந்த வட்டி நிலைக்காது.

இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் அங்கு ஒரு குறிப்பிட்ட நிலைமையை சமாளிக்க வழக்கில் இல்லாத முறைகளை அனுஷ்டிக்கிறார்கள். பொருளாதார சட்டத்தையோ அல்லது விதிமுறைகளையோ மாற்ற முடியாத வேத வாக்காகக் கருதுவதில்லை. சமயம் வரும் பொழுது ஒரு அம்சத்தை விளக்குகிறேன்.

இப்படத்தின் சிறப்பு நடிகை லதா. கணவனால் கைவிடப்பட்ட நிலையில் எழுத்தாளரின் காதலுக்கு இலக்காகித் தப்பிக் கடைசியில் பலர் கூடிய சபையில் அந்த எழுத்தாளரையே கணவனாக ஏற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு, இறுதியில் அவன் பாதங்களில் உயிர் விடும் காட்சி மெய் சிலிர்க்க வைக்கிறது. மிக மிக உருக்கமாக நடித்து விட்டார். கட்டாயம் இப்படம் பெண்ணினத்தின் கண்களைப் பனிக்கச் செய்யும்.

கணவனால் கைவிடப்பட்ட மனைவியின் பாத்திரம் லதாவைக் கைவிட்டுவிடவில்லை.

'ரயில்' ராதிகா கொஞ்சம் நடிக்கவும் கற்க வேண்டும். எத்தனை நாளைக்குத்தான் மழலை மொழி பேசி; விதவிதமாக உடையுடுத்திப் படங்களில் 'பாவ்லா' செய்து கொண்டிருக்க முடியும்?

பெண் உள்ளங்களைப்புரிந்து கொள்வதில் எழுத்தாளர் பிரம்மா அசகாய சூரர். ஸ்ரீகாந்த் அந்தப் பாத்திரத்தில் நன்றாக சோபிக்கிறார். பேச்சை நிதானமாக, வார்த்தைக்கு வார்த்தை அழுத்தம் கொடுத்து இடைவெளி விட்டுப் பேசியே ஜமாய்த்திருக்கிறார். ரயில் ராதிகாவின் கருத்தைக் கவர்ந்த எழுத்தாளர் அவர். கரம் பற்றப் போகும் கணவனும் அவர்தான் என்று தவறாகப் புரிந்து கொண்டு ராதிகாவைப் பெற்றவள் திருமணத்துக்கு ஏற்பாடு செய்கிறாள். அந்தக் கட்டங்களில் லதா மனம் நெகிழ வைக்கிறார். ஆர். பட்டாபிராமன் படத்தை நன்றாக இயக்கி இருக்கிறார்.

லதாவின் கோழைக்கணவனாக நடிக்கும் ராமகிருஷ்ணா அந்தப் பாத்திரத்துக்குத் தகுந்தவர் தான். வசனங்கள் பேசுவதோடு சரி. யார் மனத்திலும் நிற்கவில்லை.

தனக்குக் காரியம் ஆக வேண்டும் என்றால் யார் காலிலேயும் விழத் தயார். அவரது பாதரட்சையைக் கூடத்தூக்கிக் கொள்ளத் தயார். இப்படி ஓர் அசட்டுப் பாத்திரம் இருந்தால் அதற்கு நம் சுதாகரை விட்டால் யார் இருக்கிறார்கள்? எந்த வித உணர்ச்சியும் இல்லாமல் அவரால் எப்படி நடிக்க முடிகிறது? ஆச்சரியம்தான்!

கலைமணியின் உரையாடல்கள் சிந்திக்க வைக்கின்றன.

டி. ராஜகோபாலின் வண்ண ஒளிப் பதிவு படத்தின் சிறப்பு அம்சம்.

நீரிலிருந்து பாலைப் பிரித்தெடுக்கும் சக்தி அன்னப் பறவைக்கு உண்டோ என்னவோ லதா — ஸ்ரீகாந்தின் நடிப்பாற்றலைப் பிரித்துப் பார்த்து மகிழும் திறமை நமக்குத் தேவை.

—கார்த்தன்



'மூன்று டஜன்களுக்கு அதிகமான கப்பல்களும் ஆயிரம் மனிதர்களும் இந்து மாதங்களாகக் கடலுக்கடியில் கோதி எடுத்த வண்ணம் இருக்கிறார்கள். 8400 அடி ஆழமுள்ள இந்தப் பகுதியில் தான் த்ரெஷ்ஷர் மூழ்கியிருக்கிறது!

அமெரிக்கக் கப்பற்படை காரியதரிசியின் அறிக்கை. (1963) (த்ரெஷ்ஷர் நியூக்ளியர் சப்மரின். கடலுக்குள் மறைந்ததை ஒட்டி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பிரசித்தமானவை)

18

பால்மர்ஸன் கண்களுக்குப் பனிச்சிட்டது என்ன?

படகை நேரே கரையோரம் செலுத்திச் சென்றார்.

அலை அலம்ப, படகு, கரையில் மோதியது

பாதி உயிரில் முனகும் எலிஸாவை எடுத்துக் கரையில் படுக்க வைத்தார்.

அடுத்தது தம் மகளின் சவப் பெட்டியை எடுத்தார்.

கடைசியில் தாம் கொண்டுவந்த பெட்டியையும் அப்புறப் படுத்தினார்.

எல்லாம் கரை ஏறியதும் அந்தப் படகை முத்த மிட்டார்

மண்டியிட்டுக் கோபுரத்தை நோக்கி நன்றி செலுத்தினார்.

கோவிலில் கர்ப்பக்கிருகத்தில் வைக்கப்பட்ட அகண்ட ஜோதிதான் கடலுள் வீசி அவர் கண்ணுக்குப் பட்டது என்பது பால்மர்ஸனுக்குத் தெரியாது.

இனி தெரியவும் போவதில்லை.

அவர் மட்டும் அந்த வெளிச்சத்தைத் தெய்வ அருள் என்று நம்பினார்.

கரையின் மேலே மேலே ஏறி, மெள்ள எலிஸாவை ஒரு மேட்டில் படுக்க வைத்தார்.

அடுத்து இரு பெட்டிகளை மேலே ஒவ்வொன்றாகக் கொண்டு போய்ப் பார்த்தபோது,

எலிஸாவின் கண்கள் சொருகிக் கொண்டிருந்தன.

அருகில் உட்கார்ந்தார். அவள் தலையைத் தம் மடி மீது எடுத்து வைத்தார்.

-எலிஸா! என்று ஈனமாக அவர் அழைக்கும் வேளையில், அவள் கண்களை மூடினாள்.

மூக்கையும் கண்ணையும் மூடி மாஸ்க் போட்டு ஸ்நார்கல் சொருகி, காலில் செதில் சொருகி, நீர் மட்டத்திற்குச் சற்றே அடியில் நீந்தும்போது ஒரே சிரிப்பும் கும்மாளமும் நுரைத்தன.

ராம்சந்த் வாத்தியாராகிக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

தன்னுடைய அனுபவத்தை விட சம்பகா நீந்தும் பாடங்களை ஏற்றுக் கொள்வது ஒரே வேடிக்கையாக இருந்தது மல்லிகைக்கு.

அவள் அந்த ஸ்விம் ஸூட்டுக்குள் இறங்கி, தனது பெரும்பாலான தேகத்தை வெளிப் புறத்துக்குத் திறந்தபோது, மாஸ்கில் முகத்தை மறைத்துக் கண்ணைக் கொட்ட விழித்தபோது.

காலை பலமாக அடித்து, செதிலைத் தண்ணீரோடு விட்டபோது,

ஸ்நார்க்கல் குழாய் வழியாக மூச்சு விடுவதில் தண்ணீரைக் குடித்துத் தும்மிய போது,

எல்லாமே அவர்கள் இருவருக்கும் அழகான விநோதங்கள்.

கனிநாகலாபுரம் சமுத்திர ஓரங்களில் அலை அதிகமில்லாத உப்பங்கழிகளில் அவர்கள் முதல் பாடங்களைக் கற்றுக் கொண்டார்கள்.

ஏற்கனவே நீந்தத் தெரிந்ததால் புதுப் பாடங்கள் பூப்போல எளிதாக வந்தன.


ஆழமில்லா இடங்களில் நீந்திய பிறகு ஆழங்களைத் தேடிச் சென்றார்கள்.

சம்பகாவுக்கு மேலும் மேலும் புதிய உலகங்கள் திறந்து கொண்டிருந்தன.

முதலில் ஆரம்பக் கூச்சங்கள் போன பிறகு; இரண்டு துண்டு நீச்சல் துணிகளைத் தரித்து, மீதி உடம்புகளை வெளிக் காட்டுவது எவ்வளவு சுலபமாகப் போய்விட்டது!

எவ்வளவு இயல்பாகவும் போய்விட்டது?

மாஸ்க் போட்டுக் கண்ணாடி வழியாகத் தண்ணீருக்குள் பார்த்ததும் சின்ன மீன்கள் கூட எவ்வளவு பருமனாகத் தெரிந்தன!



எவ்வளவு அருகில் தெரிந்தன! கையை நீட்டிப் பிடிக்கப் போனால்தான் அவை எட்டத்தில் இருப்பது புலனாகியது.

—குட், சம்பகா! நீ பெரிய டைவர் ஆகி விடுவே! என்றான் ராம்சந்த் ஒரு நாள்.

எல்லோரும் கடற்கரையில் நீண்ட நேர நீச்சலுக்குப் பிறகு பிஸ்கட்டும் காப்பியும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

—நாம்ப எப்போ காரியத்தில் இறங்கறோம்? என்றாள் சம்பகா!

—அவ்வளவு தூரம் வந்தாச்சா? நாளைக்கு இறங்கறோம்; என்றான் ராம்சந்த்.

டம்ளரை இரண்டு மடக்கில் அரவாக்கி வைத்துவிட்டு, —ஆனா சம்பகா? நீ முதல்லே போகல்லே! நாங்க ரெண்டு பேரும் போறோம். நீ படகில் இருந்து வெளிப்புறத்தைக் கவனிச்சுக்கணும்.

—ஓ. சரி! என்றாள் சம்பகா.

சிரித்தான் ராம்சந்த்.

—நங்கூரம் பிடிச்சுக்கிட்டிருக்கிற வரைக்கும் எல்லாம் சரிதான்.

—பிடிப்பு விட்டுடுமா? என்று கலவரத்தோடு கேட்டாள் சம்பகா.

—சங்கிலி அறுந்து போச்சுன்னா?

—போகுமா!

—போகும்....; பயப்படாதே! நான் என்ன செய்யணும்னு எல்லாம் சொல்லித் தரேன்.

மறு நாள் காலையில் படகு ரூபாவில் ஏறி அந்த 79.51 நீர்க்கத்தை அடைந்து நங்கூரம் பாய்ச்சினார்கள்.

எக்கோ ஸவுண்டரில் பார்த்து, ஆழம் அறுபத்திரண்டு அடி என்றான் ராம்சந்த்.

அவனும் மல்லிக்கும் ஒரு முழு நீள டைவிங் சூட் அணிந்து முதுகில் அக்வாலங்குகளைத் தரித்திருந்தார்கள்.

—இறங்கலாமா? என்று அவசரத்துடன் கேட்டான் மல்லிக்.

—இன்னும் ஒரு விஷயம் பாக்கி, என்றார் ராம்சந்த்.

—என்னது? என்றான் மல்லிக்.

"அடுத்தபடியாகக் குடும்ப நலம் பற்றி கு. க. அதிகாரி குசேலர் அவர்கள் இரண்டொரு வார்த்தை சொல்வார். ஒரிரு வார்த்தைகளே போதுமே என்று நிறுத்திக் கொள்வார். இரண்டு வார்த்தைகளுக்குமேல் பேசவே மாட்டார் என்று கூறி அவரைப் பேச அழைக்கிறேன்!"



—தண்ணிக்குள் நாம்ப பேசறது எப்படி?

—பேசணுமா?

—சந்தர்ப்பம் வரும்! ஒரு ஆபத்து ஒரு அவசரம்!....

—அதுக்கு ஏதாவது கருவி இருக்கா?

—கருவி நம்ப கைதான். இதப் பாரு. கைக் கட்டை விரலை மேலே நோக்கிக் காண்பிச்சா மேலே போப்போறேன்னு அர்த்தம். கீழே நோக்கிக் காண்பிச்சா கீழே! கட்டை விரலை மட்டும் அகற்றி மணிக்கட்டையை அப்படியும் இப்படியும் ஆட்டினா ஏதோ சரியில்லேன்னு அர்த்தம். முஷ்டி மடக்கி புஜத்தை ஆட்டினா எனக்கு உதவி தேவைன்னு அர்த்தம்...

சிக்னல் செய்து பழகிய பிறகு, சரி, இறங்க வேண்டியதுதான் என்றான் ராம்சந்த்.

கடவுளைத் தியானித்து, டைவிங் பிளாட்பாரத்துக்குச் சென்று ஏணியில் இறங்கி நீருள் அமிழ்ந்தான். அவன் மேலே கொப்புளங்களாக வந்து சிதறின.

மல்லிக் அந்தப் பரந்த சமுத்திரத்தை ஒரு முறை பார்த்தான். நரம்புகளில் சில்லிடும் உணர்ச்சி பரவியது.

அலைகளின் நீல ஒளிகள் அவனை அழைப்பதாக இருந்தாலும், அவற்றின் ஆழங்களுக்குள் எண்ணற்ற ஆபத்துக்கள் மலிந்திருக்கும் என்று யோசித்தான் அவன்.

வானம் ஒரு வெண் பச்சை விரிப்பு, கடலோ பரந்து போய் பூமி விளிம்புகளைக் காட்டுவது போல் வட்டம் போடுகிறது. அதில் ஒரு சின்ன நீர் வாத்துப் போல் படகு மிதப்பது, மனித இனத்தின் பலவீனத்தையும், இயற்கையின் மகத்தான சக்தியையும் எவ்வளவு தெளிவாகக் காட்டியது.

—இறங்கலியா? என்றாள் சம்பகா.

மல்லிக் திரும்பியபோது அவள் அவனைப் பார்த்து புன்னகை செய்தாள்.

ஆச்சரியத்தில் —ஏது, நீயே இறங்கிடுவே போல இருக்கே! என்றான் மல்லிக்.

—நிச்சயம் இறங்குவேன். கடலுக்குள்ளே வந்து பார்க்கணும் போல இருக்கு! கடலுக்குள் ஜாலியை நானே முதலில் பார்க்கணும் போல இருக்கு. நீங்கதான் என்னை வரவேண்டாம் என்கிறீங்க!

மல்லிக்கிற்கு அவள் ஊக்கமான பேச்சு மகிழ்ச்சி அளித்தது. —அடுத்த முறை நீயும் வரலாம், சம்பகா! என்று சொல்லி, பிளாட்பாரம் சென்று இரும்பு ஏணி வழியாகக் கீழே இறங்கினான்.

அமிழு முன் படகின் விளாப்புறத்தைப் பிடித்து மீண்டும் ஒரு முறை சம்பகாவைப் பார்த்தான்.

—குட்லக் என்றாள் அவள்.

நீருள் அந்தக் கணமே அமிழ்ந்தான் அவன்.

சில அடிகள் தூரம் வரை சம்பகாவின் முகம் அவனுடன் மிதந்து வந்தது.

பிறகு எல்லாம் பச்சை நிறமாக மாறியது.

அந்தத் திமர் நிசப்தம் அவனைப் பிரமிக்க வைத்தது. கிட்டத்தட்ட சமுத்திரம் ஒரு மௌனக் கடல் என்பது தெரிந்தது.

ஓசைகள் சீக்கிரம் ஒடுங்கிவிடுகின்றன.



நேர்மையைப் பருமை செய்த...

நுண்மையான ஒன்றை பருமனாக முடியுமா?

முடியும் என்கிறான் கம்பன்!

'நேர்மையைப் பருமை செய்த நிறை நறுங் கூந்தல் நீத்தம்' என்று சீதையின் அளக பாரத்தை அனுமனுக்கு வர்ணிக்கிறான் ராமன். அது மட்டுமா?

அடாடா! இப்படி யெல்லாமும் பெண்களின் கேசத்தை வர்ணிக்க முடியுமா என்று அதிசயிக்க வைக்கும் விதமாக நிறையவே சொல்கிறான்!

காரினைக் கழித்துக் கட்டி, கள்ளிறொடு ஆவி காட்டி
பேர் இருட் பிழம்பு தோய்த்து, நெறி உறீஇ, பிறங்கு கற்றைச்
சோர்குழல் தொகுதி என்று சும்மை செய்தனையது அம்மா!—
நேர்மையைப் பருமை செய்த நிறைநறுங் கூந்தல் நீத்தம்!

[கழித்து - வெட்டி; ஆவி - நறும்புகை; நெறிவு - வளைவு; நேர்மை - நுண்மை]

தலைக்கு ஊற்றிக் குளித்துவிட்டு, மங்கலகரமான மஞ்சள்நிறத்தில் எடுப்பான சேலை உடுத்தி, கூந்தலை ஆற்றியபடி அமர்ந்திருக்கும் குமாரி ஸ்ரீதேவியை இவ்விதம் மேலட்டையில் பார்க்கும்போது, கம்பனை அறிந்தோர்க்கு மேற்படி கவிதை நினைவு வருவது இயல்பேயல்லவா?

வண்ணப்படம் எடுத்தவர்: என். பிரபாகர்

வெளி உலக வெளிச்சம் கூட நீரில் வடி கட்டப்பட்டு, சன்னமான கனவுகள் போல் உள்ளே ஆடின.

அது அதிசயமாக இருந்தது.

பத்தாவது அடியில் அவனுக்காக ராம்சந்த் காத்திருந்தான்.

—ஓ.கே. என்பதற்காகச் சமிக்ஞை செய்தான் ராம்சந்த்.

விரலில் ஓ வடிவம் காட்டி ஓகே என்றான் மல்லிக்.

இறங்க இறங்கத் திகில். உடம்பில் பரபரப்பு. செதிலை மெள்ளத் துழாவி ராம்சந்த் சொன்ன பாடத்தை நினைவில் வைத்தவாறே இறங்கினான்.

கடல் இப்போது கரும் பச்சையாகத் தெரிந்தது. கடல் பாசிகள், மெல்லிய சவ்வு போன்ற உயிரினங்கள் எங்கும் மிதந்தன. பார்வையின் தூரம் பல அடிகளுக்கு மேல் தெரியவில்லை.

ராம்சந்த் நின்றபோது, மல்லிக் தன் கையில் கட்டியிருந்த டெப்த் காஜைப் பார்த்தான். 20 அடி காண்பித்தது. மெள்ள கடல் ஆழத்தின் அழுத்தம் அவன் உடலை லேசாகத் துவட்டி விடுவதை உணர்ந்தான். அண்டர் வாட்டர் வாட்சைப்பார்த்தபோது, பத்தே கால் மணியை மினு மினுத்துக் காட்டியது.

ராம்சந்த் யோசிப்பது போல் நின்றான்.

பிறகு டார்ச் அவன் கையில் மின்ன, நாலா திசைகளையும் வெளிச்சம் பாய்ச்சிப் பார்த்தான்.

அங்கே என்று கையைக் காட்டி இருவரும் செதிலடித்துக் கீழே சென்றார்கள்.

முதுகில் கட்டிய 1800 லிட்டர் சிலிண்டர் காற்றை அவர்களுக்குத் தகுந்த அழுத்தத்தில் வழங்கிக் கொண்டிருக்க வாயால் மூச்சு விட்டு, நீரையக் கொப்புளங்களை விடுதலை செய்தவாறே இறங்கினான்.

நாற்பதாவது அடி தாண்டும் போது, உள்ளே மேலும் இருட்டாயிற்று.

தூக்கத்துள், அல்லது சொப்பனத்துள் இறங்குவது போல் இருந்தது.

மஞ்சள் தலை மீன்கள் கூட்டங்களாக அவர்களைக் கடந்து போயின.

ஆக்டோபஸ்கள் கையில் துழாவிச் சென்றன.

பிளாங்க்டன் உயிரினங்கள் எங்கும் பரவியிருந்தன.

இப்போதுதான் மல்லிக்கிற்குப் பயம் ஏற்பட்டது. அறுபத்திரண்டு அடி ஆழம் என்றானே, ராம்சந்த்! அதள பாதாளத்துக்குப் போவது போல் இருக்கிறதே! தரையே வராதா? ஒருவேளை கடல்களுக்குத் தரையே கிடையாதா?

திடீரென்று ராம்சந்த் பிடித்து வந்த டார்ச் அணைய, அதை அடுத்து அதிர்ச்சியான ஒரு அலை அவனை வந்து முட்டுவது தெரிந்தது.

என்னதாக இருக்கும் என்று நினைக்கும் போது,

அவன் தோள்புறத்தில் அடி ஒன்று விழுந்தது.

சம்பந்தசாமி அந்த லாஞ்சில் ஏறியதும் அது புறப்பட்டது. கனிநாகலாபுரம் உப்பங்கழியின் வாய்க்கால் ஒன்றில், கவிந்து விழும் மரக் கிளைகளின் மறைவில் இருந்தது அந்தப் படகு.

பட் பட் என்று சத்தத்துடன் கால்வாயில் பெரிய வரிகளை இட்டுக் கொண்டு அது செல்ல,

—எங்கேடா, எங்கே பார்த்தீங்க? என்று அதட்டலைப் போட்டார் சம்பந்தசாமி.

—கடல்லே ஸார், காலேலே பார்த்தோம். லாஞ்ச்தான். இப்படி நம்ப கரைப் பக்கம் வந்து போச்சு.

—யாரு? என்று நெற்றியில் கையை வைத்தார் சம்பந்தசாமி. —மல்காட் ஆளா இருப்பானு? சொல்லாமப் புரியாம வர மாட்டானே! வேறே எவனு இருக்கும்?

அவரது லாஞ்ச் சின்னது. கடத்தலுக்கு அதிகம் உபயோகப்படுவது. கரையில் ஏற்றி, படுதாவால் மூடினால், அது மறைந்துவிடும்.

கால்வாய் உப்பங்கழியில் கொண்டு சேர்த்தது. கழியின் கிழக்குப்புறம் வெள்ளிச் செதில்களாகத் தகதகத்தது.

சம்பந்தசாமி ஒயின் பிரியர். ஷம்பைன் கையில் வைத்துக் கொண்டு அந்த உப்பங் கழியில் கோடு கிழித்தவாறு பிரயாண மானார்.

லாஞ்ச் போன வழி வெள்ளை மினுப்புடன் கொந்தளித்தது.

சீக்கிரம் கடலை அணுகினார்கள். வடக்கே திரும்பினார்கள். இரண்டு மைல் போனதும் அவருக்குப் பொறுமை போதவில்லை. —எங்கேடா, தடி ராமன்களா? என்றார்.

அவர்கள் இதோ, இதோ என்று சமாதானம் சொல்ல,

அவரும் திட்டிக் கொண்டே ஷம்பைனைக் குடிக்க,

கடைசியில் அதோ என்று ஒரு அடியாள் பரபரத்துச் சுட்டிக் காட்டினான்.

கிழக்கு தூரத்தில் தெரிவது என்ன? வெள்ளைப் பறவை, போலே! படகா! வேறு ஏதாவது?

சம்பந்தசாமி டம்ளரைக் கீழே வைத்தார். தோளில் தொங்கிய பைனாகுலர்ஸை எடுத்தார். கண்களில் அழுத்தமாகப் பொருத்திக் கீழ்த் திசையைப் பார்த்தார்.

பைனாகுலர்ஸை வைத்தவர் வைத்தவர் தான். அவர் பார்வையை அது உறிஞ்சி விட்டது போல் தோன்றியது. ஏகாக்கிரமாய் அப்படியே நிலைகுத்தி நின்றார்.

பிறகு திடீரென்று கருவியைக் கையில் எடுத்து, —நம்ப அர்ச்சகர் பொண் நிற்கிறாப் போல இருக்கு! என்றார்.

—எங்கே, என்றான் அடியாள்.

—அந்த லாஞ்சிலே.

—லாஞ்ச்தானா?

—ஆமாம், யாட்!

—அதுலே எப்படி அந்தப் பொண்ணு?

—அந்தப் பெண்தானா?

திரும்பவும் கருவியைக் கண்ணில் பொருத்திய சம்பந்தசாமி —நிச்சயம் அவள்தான் என்றார்.

—எவனாவது தள்ளிக்கிட்டுப் போய்ட்டானா?

—அந்தப் பொண்ணுக்கு எப்படி இவ்வளவு நாகரிகம் வந்துச்சு?

—அதானே கேக்கறேன்!

—நேரே அங்கே விடு.

அலைகள் நுனிகளில் ஏறி இறங்கி லாஞ்ச் ஒரு ஜந்துபோல் தத்தளித்துச் சென்றது.

(தொடரும்)

பூமி ஒரு மினி!

நட்சத்திர மண்டலம்-அம்புக்குறி சூரிய மண்டலம் இருக்கும் இடத்தைச் சுட்டுகிறது.



- சின்ன வடிவத்தை மினி என்கிறோம்.
- விரிந்து பரந்த இந்த உலகமே ஒரு மினிதான், நவகிரகங்களை உள்ளடக்கிய சூரிய மண்டலத்துடன் ஒப்பிடும் போது.
- சூரிய மண்டலமே மினிதான், சூரியமண்டலத்தை உள்ளடக்கிய நட்சத்திர மண்டலத்தை நோக்கும் போது.
- சூரியனைப் போன்று சிறிதும் பெரிதுமான சுமார் 100,000 மிலியன் நட்சத்திரங்கள் நட்சத்திர மண்டலத்தில் உள்ளன.
- சூரியனை மையமாகக் கொண்டு கிரகங்கள் அதனைச் சுற்றி வருவது போல் நட்சத்திர மண்டலத்தின் ஒரு மையத்தைச் சூரியன் உள்பட எல்லா நட்சத்திரங்களும் சுற்றி வருகின்றன.
- பூமியின் விட்டம் 7926 மைல்; சூரியனின் விட்டம் 860,000 மைல். நட்சத்திர மண்டலத்தின் விட்டம் 100,000 ஒளி ஆண்டுகள். ஓர் ஒளி ஆண்டு என்பது 5,880,000 மிலியன் மைல்கள்!
- இந்த நட்சத்திர மண்டலம் தவிர இதற்கும் அப்பால் வெளிப்புற நட்சத்திர மண்டலங்கள் உள்ளன. சூரியனைக் கிரகங்கள் சுற்றி வருவது போல நமது உள் நட்சத்திர மண்டலத்தை வெளி நட்சத்திர மண்டலங்கள் சுற்றி வருவதாகக் கருதலாம். இவை சுமார் 200,000 ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் உள்ளன.
- இதற்கும் அப்பால் 2 மிலியன் ஒளியாண்டு தூரத்தில் உள்ள நட்சத்திர மண்டலங்களை விஞ்ஞானிகள் அறிவர்.
- விஞ்ஞானம் கண்டுபிடித்துள்ள மிகத் தொலைவில் உள்ள பொருள் 3C-295 என்ற குறியீட்டைப் பெற்றுள்ளது. இது 5000 மிலியன் ஒளி யாண்டுகளுக்கு அப்பால் உள்ளது!
- இவ்வளவையும் ஒரு நியதியுடன் இயங்கச் செய்கிற இறைவன் சிருஷ்டியில் உலகம் ஒரு மினிதானே?

நட்சத்திர வடிவம்

பரிசுத் திட்டம்-2





இங்கு உள்ள துண்டங்களை ஜாக்கிரதையாக வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள். அவற்றை மேலும் பின்னப் படுத்தக் கூடாது. ஒரு வெள்ளைத் தாளில் ஒன்று சேர்த்து ஒட்டித் திரைப் பட நட்சத்திரத்தின் உருவை நீள் சதுரப் படமாகப் பின்னமின்றிக் காண முடிகிறதா பாருங்கள். பத்து கல்கி நேயர்கள் மட்டுமே அவ்வாறு காணமுடியும். அதிர்ஷ்டசாலிகளான அந்தப் பத்துப் பேருக்கும் தலா ரூ. 25 பரிசு உண்டு. தவிர அந்தத் திரைப்பட நட்சத்திரத்தின் கையெழுத்துடன் கூடிய புகைப்படமும் அனுப்பி வைக்கப்படும். முடிவு தேதியான மே பத்தொன்பதாம் தேதிக்குள் அனுப்பப்படும் உருவங்களே பரிசீலிக்கப்படும். உறையின் மேல் ''நட்சத்திர வடிவம்'' என்று குறிப்பிடவும். கடிதப் போக்குவரத்துக் கிடையாது. கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. உங்கள் விலாசத்தைத் தெளிவாக் ஒட்டப்பட்ட படத்தின் கீழே குறிப்பிட மறவாதீர்கள்!

ஆசிரியர் கல்கி, சென்னை-32



கடைசிபக்கம்

இன்றைக்கு என்ன கிழமை

கண்ணதாசன்

இந்திய ஜனநாயகத்தில் எத்தனையோ வாதங்கள் உண்டு.

முதலாளித்துவ வாதம்; ஜனநாயக வாதம் பொதுவுடைமை வாதம்; வகுப்பு வாதம்... முடக்கு வாதம்; இழுப்பு வாதத்தைத் தவிர அத்தனை வாதங்களும் இருக்கின்றன. ஆனால் எந்த வாதம் முன்னணியில் இருக்கிறது?

இவையெல்லாவற்றிலும் புகுந்து வேலை செய்யும் சந்தர்ப்பவாதம் — அது மட்டுமே முன்னணியில் நிற்கிறது.

வெள்ளிக்கிழமை, சோஷலிஸ்ட், சனிக்கிழமை, கன்சர்வேடிவ்; ஞாயிற்றுக்கிழமை, லிபரல் — நீ எப்போது எங்கே ஓடினால் என்ன? எப்போதுமே உன்னை வணக்கப்படுத்துவார்கள்! மீன் கிடைக்கவில்லையென்றால், தவளையைச் சாப்பிடும் மக்கள் இதையும் சகித்துக் கொள்வார்கள்.

முஸ்லிம்கள் ஆட்சிக்கு வந்தால், உருது படிப்பார்கள்! வெள்ளைக்காரன் வந்தால், ஆங்கிலம் படிப்பார்கள், சீனாக்காரனே வந்து விட்டால், சீன மொழியைக் கற்றுக் கொள்ளத் தவற மாட்டார்கள்.

நமது சமுதாயத்தில் ஏமாற்று வித்தைக்கு உச்சவரம்பு கிடையாது.

'திருடன்தான் நீதிபதி' என்று பெரிய மனிதன் சொல்லி விட்டால், அங்கேயும் பத்து வக்கீல்கள் கைகட்டி நிற்பார்கள்.

சாமான்களை ஏற்றத்தான் லாரிக்கு லைசன்ஸ் தரப்படுகிறது. அதில் மனிதனும் ஏறி விழுந்து சாகவில்லையா?

இதுதான் நியாயம் என்று வரையறுக்கப் பட்ட தருமங்கள், இந்தியாவில்தான் மிக அதிகம்.

அதையும் படித்து விட்டு எதையும் நியாயம் என்று நம்பும் ஜனங்கள்தான் இந்தியாவில் அதிகம்.

முட்டிக் கொண்ட ஆணும் பெண்ணும் கட்டிக் கொண்டால் குழந்தை பிறக்காதா என்ன?

நேற்றைய எதிரி இன்றைய நண்பன்.

இன்று நண்பன் ஆகும்போதே நாளை எப்படி எதிரியாவதென்றே திட்டமிட்டுக் கொண்டுதான் நண்பனாகிறான்.

ஓர் உதாரணத்தைக் கேளுங்கள்:

67-ல் கூட்டு சேர்ந்தவர்கள் 79-ல் விரோதிகள்; 71-ல் சேர்ந்தவர்கள் 77-ல் விரோதிகள்; 77-ல் சேர்ந்தவர்கள் 80-ல் விரோதிகள்!

நாளை எப்படியோ பகவானே!

இந்தியாவில் இரண்டு பேர் நண்பர்கள் என்று சொன்னால் நம்பாதீர்கள்; விரோதிகள் என்று. சொன்னால் நம்பாதீர்கள்!

'உலகம் நாடக மேடை; மனிதன் நடிகன்' என்று எவனோ சொன்னான்.

60 கோடி நடிகர்களைப் பெற்ற ஒரே நாடு இந்தியா!

இந்த நாடக மேடையை அமைத்தவர் காந்தி; திரையை இழுத்தவர் நேரு; ஒலி, ஒளி அமைப்பு பல்வேறு கட்சிகளிலிருந்தும் வாரிசு பாத்யதையாக வந்து கொண்டிருக்கிறது; நாம் எல்லோருமே நடிகர்கள்.

கோவலன் நாடகம் நடப்பதாக அறிவிக்கப்படும்; பாதி நாடகத்தில் இராமாயணம் ஆரம்பிக்கப்படும்; ஏனென்று கேட்காதீர்கள்! இது இந்தியாவின் தனியுடைமை!

ஜனநாயக சந்தையில் தினமும் விலை போய்க் கொண்டிருக்கும் ஆடு, மாடுகளையும், சுமார் ஆறாயிரம் பேர் மேய்த்துக் கொண்டு இருக்கிறார்கள்.

இனி 'கட்சி மாறி' என்று குற்றம் சாட்டுவதானால் ஒவ்வொருவரும் நிலைக் கண்ணாடியைப் பார்த்தே குற்றம் சாட்ட வேண்டியிருக்கும்.

நான் பிறந்த போது இந்தியா நன்றாகவே இருந்தது. என்னுடைய ஜாதகப் பலனோ என்னவோ, நான் மோசமான இந்தியாவிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

நாளை என் மக்கள், எந்த சந்தர்ப்பவாதத்தில் சிக்கிச் சீரழிவார்களோ எனக்குத் தெரியவில்லை.

இன்னும் 20 வருஷங்களில் கட்சிகளின் பெயர்கள் மாறி, ஒவ்வொரு கட்சிக்கும், 'வெள்ளிக்கிழமை கட்சி', 'சனிக்கிழமைக் கட்சி' என்று பெயர்கள் வரலாம். ஒவ்வொரு மனிதனும் தன் குழந்தைக்கு, 'சந்தர்ப்ப லட்சணம்' என்று பெயர் கொடுக்கலாம்!

'இந்தியாவுக்கு வரும் வெளிநாட்டு பிரயாணிகள், இந்தியாவையே ஒரு மிருகக் காட்சி சாலையாகக் காணலாம்.

இவ்வளவு அற்புதமான இந்தியாவைப் படைத்ததற்காக என் இறைவா! காலையில் உதயசூரியன் வரும் போது, எனது வலது கையினால் இரட்டை இலைகளைப்பிடுங்கி பூஜை நடத்துகிறேன்.



Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. Editor: K. Rajendran

REGISTERED No. M 4392
Registered as a Newspaper in Sri Lanka

